வெளியீடு 29-11-2002 Issued 29-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஏப்ரல் 17, 2002 – தொகுதி 21 – எண் 2**

**Wednesday the 17th April, 2002 – Volume 21 – No. 2**

*பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

17-4-2002

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் மறைவு 233-234

2. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 234-279

(ஆ) குறுகிய கால வினா 279-281

3. உரிமை மீறல் பிரச்சினை—

மாண்புமிகு முதலமைச்சர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினையில் 16-4-2002 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பிற்கு விளக்கம் 281-284

4. கவன ஈர்ப்பு—

(அ) சாத்தூர் பகுதிக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு 284-288

(ஆ) தோட்டத் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் குறைக்கப்பட்டிருப்பதால் எழுந்துள்ள பிரச்சினை 288-299

5. தகவல் கோரல்—

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 295, 297 300

பக்கங்கள்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 300-301

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 301-302

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 — 302-303

7. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 301

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆஇ) — 302

8. மானியக் கோரிக்கைகள், **2002-2003**, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 33—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—தொடர்ச்சி — 303-362

†(ஆ) கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை — 362-366

திரு. டி.கே. இராஜா — 303-310

திரு. வை. சிவபுண்ணியம் — 310-319

திரு. கா. பூ. முனுசாமி — 319-331





பக்கங்கள்

8. மானியக் கோரிக்கைகள், **2002-2003**, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

*திரு. ப. அரசன் — 331-337

திரு. லா. சந்தானம் — 337-342

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் — 342-358

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 366-368

D
V2113102
P02.21-2

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224492
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 4, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2033
## 2002 ஏப்ரல் 17, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*'தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னுஞ் செருக்கு'*

*பிறருக்கு உதவி புரியும் பெருமித உணர்வு, விடாமுயற்சி மேற்கொள்ளக்கூடிய உயர்ந்த இயல்புடையவர்களிடம் நிலை பெற்றிருக்கும்.*

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. அ. சாகுல் ஹமீது அவர்கள் 14-4-2002 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*திரு. சாகுல் ஹமீது அவர்கள் 1980-1984 ஆம் ஆண்டுகளில் கடையநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.*

*இம்முன்னாள் உறுப்பினரின் மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2002 ஏப்ரல் 17

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 140, திரு. எஸ். எம். பாலன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.

**140—**

### அணையின் அடைப்பு ஷட்டர்கள்

***6552—திரு. எஸ். எம். பாலன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதி, திருமங்கலம் கிராமத்தில் கலிங்கல் அணையின் வடிகாலின் அடைப்பு ஷட்டர்களைப் பெரியதாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினருடைய வினாவிற்குண்டான விடை.

(அ) ஷட்டர் பலகைகளைப் பெரிதாக மாற்றுவதற்கு அவசியம் இல்லை எனக் கருதப்படுகிறது.

(ஆ) கேள்வி எழாது.



2002 ஏப்ரல் 17]

**திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி தொடங்குகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதி, திருமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள கலிங்கல் அணையில் தற்போது இருக்கும் அடைப்பு ஷட்டரின் அகலம் 12 அடி உள்ளது. இந்த அணையின் மொத்த நீளம் 320 அடியாகும். மழை மற்றும் வெள்ளக் காலங்களில் இந்த 12 அடி அடைப்பு ஷட்டர்களைத் திறக்கும்போது தண்ணீர் வெளியேறுவது தாமதமாவதால் பல கிராமங்களில் வெள்ளம் பாதிக்கும் சூழ்நிலை இருந்து வருகிறது. அதோடு இந்த ஆற்றின்மீது ஒரு பாலம் அமைத்து அதன்மீது இந்தத் தடுப்பு ஷட்டர்களை மற்றும் ரெகுலேட்டர்களைப் பொருத்தினால் 10 கிராமங்களுக்குப் போக்குவரத்திற்கு வசதியாகவும் மற்றும் வெள்ளப் பாதிப்பு இல்லாமலும் செய்ய முடியும். எனவே, கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதி திருமங்கலம் கிராமத்தில் உள்ள கலிங்கல் அணைக்கட்டின் மேல் 22-11-1999 அன்று அதிகபட்ச வெள்ள நீர் சுமார் 4500 கன அடி சென்று உள்ளது. இந்த அணைக்கட்டில் இரண்டு மணற்போக்கிகள் அடைப்பு ஷட்டர்களுடன் உள்ளன. வெள்ளக்காலங்களில் இந்த ஷட்டர்கள் திறக்கப்பட்டு அணைக்கட்டின் மேல்புறத்தில் மணல் தேங்காமல் கீழ்ப்புறத்திற்குச் செல்ல வழி செய்யப்பட்டுள்ளது. மணற்போக்கிகள் போதுமான அளவில் இருப்பதால் இவற்றின் நீளத்தை அதிகரிக்கவும், ஷட்டர் பலகைகளைப் பெரிதாக மாற்றவும் அவசியம் ஏற்படவில்லை. இருப்பினும் பழுதுபட்டிருந்த ஷட்டர் கடந்த ஆண்டு ஏப்ரல் 2001-ல் புதுப்பிக்கப்பட்டு, புதிய ஷட்டர்கள் இரண்டு எண்ணிக்கை வடிவமைப்பில் அமைக்கப்பட்டு உள்ளன. மேலும் தற்சமயம் தண்ணீர் போகும் காலம் இல்லை. ஜூன் 12-க்கு மேல் காவிரியில் தண்ணீர் திறக்கும்போது நிர்ணயிக்கப்பட்ட தண்ணீர் அளவு இதன் வழியாகச் செல்லும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 141, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

141—

## விளையாட்டுத் திடல்

***403—திரு. எஸ். மகாலிங்கம் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவிநாசி தொகுதியில், இளைஞர்களுக்கான விளையாட்டுத் திடல் அமைக்க அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவிநாசி தொகுதியில் இந்த நடப்பாண்டில் இளைஞர்களுக்கான விளையாட்டுத் திடல் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். எட்டுத்திக்கும் புகழ்பெற்று இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராக விளங்கிக்கொண்டிருக்கும் எனது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நோக்கிச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த நமது கழக ஆட்சியில்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரடி கவனத்தின் மூலமாக சென்னையில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு மைதானங்கள் பல கட்டப்பட்டு தமிழகத்தில் உலக மற்றும் இந்திய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டதை நன்கு அறிவோம் என்பதைப் பெருமையுடன் இந்த அவைக்கு நினைவூட்டி விட்டு, விளையாட்டுத் துறையில் புதிய உத்வேகம் கொடுக்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சுமார் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வரும் அவிநாசி தொகுதியில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்த நடப்பு நிதியாண்டில் அரசு மூலம் விளையாட்டுத் திடல் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.





*முற்பகல் 10-05*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் சுமார் 30க்கும் மேல் நிறுவப்பட்டு இருக்கின்றன. இவற்றில் 10 மையங்கள்தான் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மற்ற மையங்கள் எல்லாம் அங்கு இருக்கும் இளைஞர்கள் சரியான முறையில் இன்னும் பயன்படுத்தாத நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றன. அதோடு அவிநாசி தொகுதியை உள்ளடக்கிய கோவையில் ஒரு வெளி விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு உள்ளது. அந்த விளையாட்டு அரங்கில் 8 தடகள பாதையுடன் கொண்ட 400 மீட்டர் தடகள ஓடுபாதையும், கால் பந்தாட்ட மைதானமும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இதில் மாணவர்கள் மட்டுமல்லாது, மற்றவர்களும்—இளைஞர்களும் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற வழிமுறையும் இருக்கிறது. ஆகவே முன்பு அமைக்கப்பட்டுள்ள இந்த வசதிகளையெல்லாம் பயன்படுத்தி இளைஞர்கள் தங்களுடைய விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இருக்கின்ற நிதி நிலை காரணமாக புதியதாக எதுவும் அமைக்கும் நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில், கைப்பந்து போட்டிகளும், கபடி போட்டிகளும் திருப்பூரில் ஆண்டுதோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வருகின்ற 28 ஆம் தேதி கூட அகில இந்திய அளவில் கைப்பந்துப் போட்டி திருப்பூரில் தொடங்கப்பட இருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு அதுமாதிரி போட்டிகளை நடத்துவதற்காக 10 இலட்சம் ரூபாய் முதல் 15 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து தற்காலிக Stadium அமைக்க வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய விளையாட்டுக் கழகங்கள் சார்பாக ஒரு புதிய Stadium அமைக்கின்ற முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த புதிய Stadium அமைப்பதற்கு அரசு, தக்க முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 17

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதியைப்பற்றித்தான் இப்போது கேள்வி. அவர் திருப்பூர் தொகுதியைப்பற்றிய கேள்வியைக் கேட்கின்றார். தனிக் கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம், இது அவிநாசி தொகுதிபற்றிய கேள்வி, உங்களுக்கே மனசாட்சி உறுத்துகிறதுபோல் இருக்கிறது, விட்டுவிடுங்கள்.

வினா எண் 142, திரு. என். ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**142—**

**மேல்நிலைப் பள்ளி**

***16256—திரு. என். ரங்கநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், தில்லையாடி அரசினர் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில் 2002-2003 இல் உயர்த்தப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, தில்லையாடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு இதுவரையில் எந்தக் கருத்துருவும் பெறப்படவில்லை. வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால் அரசினுடைய நிதி நிலைக்குட்பட்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். ரங்கநாதன்.

**திரு. என். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்குகிறேன். தமிழ்த் தாயை வணங்குகிறேன்.



2002 ஏப்ரல் 17]

தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவை வணங்குகிறேன்.

சுதந்திரப் போராட்டத் தியாகி தில்லையாடி வள்ளியம்மை, நாகப்பன் ஆகியோர், பிறந்து வளர்ந்த ஊரான தில்லையாடி முற்றிலும் ஆதிதிராவிடர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் முழுமையாக வசிக்கின்ற பின்தங்கிய பகுதியாகும். எனவே, தில்லையாடி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர வேண்டுமாய் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வதுடன், அதற்கான கருத்துரு விரைவிலேயே அனுப்பப்படும் என்பதையும் மிக்கப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தில்லையாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு சில நிபந்தனைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அதில் 2 இலட்சம் ரூபாய் பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்த வேண்டும். இதுவரை அவர்கள் செலுத்தவில்லை. 10 ஆம் வகுப்பில் 100 மாணவர்கள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்கின்றது. அங்கு 55 மாணவர்கள் இருக்கின்றார்கள். இடவசதி, கட்டட வசதியைப் பொறுத்தவரையில் 3 ஏக்கர் விளையாட்டுக்கு உட்பட நகர்ப்புறங்களுக்கும், கிராமப்புறங்களுக்கு 5 ஏக்கரும் இருக்க வேண்டும். ஆனால் அவ்விடத்தில் ஓர் ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. ஆகவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு விதித்துள்ள சில விதிமுறைகளுக்கு ஏற்ப அந்த வசதிகளைப் பெருக்கி கருத்துரு அனுப்பி வைத்தார்கள் என்றால் அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. பச்சைமால்.

**திரு. தா. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அரசு. . . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பச்சைமால், பூம்புகார் தொகுதி.

வினா எண் 143, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2002 ஏப்ரல் 17

143—

## கிளை நீதிமன்றம்

***15121—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் மாவட்டக் கிளை நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் மாவட்டக் கிளை நீதிமன்றம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சிவபெருமாள்.

**திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவை வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியிலே தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியிலே வ.உ. சிதம்பரம்பிள்ளை பிறந்த ஒட்டப்பிடாரம், 'வெள்ளையனே வெளியேறு' என்று வீர முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் ஆட்சி செய்த பாஞ்சாலங்குறிச்சி, வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த கட்டாலங்குளம், வாஞ்சிநாதன் உயிர் நீத்த மணியாச்சி, வீரன் சுந்தரலிங்கம் பிறந்த ஊர், இப்படி பல தியாகிகளை உள்ளடக்கிய, தமிழகத்தின் இரண்டாவது பெரிய தொகுதியான இந்தத் தொகுதியில் சென்ற ஐந்து ஆண்டு காலத்தில் பல பிரச்சினைகள் உருவாகி, ஏராளமான வழக்குகள் போடப்பட்டு, இன்று அங்குள்ள ஏழை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின மக்கள் தாங்கள் சம்பாதிக்கும் தொகையில் ஒரு பகுதியை வழக்குகளுக்குச் செலவு செய்கிறார்கள். அவர்கள் நீதிமன்றம் செல்ல வேண்டுமென்றால், 30, 35 கிலோமீட்டர் தூரமுள்ள தூத்துக்குடி, கோவில்பட்டி அல்லது விளாத்திகுளம் செல்ல வேண்டியுள்ளது. ஆகையினால், தியாகிகள் பெயரை உயர்வுபடுத்தியும், ஏழை, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட



2002 ஏப்ரல் 17]

மக்களின் அரசாக வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, ஒட்டப்பிடாரம் தொகுதியில் இனிவரும் நிதி ஆண்டிலாவது ஒரு கிளை நீதிமன்றம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மொத்தம் 17 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஒட்டப்பிடாரத்தின் உரிமையியல் வழக்குகள் தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், Criminal cases — குற்றவியல் வழக்குகள் — விளாத்திகுளம் மாவட்ட உரிமையியல் மற்றும் நடுவர் நீதிமன்றங்களிலும் விசாரிக்கப்படுகின்றன. கிலோமீட்டர் தூரத்தைப் பொறுத்தவரையிலே, Ottapidaram to Thoothukudi 25 k.m., அதேபோன்று Ottapidaram to Vilathikulam 39 k.m. இந்தக் குறுகிய தூரத்தை வைத்துப் பார்க்கும்போது, அவ்வளவு சிரமங்கள் வழக்காடுபவர்களுக்கு இருக்காது என்று நினைக்கின்றேன். அப்படி இருக்கின்றபட்சத்தில் அவர்களுக்குச் சிரமம் இருக்குமானால், எதிர்காலத்தில் நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு சிந்திக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதிய மாவட்டங்கள் தொடங்கப்பட்டு 5, 6 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு இன்னும் மாவட்ட நீதிமன்றங்கள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. எனவே, பொதுமக்களின் நன்மையைக் கருதி, புதியதாகத் தொடங்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்காடும் பொதுமக்கள் மற்றும் வழக்காடும் வழக்கறிஞர்கள் சங்கம் இவர்களுடைய கருத்துகளை உயர் நீதிமன்றம் பெற்று, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2002 ஏப்ரல் 17

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு, அதேபோல ஒட்டப்பிடாரம் போன்ற பகுதிகளில் குற்றவியல் நீதிமன்றங்களை வைக்க வேண்டுமென்று கருத்துருக்கள் ஏற்கெனவே அமைச்சரவையில் மற்ற இடங்களில் எல்லாம் பேசி முடிவு எடுக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, Registrar level -லிலேயே 10, 15 ஆண்டுகளாக கிடப்பில் போட்டு விடப்படுகின்றன. குறிப்பாக, பிரிக்கப்பட்ட மாவட்டமான திருவள்ளூர் போன்ற மாவட்டத்தை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் இதற்கான கருத்துரு போய் நெடுநாள் ஆகிவிட்டது. ஆனால், தேவையில்லாமல் சில நேரங்களிலே மாவட்ட நீதிமன்றங்களுக்கே வேலையில்லாமல் இருக்கிறபொழுது, Fast Track Courts என்று நிறைய இடங்களில் இப்போது ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த Fast Track Court-களைப் போன்றே இந்த குற்றவியல்—இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது Munsiff Court என்று சொன்னார்கள். உரிமையியல், Munsiff-*cum*-Magistrate Court என்று நீங்கள் ஒட்டப்பிடாரம் போன்ற பகுதிகளில் மாற்றி அமைத்துக் கொடுத்தாலும்கூட, குற்றவியல் வழக்குகளை அவர்களே கூட முடித்து விடலாம். அதற்கும் சரியான கருத்துரு உயர் நீதிமன்றத்திலே பெறமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய Registrar அவர்களை வரவழைத்துப் பேசி, எவையெவை இதுவரையில் நிலுவையில் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, இனி, Fast Track Courtகளையும் Magistrate Court level—ல் அமைக்க வேண்டும். மாவட்டந்தோறும், உருவாக்கப்பட்டிருக்கிற புதிய மாவட்டங்களுக்கும் Fast Track Court அமைப்பதைவிட regular Courtகளை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல காலம் தாழ்த்தி வழங்கப்படுகின்ற நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமமாகும். Justice delayed is justice denied என்று சொல்வார்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது; உரிய காலத்திலே உரிய நீதி வழங்கப்பட வேண்டும் என்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலே, 49 விரைவு நீதிமன்றங்கள் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டு, வேகமாக வழக்குகள் முடிவுபெற்று வருகின்றன. தற்போது, வழக்குகள் தேக்கத்தைப் பொறுத்த வரையில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 47,100 வழக்குகளும், அதேபோன்று சிறு



2002 ஏப்ரல் 17]

காரண நீதிமன்றத்தில் 44,323 வழக்குகளும், அதேபோன்று Civil, Criminal என்று மொத்த வழக்குகளைச் சேர்த்தால் 11,74,703 வழக்குகள் தேக்கமாக இருக்கின்றன. அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது, அலகாபாத் உயர் நீதிமன்றத்திலே மட்டும் கிட்டத்தட்ட 12 இலட்சம் வழக்குகள் தேக்கமாக இருக்கின்றன. நம்முடைய உயர் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், 11,74,703 வழக்குகள் இருக்கின்றன. இதிலே என்னவொரு பெரிய கருத்து என்றால், புதிய வழக்குகள் ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 1,14,000 வழக்குகள் வந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அதையும் நாம் கருத்திலே கொள்ள வேண்டும். எனவே அதற்காகத்தான் இப்போது விரைவு நீதிமன்றங்கள் அந்தந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வேகமான அளவில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஐந்தாண்டு காலத்தில் இப்போது ஏறக்குறைய இரண்டு ஆண்டு காலம் ஆகிவிட்டது. இன்னும் மூன்று ஆண்டு காலங்களிலே வழக்குகள் அனைத்தையும் பைசல் செய்துவிடுகின்ற ஒரு நிலைமை நிச்சயமாக உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே உயர் நீதிமன்றக் கிளை தொடங்குவதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கு அரசின் சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பரவலாக அங்கிருக்கிறவர்களிடையே அந்த நிதி போதுமானதாக இல்லை, சற்றுக் கூடுதலாக அரசு ஒதுக்கினால்தான் விரைவாக அந்தப் பணிகளைச் செயல்படுத்த முடியும் என்ற கருத்து இருக்கிறது. ஆகவே அமைச்சரவர்கள் அந்தக் கருத்துக்கு உறுதுணையாக நிதியை அதிகமாக ஒதுக்கித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து ஆலோசனை செய்து, நிதியை ஒதுக்கித் தர முன்வருவார்களா என்று தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஒரு

[2002 ஏப்ரல் 17

மாத காலத்திலேயே நீதித் துறைக்கு மட்டும் எட்டரை கோடி ரூபாய் அளவில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மதுரையிலே உயர் நீதிமன்றக் கிளை அமைப்பதற்கு ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே மேற்கொண்டு என்னவெல்லாம் செய்யலாம் என்பது குறித்து உயர் நீதிமன்றம் கருத்துகளைத் தெரிவித்தால், அந்தக் கருத்துகளின் அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதற்கு வேண்டிய அளவிற்கு ஆவன செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது Fast Track Courts அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். மிகப் பெரிய குற்றங்கள் நடைபெறுகின்ற நேரத்திலே, உடனடியாக, அந்தக் குறிப்பிட்ட குற்றங்களுக்கென்று தனியாக நீதிமன்றம் (Instant Court) அமைக்கப்பட்டு, உடனுக்குடன் தீர்ப்பு வழங்குவதற்கான திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உண்டா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் Instant coffee-யைப் போல, வழக்குகளையும் அதேபோன்று (சிரிப்பு) அந்தக் கோணத்தில் சொல்கிறார். வழக்குகள் என்பது எந்த அளவிற்கு விசாரித்து, தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன என்பது நம்முடைய ஞானசேகரன் போன்ற வழக்கறிஞர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். எனவே அதிலே அவசரத் தன்மையைக் காட்ட முடியாது. நியாயத்தினுடைய அடிப்படையிலே அந்தத் தன்மையைக் கருத்தில்கொண்டுதான் செயல்பட வேண்டுமென்கின்ற வகையிலே அந்தச் சூழ்நிலையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *144,* திரு. து. நெப்போலியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 17]

**144—**

**தூர் வாருதல்**

***7965—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம், அருள்மிகு தாமோதரப் பெருமாள் கோயில் தெப்பக் குளத்தைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம், அருள்மிகு தாமோதரப் பெருமாள் கோயில் தெப்பக் குளத்தில் தூர் வாரும் அளவிற்கு சேறு, சகதி இல்லை. எனவே தூர் வாரும் பிரச்சினை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், தூரே இல்லையாமே, எப்படி எடுப்பது? (சிரிப்பு)

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதிக்குட்பட்ட வில்லிவாக்கம் பகுதியிலே, வில்லிவாக்கம் பஸ் ஸ்டாண்ட் அருகிலுள்ள அருள்மிகு தாமோதரப் பெருமாள் கோயில் பற்றி ஏற்கெனவே 20 நாட்களுக்கு முன்பு நான் ஒரு வினா எழுப்பியிருந்தேன். கோபுரம் பழுதடைந்திருக்கிறது. அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருந்தேன். அதற்காக 11-1/2 இலட்சம் ரூபாய் நிதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காகத் தங்கள் வாயிலாக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அந்தக் கோயிலுக்கு உட்பட்ட தெப்பக்குளம் ஒன்று உள்ளது. 162 அடி நீளத்தில், 132 அடி அகலத்தில் 24 அடி ஆழத்தில் அந்தக் குளம் இருக்கிறது. சுமார் 8 கிரவுண்டில் இருக்கிறது. அதிலே கிட்டத்தட்ட 4 அடி ஆழம் இப்போது குறைந்திருக்கிறது. தூர் நிறைய இருக்கிறது. அசுத்தமாக இருக்கிறது. அதைத் தூர் வாரிக் கொடுத்தால், பயனுள்ளதாக இருக்கும். இப்பொழுது மழை நீர் சேகரிக்கும் திட்டத்தின் அடிப்படையில் குடிசைகளின்மீது பாலிதீன் பேப்பர் போட்டு மழை நீரைச் சேமிப்பதைப்போல, வீடுகளில் மொட்டை மாடிகளில் விழும் மழை நீரைக் குழாய்கள் மூலம்

சேமிப்பதைப்போல, ஏற்கெனவே அந்தப் பகுதியில் மழை பெய்வதால் அந்தக் குளத்தில் மழைத் தண்ணீர் விழுவதற்கு ஏதுவாகக் குழாய்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மழை நீரை அதிகமாகச் சேகரித்து அந்தப் பகுதியிலுள்ள மக்கள் திருவிழாக் காலங்களில் நீராடுவதற்கும், குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கும்போது குடிநீராகப் பயன்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்கும். அதற்காக சுமார் எட்டு இலட்சம் ரூபாய் செலவு செய்தால் அதை நிவர்த்தி செய்துவிடலாம். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் தொகுதியில் ஸ்ரீஅமர்தவல்லி சமேத அருள்மிகு சௌமிய தாமோதர பெருமாள் கோயில் என்பது முக்கிய கோயில். அக்கோயிலில் அருள்மிகு சௌமிய தாமோதர பெருமாள் மற்றும் ஸ்ரீ அமிர்தவல்லி ஆகியோர் முக்கிய தெய்வங்கள். அக்கோயில் சுமார் 600 ஆண்டுகளுக்கு முற்பட்டது. குளத்தின் பரப்பு சுமார் 8 கிரவுண்டு. நீராழி மண்டபம் மட்டும் அண்மையில் பழுது பார்க்கப்பட்டுள்ளது. தற்போது குளத்தில் சுமார் 4 அடி தண்ணீர் உள்ளது. சென்னை ரோட்டரி கிளப் உதவியுடன் குளத்தை மேலும் 1½ அடி ஆழப்படுத்தவும், உள்சுவர் அமைக்கவும் சுமார் 6½ இலட்சம் ரூபாய் செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு மழை நீரைச் சேகரிக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டி பல கோடிக்கணக்கான ரூபாயை இப்போது செலவழித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலையிலே அறநிலையத் துறையின் மூலம் இந்தக் குளங்களைத் தூர் வாரி ஆழப்படுத்தினால் மழை நீரைச் சேகரிக்க பெரும் வாய்ப்பு இருக்கும். அதை அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கை யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 145, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



**145—**

## புற நோயாளிகளுக்குக் கட்டடம்

***5749—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் புற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவிற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவையை அறிந்து நாகப்பட்டினம் இணை இயக்குநர் அவர்கள் அதற்கான முன்மொழிவை அரசுக்கு அனுப்பிவைக்கப் பணிக்கப்பட்டுள்ளார். முன்மொழிவு கிடைக்கப்பெற்றவுடன் அது குறித்து அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக் காலத்தில் மூன்று மருத்துவர்களுடன் செயல்பட்டு வந்த சீர்காழி அரசு மருத்துவமனைக்கு மேலும் இரண்டு மருத்துவர்களை நியமனம் செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் வணங்குகிறேன். எனது சீர்காழி தொகுதியில் சீர்காழி நகரத்தில் இயங்கிவரும் அரசு மருத்துவமனை சுமார் 50 வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட பழமையான ஓட்டுக் கட்டடமாகும். அந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து சீர்கெட்ட நிலையில் உள்ளது. குறிப்பாக இந்த மருத்துவமனைக்கு தாலுகா முழுவதிலுமிருந்து தினமும் சுமார் 1050 புற நோயாளிகள் சிகிச்சைக்காக வருகிறார்கள். புற நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கென தனியாகக் கட்டடம் கிடையாது

[2002 ஏப்ரல் 17

இட வசதி இல்லாததால் நோயாளிகள் வெளியே வெய்யிலில் காத்திருக்கும்படியான சூழ்நிலை உள்ளது. மழைக் காலங்களில் ஒட்டுக் கட்டடம் ஒழுகும் நிலையில் மிகவும் மோசமாக உள்ளது. ஆகவே, சீர்காழி அரசு மருத்துவமனைக்கு, புறநோயாளிகள் சிகிச்சை பெற வசதியாகத் தனியாக ஒரு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன். சீர்காழி அரசு மருத்துவமனையில் தினந்தோறும் 90 உள் நோயாளிகள், ஆண்கள், பெண்கள் என இருபாலரும் அனுமதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக, பெண்கள் படுக்கையறை வசதிக் கட்டடமானது 50 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டுள்ள ஒட்டுக் கட்டடம் இடிந்துவிழும் சூழ்நிலையில் உள்ளது. அதற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கும், ஆண்களுக்கு 100 படுக்கையறை வசதியுடன் கூடிய கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி அரசு மருத்துவமனையினுடைய கட்டடங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பழமையான கட்டடங்கள்தான். எனவே அவற்றைப் பராமரிப்பதற்காகத்தான் சென்ற ஆண்டு 2.85 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, அந்தப் பழைய கட்டடங்கள் ஓரளவுக்குப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சீர்காழி அரசு மருத்துவமனையில் தற்போது படுக்கைகளினுடைய எண்ணிகை 74 மட்டும்தான். ஆனால், தினந்தோறும் 95 உள்நோயாளிகள் அங்கே தங்கி, சிகிச்சை பெறுகிறார்கள். எனவே, கூடுதலாகப் படுக்கை வசதிகள் தேவை என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக ஆண்கள் சிகிச்சைப் பிரிவிற்குப் படுக்கை வசதி பற்றாக்குறை இருக்கிறது. எனவே, கூடுதலாக ஆண்கள் வார்டுக்கும், புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளுக்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி அளிக்கப்படும் என்று சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலே அறிவிக்கப்பட்டது. அப்படிச் செய்த அறிவிப்பிலே



2002 ஏப்ரல் 17]

என்னுடைய மன்னார்குடி தொகுதிக்குச் சுமார் 3 கோடி ரூபாய் செலவிலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 146, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**146—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்**

***9975—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடமதுரை ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தனையில் உதித்த உன்னதத் திட்டமான ஒன்றிய அளவில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை 30 படுக்கைகள் வசதி, ஆப்பரேஷன் தியேட்டர், எக்ஸ்ரே வசதி, ஆம்புலன்ஸ் வசதி, கூடுதலாக இரண்டு சிறப்பு டாக்டர்கள் போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டத்தின்கீழ் பழனி சுகாதார மாவட்டம், வட மதுரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வட மதுரை ஆரம்ப சுகாதார நிலையமும் இடம்பெற்றிருக்கிறது. வரும் ஆண்டில் அது தரம் உயர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் எனது தொகுதி வடமதுரை ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மேன்மைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி

அவர்கள் ஆணையிட்டதற்கு வேடசந்தூர் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அந்த அரசு மருத்துவமனையானது திண்டுக்கல்லிலிருந்து சென்னை வருகிற Bye pass சாலையிலே அமைந்திருக்கிறது. அந்த அரசு மருத்துவமனையை - விபத்துப் பகுதியாக அறிவித்து - விபத்து ஏற்படுகிற நோயாளிகளுக்கு, அடிபடுபவர்களுக்கு வைத்தியம் செய்வதற்கு வசதியாக விபத்து ஆஸ்பத்திரியாக அறிவிக்க வேண்டும். அவசர சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு அங்கு படுக்கை வசதி இருந்தாலும்கூட குடிநீர் வசதியும், கட்டட வசதியும் போதாமல் இருக்கிறது. அதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பேரவைத் தலைவர் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்படுகிறபோது அதற்குத் தேவையான கட்டடங்களும் கட்டிக் கொடுக்கப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கிற ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி அல்லது மருத்துவமனையாக இருந்தாலும் சரி, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் *50* கிலோ மீட்டருக்கு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே விபத்து சிகிச்சைப் பிரிவிற்கான வசதியை செய்து கொடுக்க வேண்டும் என்ற ஏற்பாடுகளை செய்யச் சொல்லி இருக்கிறார்கள். அந்த வகையிலே அந்த இடம் நெடுஞ்சாலையை ஒட்டி *50* கிலோ மீட்டர் தூரத்திலே இருக்குமேயானால் நிச்சயமாக அந்த விபத்து சிகிச்சைப் பிரிவும் அங்கே அமைப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவுபடுத்துவதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய வந்தவாசி தொகுதியிலே வளூர் என்கிற இடத்தில் தற்பொழுது நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வதைப்போல எல்லா infrastructure-ம் உள்ள ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. 28 படுக்கைகள் இருக்கின்றன. எக்ஸ்ரே கருவிகள் இருக்கின்றன. மருத்துவர்கள் தங்கி பணி செய்வதற்கான அவர்களுடைய





ஓய்வு அறை இருக்கிறது. எல்லா வசதிகளும் பெற்ற அந்த மருத்துவமனையில் மருத்துவர்களே இல்லாமல் அது பூட்டிக் கிடக்கிறது. மருத்துவமனைகளை விரிவுபடுத்துவதைப் பற்றி அரசாங்கம் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில் ஏற்கெனவே விரிவுப்படுத்தப்பட்டு மருத்துவர்கள் இல்லாமல் நல்ல நிலையில் இயங்க முடியாத மருத்துவமனைகளைக் கருத்திலே எடுத்துக்கொண்டு அங்கு மருத்துவர்களை அனுப்பி வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் புதிதாக நியமிக்கப்படுகிறபோது நிச்சயமாக அந்த இடங்களுக்கு நாங்கள் டாக்டர்களைப் பணியமர்த்தி வருகிறோம். சில இடங்களிலே பணியமர்த்தப்படுகிற மருத்துவர்கள் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல அவர்கள் சேருவதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த மருத்துவமனையில் டாக்டர்கள் பற்றாக்குறை இருப்பின் உடனடியாக அவற்றை நிரப்புவதற்குண்டான நடவடிக்கையை இந்த அரசு நிச்சயமாக எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *147*, திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**147—**

**விற்பனைக் கூடம்**

***2103—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பகண்டை கூட்டுரோடில் விவசாய விளைபொருள் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம்பற்றி அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2002 ஏப்ரல் 17

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, பகண்டை கூட்டுரோடு என்னுமிடத்தில் விற்பனைக் கூடம் தொடங்க போதிய வாய்ப்புகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

*(முற்பகல் 10-30)*

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பகண்டை கூட்ரோடு பகுதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள் தங்களுடைய விளைபொருள்களை அருகிலேயுள்ள சங்கராபுரம், மணலூர்பேட்டை, தியாகதுர்கம் போன்ற விளைபொருள் விற்பனைக் கூடங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டிய நிலையிலே இருக்கின்றார்கள். இந்த மூன்று பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லக்கூடிய விவசாயிகளுக்கு மையப் பகுதியாக இருப்பது இந்த பகண்டை கூட்டு சாலை. குறிப்பாக, இந்தப் பகண்டை கூட்டு சாலை போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத பகுதி. ஆகவே, அதைக் கருத்தில்கொண்டு இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அந்தப் பகுதியிலே அமைப்பதன் மூலம் வர்த்தக ரீதியாகவும் அதேபோல, வியாபார ரீதியாகவும் இந்தப் பகுதி உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைக் கருத்திலேகொண்டு, அரசு மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டிலே அந்த விற்பனைக் கூடத்தைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் தாலுகாவிலுள்ள பகண்டையிலிருந்து திருக்கோவிலூர் மற்றும் தியாகதுர்கம் விற்பனைக்கூடம் 20 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது. பகண்டையிலிருந்து சங்கராபுரம் விற்பனைக்கூடம் 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அந்த ஊரில் எடுக்கப்பட்ட கணக்கின்படி பெரிய இதர வியாபாரிகள் அதிகமாக அங்கு இல்லை. அங்கு வங்கி வசதியும் இல்லை. அஞ்சல் வசதியும் இல்லாத நிலையில் பக்கத்திலேயே 13 கிலோ மீட்டர் தூரத்தில் சங்கராபுரம் என்ற இடத்தில் விற்பனைக்கூடம் இருக்கின்ற காரணத்தினால் தற்போது அங்கு விற்பனைக்கூடம் அமைக்கின்ற சாத்தியம் இல்லை என்று தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2002 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**148—**

## ஆதிதிராவிடர்களுக்கு சிறப்புத் திட்டம்

***3639—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு சிறப்புத் திட்டத்தின்கீழ் சுடுகாடு கொட்டகையும், சாலையும் அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், தலித் மக்களுக்கு சிறப்புக்கூறு திட்டத்தின்கீழ், வன்கொடுமையிலேயிருந்து பாதுகாப்பதற்காக, ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பது போன்று, அவர்களுக்கெல்லாம் சுடுகாடு ஷெட்டுகளை கட்டிக் கொடுப்பதிலும் அரசு ஓர் இலக்கு நிர்ணயிக்க முன்வருமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் மயானம் மற்றும் மயானப் பாதைக்கு நிலம் கையகம் செய்ய ரூ.165 இலட்சமும் மயானப் பாதைகள் மேம்பாடு செய்வதற்கு ரூ.61 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் நிலம் கையகம் செய்யவும், பாதைகள் மேம்பாடு செய்யவும் ரூ.110 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தவும் பாதைகளைச் சீர் செய்யவும் ரூ.6.10 இலட்சம்

[2002 ஏப்ரல் 17

ஒதுக்கப்பட்டதில் ரூ.2.46 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டிற்கு இப்பணிகளுக்காக ரூ.116 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மயானம் மற்றும் மயானப் பாதைக்கு நிலம் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்களில் யாராவது ஒருவர் நிலம் கையகப்படுத்தக்கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தடையாணை பெற்றுவிடுவதால் அந்தப் பணி முழுவதும் நின்றுவிடுகிறது. நிலம் கையகப்படுத்துவதற்கான தொகையும் செலவு செய்ய முடியாமல் போய்விடுகிறது. எனவே, ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் செலவு செய்ய முடியவில்லை. பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் தலையிட்டு சுமுகமாக பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முன்வந்தால், மயானம் மற்றும் மயானப் பாதைகளுக்குக் கூடுதல் நிதிகளை ஒதுக்கி நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆய்ந்து சிந்திக்கும். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட அந்தக் கொட்டகை அமைக்கின்ற திட்டம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வி. ஏனென்று சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த ஆதிதிராவிடர்களுக்காக சுடுகாட்டுப் பாதைகள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி என்பது ஏதோ கடலிலே பெருங்காயம் கரைத்தது போன்றது. ஆதிதிராவிடர் நலத் துறையிலிருந்து, மத்திய அரசு கொடுக்கக்கூடிய, சிறப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கக்கூடிய நிதியை முழுவதும் பயன்படுத்தி இந்த நடப்பாண்டில் இத்தனை இடுகாட்டு ஷெட்டுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அரசு மீண்டும் பரிசீலிக்குமா? அப்படி பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதன் மூலமாக தற்பொழுது ஒடுக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்களுக்கு சுடுகாட்டு ஷெட்டிலேயாவது அவர்களுக்கு விடுதலை கிடைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு. மயானமும், அதற்கான பாதையும் முதலில் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. அப்படி அதற்காக நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு கடந்த 2001-2002 ஆம் ஆண்டிலே



2002 ஏப்ரல் 17]

ஒதுக்கப்பட்ட நிதி ரூ.165 லட்சம் கையகப்படுத்துவதற்கும், மேம்பாடு செய்வதற்கு ரூ.61 லட்சமும் ஆக ரூ.226 லட்சம் ஒதுக்கப்பட்டதில் ரூ.110 லட்சம் அளவுக்குத்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆக இப்படி ஒதுக்கப்பட்ட நிதியொதுக்கீடு முறையாக செலவு செய்யப்படாமல், அந்த முழுத் தொகையும் செலவழிக்கப்படாமல் போய் விடுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி ஒதுக்கப்படுகிற நிதிகளையெல்லாம் அந்தத் திட்டத்திற்கு நேரடியாக முழுத் தொகையும் செலவு செய்யப்பட வேண்டுமென்கிற அடிப்படையில் அதற்கான நிலங்களை கையகப்படுத்த அந்த நில உரிமையாளர்களை நேரடியாகச் சந்தித்து, முறையாகப் பேசித் தீர்ப்பதற்கு முன்வந்தால், கண்டிப்பாக அந்த நிதியை முழுமையாகச் செலவழிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். தேவையான இடங்களுக்கான நிதியொதுக்குவதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்கு சுடுகாடு அமைப்பதற்கும் கழிவறைகள் அமைப்பதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் எல்லாம் நிலம் கிடைப்பதிலே மிகவும் சிரமமான ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியிலேயும், அதேபோன்று மற்ற திட்டங்கள் வழியும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகிற நேரத்தில் நிலங்கள் கிடைப்பதற்குச் சிரமம் ஏற்படுவதனால் urgent clause-ஐ உபயோகப்படுத்தி நிலம் ஆர்ஜிதப்படுத்துவதற்கோ அல்லது இவர்களுடைய நலனைப் பாதுகாத்துக்கொள்வதற்கோ, தேவையானால் நிலுவையில் இருக்கிற சட்டங்களில் தகுந்த சட்டத் திருத்தங்கள் ஏற்படுத்தி ஆதிதிராவிடர்களுடைய இந்த அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை அரசே எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதேபோன்று, ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்யப்படாததால் அந்த அதிகாரிகள்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா? அல்லது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயானம் மற்றும் மயானப் பாதைக்கு நிலம்

[2002 ஏப்ரல் 17

கையகப்படுத்தும்போது, பல இடங்களில் பல உரிமையாளர்களிடம் இருந்து அந்த நிலம் கையகப்படுத்துவதற்கு அதை எடுக்கும் சமயத்தில் நில உரிமையாளர்கள் யாராவது ஒருவர் அந்த நிலத்தை கையகப்படுத்தக் கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, தடையாணை பெற்று விடுவதால், அந்தப் பணி முழுவதும் நின்று விடுகிறது. இப்படி பணி முழுவதும் நின்றுவிடுகிற காரணத்தால் அந்தத் தொகையை செலவு செய்ய முடியாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட இடங்களில் அந்த நில உரிமையாளர்களை, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களே நேரடியாகச் சந்தித்து பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முன் வந்தால் கண்டிப்பாக மயானத்திற்குத் தேவையான கூடுதல் நிதிகளை ஒதுக்கி நிறைவேற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்ந்து சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

**செல்வி சி. கனகதாரா:** இன்றைய தமிழகமே, நாளைய பாரதமே, இந்திய ஒருமைப்பாட்டின் இலட்சிய தீபமே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. நான் சார்ந்துள்ள பேரணாம்பட்டுத் தொகுதியானது, ஆதிதிராவிட மக்கள் மிகுதியாக வாழ்கின்ற பகுதியாகும். அந்தத் தொகுதியில் லாலாப்பேட்டை, கள்ளிப்பேட்டை என்கிற கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே சடலங்களைத் தூக்கிக் கொண்டு தலையின் மீது சுமந்து கொண்டு அங்கு சுடுகாட்டுப் பாதையிலே புதைப்பதற்குக்கூட இடம் இல்லாமல் மிகமிக மோசமான நிலைமையில் இருந்து வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு சுடுகாட்டு கொட்டகையை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அந்தத் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தி விரிவுபடுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயானத்திற்குத் தேவையான நிலம் எவ்வளவு என்று குறிப்பிட்ட இடத்தை அந்த நிலத்தின் உரிமையாளர்களிடமிருந்து கையகப்படுத்துவதற்கான திட்டத்திற்கு நிதி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த மயானத்திற்குத் தேவையான இடத்தைக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்



2002 ஏப்ரல் 17]

தெரிவிப்பாரேயானால் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு அதற்கான ஆயத்தப் பணிகளை ஆய்ந்து முடிக்க சிந்திக்கும்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செ. சுந்தராம்பாள்.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்ததியர், ஆதிதிராவிடர் மக்கள் இடுகாட்டிற்குச் செல்லும் பாதையை தனி நபர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு, அவற்றுக்கு நீதிமன்றத்தில் தடையாணை வாங்கிவிடுகிறார்கள். அவர்கள் தடையாணை வாங்குவதைத் தடுப்பதற்கு ஏதாவது சட்டம் இயற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தக்க விடை அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு இந்தச் சுடுகாட்டுச் சாலைகள் அமைத்துத் தரவேண்டியிருக்கிறது. நிலப் பிரச்சினைகள் எல்லாம் இங்கு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூபாய் 226 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது, செலவழிக்கப்படாத மீதம் உள்ள தொகையை நீலகிரி மாவட்டத்து ஆதிதிராவிட மக்களுக்குத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான விவரங்களை கொடுப்பார்களேயானால் தக்க நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஆதிதிராவிடர் மக்களுக்குச் சிறப்புத் திட்டத்தின்கீழ் சுடுகாட்டுக் கொட்டகையும், சாலையும் அமைக்கும் திட்டம் என்ற

வினாவையொட்டி, பல இடங்களில் சுடுகாடு இல்லையென்பதும், சுடுகாடு இருக்கிற இடங்களில் கொட்டகைகள் இல்லையென்பதும், சுடுகாட்டிற்கு தாழ்த்தப்பட்ட ஜனங்கள் சவத்தைக் கொண்டு செல்வதற்குக்கூட சில இடங்களிலே தடைகள் இருக்கின்றன என்பதும் மாநிலம் முழுவதும் இருக்கின்ற பிரச்சினை. இதன் மீது ஆதிதிராவிடர் நலத் துறை உரிய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய அரசு சமீபத்திலே அறிவித்துள்ள இந்தக் கழிவறைகள் கட்டுவது சம்பந்தமான பிரச்சினையிலே பல இடங்களில் ஆதிதிராவிடர் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் இந்தக் கழிவறைகள் கட்டுவதற்கு உயர் சாதி இந்துக்கள் மறுப்பு தெரிவிப்பதும், எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல தனி நபர்கள் சில குறிப்பிட்ட இடங்களின் மீது ஸ்டே வாங்குவதன் மூலமாக அவை கட்டமுடியாமல் நிறுத்தப்படுவதும் இருக்கிறது. ஆகவே, அரசினுடைய திட்டங்களை சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியின் மூலமாகச் செயல்படுத்துவதிலே இதுபோன்ற தடைகள் இருப்பதால் ஆதிதிராவிடர் நலத் துறை உரிய தலையீட்டைச் செலுத்தி அந்தப் பகுதி மக்களுக்கு இதுபோன்ற கழிவறைகளைக் கட்டுவதற்கும், இடுகாடு மற்றும் கொட்டகை கட்டுவதற்குமான சீரிய முயற்சியை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மயானம், அதற்கான பாதைகளைச் சில நில உரிமையாளர்கள் தடையாணைப் பெற்றுவிடுவதன் காரணமாக அந்தப் பணி செய்வதற்கும் தடையாக இருந்துவிடுகிறது. மயானத்திற்குச் செல்லக்கூடிய அந்த நேரத்திலும் அதற்குத் தடையாக இருந்துவிடுகிறது. இப்படி பல்வேறு இடங்களில் இருந்துகொண்டிருக்கிறது. இதையெல்லாம் உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்றுதான், கடந்த 5 ஆண்டுகாலமாக இப்படிப்பட்ட பிரச்சினைகளில் தலையிடாமல் கடந்த அரசு இருந்ததால், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், இப்படி எங்கு எல்லாம் தடையாணை இருக்கின்றது என்பதையெல்லாம் அறிந்து விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மாவின் அரசு விரைவாக நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல கழிவறைகள் கட்டுவதற்குச் சில இடங்களில், அந்த ஊரினுடைய பெரியவர்களே தடைகளைக் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட தடைகள் வருகின்ற





நேரங்களில், அந்த ஊரினுடைய பெரியவர்கள், ஊராட்சிமன்றத் தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், மாவட்ட கவுன்சிலர்கள் இப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு பிரதிநிதிகளை வைத்து, கூடிப் பேசவேண்டும். பெண்களுக்காகக் கட்டப்படுகிற கழிவறைகள் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கிறது. கண்டிப்பாக அதைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் அவர்களை அழைத்துப் பேசவேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கு முன்வந்து பேசித் தீர்த்து, அந்த இடம் இல்லையென்றால் மாற்று இடத்திலாவது கட்டுவதற்கு கண்டிப்பாக முயற்சி எடுப்பார்களேயானால் அதற்கான திட்டம் நிறைவேற்றப்படும். மாண்புமிகு அம்மாவின் அரசுக்குப் பெண்கள் மிகுந்த வரவேற்பைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பெண்கள் மூலமாகவே அப்படிப்பட்ட இடங்களைத் தேர்வு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்கின்ற காலத்திலேயே சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு என்பதை நிலைநிறுத்திக் காட்ட வேண்டும் என்று நாம் முயற்சி எடுத்து வருகின்றோம். செத்த பிணத்தை எரிப்பதிலேகூட இப்படி இரண்டு சுடுகாடுகள் இருப்பதையே நினைத்து நினைத்து அதற்காக வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்கின்ற நிலையை மாற்றி, ஒரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து நல்ல கருத்துதான். மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனேயே சாதி சமயத்திற்கு அப்பாற்பட்டு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்கின்ற நிலையில் இதையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களிலே சுடுகாட்டுக்கு நிலமே இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆதிதிராவிட மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் சுடுகாட்டு இடத்திற்கு மாத்திரம் அல்லாமல் சுடுகாட்டுக்குச் செல்வதற்கு, பிணத்தை எடுத்துச் செல்லக்கூடிய பாதை பிரச்சினை, மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதனால் பல்வேறு இடங்களில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைவதற்கான வாய்ப்பெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு கும்பகோணம் பக்கத்திலேகூட குடிதாங்கி என்ற கிராமத்திலே இரண்டு நாட்களாக சடலத்தை எடுத்துச் செல்ல முடியாமல் எங்களுடைய நிறுவனத் தலைவர், சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் அந்த ஆதிதிராவிடர் பிணத்தை இரண்டு நாட்கள் கழித்து தோளிலே சுமந்து சென்று, சமூக நீதிக்காக அந்தப் பிணத்தை எடுத்துச் சென்று அந்த மககளுக்கு உதவியாக இருந்தார்கள். இப்படி பல்வேறு இடங்களிலே பிரச்சினை இருக்கின்ற காரணத்தாலே, அந்த நிலத்தை கையகப்படுத்துகின்ற நேரத்திலே அரசு guideline value என்று சொல்லுகிறார்களே அது மிகக் குறைந்த தொகையாக இருக்கின்ற காரணத்தாலே நில உரிமையாளர்கள் நிலத்தைக் கொடுப்பதற்கு முன்வருவதில்லை. ஆகவே அரசு மதிப்பீடு மாத்திரம் அல்லாமல் அங்கே இருக்கக்கூடிய தனியார்கள் விற்கிறார்கள் வாங்குகிறார்கள். அந்த அடிப்படையிலே இதற்கு மாற்றிக்கொள்வதற்கு சில தடைகள் எல்லாம் இருக்கின்றன; அரசாணைகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தளர்த்தி எந்த வகையிலாவது - அரசு ஒதுக்கக்கூடிய நிதியை செலவழிக்காமல் திருப்பிச் செலுத்தக்கூடிய நிலை எல்லாம் ஏற்படுகின்ற இந்தக் காலத்திலே எப்பாடுபட்டாவது — கூடுதலாக விலை கொடுத்து வாங்கியாவது, அந்த சுடுகாட்டுப் பாதை, சுடுகாட்டு இடம் ஆதிதிராவிட மக்களுக்கு உடனடியாகச் சென்று சேருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் எங்கோ சில இடங்களில் தடைகள் இருக்கின்றன அவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். எந்த இடங்களில், இந்தத் தடைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.





கும்பகோணத்தில் ஏதோ பிரச்சினை என்று இங்கே அவையிலே தெரிவித்தார். ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்பட்டு இறப்பு நேரிட்டால் அங்குள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு கண்டிப்பாக சுமூக உணர்வு ஏற்பட்டு — நடைபாதை பிரச்சினையோ அல்லது எந்தவிதமான பிரச்சினையோ எழாது, எழுவதற்கு வாய்ப்பில்லை. ஆனால் வெளியூரில் இருந்து அந்தக் கிராமத்திற்கு புதிதாகக் குடியேறியவர்கள், அல்லது அந்த இடங்களுக்கு வெளியூரில் இருந்து வெளியாட்கள் வந்து, தேவை இல்லாத பிரச்சினைகளை உருவாக்குவதால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் சில இடங்களில் ஏற்படுகின்றன. அந்தப் பிரச்சினைகள் எல்லாம் இப்போது சுமுகமாக முடிக்கப்பட்டு உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், இந்த மாதிரி பிரச்சினைகள் இல்லாத அளவுக்கு அந்தக் கிராமங்களைச் சார்ந்த பெரியோர்களே ஒரு நல்ல முடிவுக்கு, ஒரு சுமுகமான முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த சுமுகமான பதிலோடு முடித்துவிடுவோம். வினா எண் *149*, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**149—**

## பேருந்து வழித்தடம்

***6458—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூரிலிருந்து சென்னை செல்வதற்கு புதிய பேருந்து வழித்தடம் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூரிலிருந்து சென்னை செல்வதற்கு புதிய பேருந்து வழித்தடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 ஏப்ரல் 17

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** எங்கள் அன்னையின் பராசக்தியின் அருள் வடிவாய் தோன்றி, 6 கோடி தமிழர்களின் காவல் தெய்வமாய் வாழ்ந்துவரும் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சி அமைந்தபோது எங்கள் உயிர் வந்ததம்மா! சதிகாரர்களின் சூழ்ச்சியால் பதவி இழந்தபோது எங்கள் உயிர் துடித்ததம்மா! எங்கள் தர்ம தேவதைக்கு நீதி கிடைத்தபோது எங்கள் உயிர் மீண்டதம்மா! 6 கோடி மக்களின் வாழ்வுக்காக தொண்டாற்றும் எங்கள் ஒப்பற்ற தாயை வணங்கி என் கேள்வியைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருப்போரூர் வரை நேரடியாகச் சென்றுவர பேருந்து இல்லை. அதனால் அங்கே உள்ள மக்களின் நலனைக் கருதி, திருப்போரூரிலிருந்து சென்னைக்கு நேரடியாகச் செல்ல வழித்தடம் செய்து தர அரசு ஆவன செய்யுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருப்போரூர் வழி கேளம்பாக்கம் தடத்தில், தடம் நீளம் 51 கிலோ மீட்டர். இந்த, சென்னை-திருப்போரூருக்கு நேரடியாகப் பேருந்து வசதியில்லை என்றாலும்கூட, அங்கிருக்கின்ற பயணிகள் அந்தப் பகுதியிலேயும் பகுதி பகுதியாக இயக்கப்படுகின்ற பேருந்து வசதிகளைப் பெற்று வருகிறார்கள். இதிலே கேளம்பாக்கம் வரையிலான 43 கிலோமீட்டர் தூரத்திற்கு சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்தும் மாநகரப் போக்குவரத்துக் கழகம் தேவையான பேருந்துகளை இயக்குகிறது. அதேபோல, கேளம்பாக்கத்திலிருந்து திருப்போரூர் வரையிலான 8 கிலோமீட்டர் தூரத்திற்கு காஞ்சிபுரம் போக்குவரத்துக் கழகம் தினசரி 38 நடைகள் இத்தடத்தின் வழியாக இயக்குகிறது. இத்தடத்திலுள்ள பெரும்பாலான தொழிற்சாலைகள் சென்னைக்கும் கேளம்பாக்கத்திற்கும் இடையில்தான் அமைந்திருக்கின்றன என்ற காரணத்தினால் இந்தப் பகுதிகளிலே போதுமான அளவுக்கு போக்குவரத்துக் கழகங்கள் மூலமாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோல, கேளம்பாக்கத்திற்கும்



2002 ஏப்ரல் 17]

திருப்போரூருக்கும் இடையிலுள்ள போக்குவரத்திற்கு தற்போது காஞ்சிபுரம் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் நடைகளே போதுமானதாகும். எனவே, சென்னை - திருப்போரூர் தடத்தில் நேரடியாகப் பயணம் செய்யும் பயணிகள் அதிக அளவில், போதுமான அளவில் இருக்கமாட்டார்கள் என்பதாலும், போதிய வருவாயும் இருக்காது என்று கருதப்படுவதாலும் நேரடி திருப்போரூர்-சென்னை என்ற புதிய வழித் தடத்தை இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்கூட அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்றிருந்தபோது நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை வலியுறுத்தி, பொதுமக்களும் அங்கு கோரிக்கை மனுக்களை அளித்திருந்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மக்களுடைய கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற அரசு. இரண்டுக்கும் இடையிலே ஏற்படுகின்ற கட்டண உயர்வைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். போதுமான வசதி இருக்கிறது. பேருந்து வசதிகள் இருந்தாலும்கூட, நகரப் பேருந்துகளில் செல்வதால் கட்டணம் குறைகிறது; புறநகர்ப் பேருந்துகளில் செல்வதால் கட்டணம் கூடுகிறது என்ற கருத்தினைச் சொல்லி எங்களுக்கு நகரப் பேருந்து வசதி வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள். அதைப்பற்றியும், இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சிந்தித்து அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முயற்சித்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூரிலுள்ள அருள்மிகு முருகன் ஆலயத்திற்கு கிருத்திகை போன்ற விசேஷ நாட்களில் அதிக அளவில் பக்தர்கள் தரிசனத்திற்கு வருவது அனைவரும் அறிந்ததே. பக்தர்களின் வசதிக்காக, இப்படி விசேஷ நாட்களில் சிறப்புப் பேருந்துகளை இயக்க அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு வழிபாடு மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலங்களில் எல்லாம் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் குறிப்பிட்டதுபோல திருப்போரூர் பகுதியிலும் நடைபெறுகின்ற விழாக் காலங்களிலே சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன; இன்னும் இயக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி, இது திருப்போரூர், திருப்பூர் இல்லை.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகரமான திருப்பூர் நகரில் அதிகமான......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. வினா எண் 150, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**150—**

### போக்குவரத்துக் கிளைக் கழகம்

***7859—டாக்டர் பி. வள்ளல் பெருமான் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் வட்டத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

(இ) கொள்ளிடக்கரையில் வல்லம்படுகையிலிருந்து (சிதம்பரம்) அணைக்கரை (கீழ் அணை) வரையில் அரசுப் பேருந்து இயக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



2002 ஏப்ரல் 17]

(ஆ) காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகக் கிளை ஆரம்பிக்க போதிய நிதி ஆதாரமும், தகுந்த நிலமும் கிடைக்கப்பெற்றபின்தான் தொடங்க் இயலும்.

(இ) கொள்ளிடக்கரையில் வல்லம்படுகையிலிருந்து சிதம்பரம் அணைக்கரை (கீழ் அணை) வரையில் அரசுப் பேருந்து விடும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோயில் வட்டம், கடலூர் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். பல நூற்றுக்கணக்கான கிராமங்கள், உட்கிராமங்கள் உள்ள பகுதியாகும். காட்டுமன்னார் கோயில் நகரத்தின் அருகிலே தஞ்சை, திருச்சி, பெரம்பலூர் மாவட்டப் பகுதிகள் அமைந்துள்ளன. தற்சமயம் கும்பகோணத்திலிருந்து இரண்டு பேருந்துகளும், சென்னையிலிருந்து இரண்டு பேருந்துகளும், காட்டுமன்னார் கோயில் பகுதியைச் சுற்றி 20 பேருந்துகளுமாக 24 பேருந்துகள் இயங்கி வருகின்றன. அவற்றை உள்ளடக்கி ஒரு பேருந்து கிளைக் கழகத்தைத் தொடங்கினால் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். 6 ஆண்டுகளுக்கு முன்பாக அரசு அதிகாரிகள் வந்து நேரிலே பார்த்து இடத்தை கையகப்படுத்துவதற்கான முயற்சி செய்தார்கள். அதை ஏனோ அவர்கள் கைவிட்டு விட்டார்கள். அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மீண்டும் மறுபரிசீலனை செய்து அங்கு புதிதாக பஸ் டெப்போ தொடங்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அதைப்போல கொள்ளிடக் கரையிலிருந்து கீழ் அணைப் பகுதி கொள்ளிடத்தினுடைய வட கரையிலே கொள்ளிடத்திலிருந்து சிதம்பரம் வட்டம் வல்லம்படுகை இணைக்கின்ற சாலை 20 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இந்தச் சாலையிலே இப்போது சாலையை அகலப்படுத்தி, தார்ச் சாலைகள் போடுவதற்காக ஏற்பாடு செய்து வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கொள்ளிடக் கரையினுடைய வட கரையிலே சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அங்கே 4 உயர்நிலைப் பள்ளிகளும் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. எனவே, விவசாயிகளும், கல்லூரி மாணவர்களும் பயன்படுத்துகின்ற வகையிலே அரசுப் போக்குவரத்து

[2002 ஏப்ரல் 17

பேருந்து இயக்கினால் உதவியாக இருக்கும். தற்சமயம் மருத்துவ வசதிக்குச் செல்ல வேண்டும் என்றால்கூட பல மைல்கள் சுற்றி சிதம்பரத்திற்கும் காட்டுமன்னார்குடிக்கும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அரசுப் போக்குவரத்தை இயக்கினால் உதவியாக இருக்கும். அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் சார்பாக காட்டுமன்னார்கோயில் கிளை ஆரம்பிக்க கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அந்த முடிவு கைவிடப்படவில்லை. கொள்கையளவிலே முடிவு செய்யப்பட்டு அதற்குப் போதிய நிதியாதாரமும், நிலமும் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் அந்தப் பணி சற்று காலதாமதமாகி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கிளை ஆரம்பிப்பதற்கு நிலம் கிடைப்பதற்கும் அந்த நிலம் கையகப்படுத்தப்படுவதற்கும், அங்கே ஏதேனும் முயற்சி எடுத்தால் அரசு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய வழித்தடத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் குறிப்பிட்டிருக்கிற அந்தக் கிராமத்தினுடைய வழித்தடங்களில் சாலை வசதி போதுமானதாக இல்லை. அது குறுகிய சாலை என்பதாலும், போக்குவரத்திற்குத் தகுதியற்றது என்பதாலும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் N.O.C. கொடுக்கவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலையை அகலப்படுத்துகின்ற பணியும், மேம்படுத்துகின்ற பணியும் நடைபெற்று வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சாலை வேலை முழுமையாக முடிந்தவுடன், அந்த வழித்தடத்திலே அரசுப் பேருந்துகள் இயக்குவதற்கு வேண்டிய வழிவகைகளைப் பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 151, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 17]

**151—**

**சிப்காட் தொழில் பூங்கா**

***3103—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாற்றில் சிப்காட் தொழிற் பூங்கா அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செய்யாறு வட்டத்தில் ஒரு தொழிற் பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய செய்யாறு தொகுதியில் காஞ்சிபுரத்தை அடுத்து எட்டாவது கிலோமீட்டரிலே அல்லது காஞ்சிபுரம் வந்தவாசி சாலையிலே ஏறக்குறைய 800 ஏக்கரிலிருந்து 1000 ஏக்கர் வரை கடந்த கால ஆட்சியிலே அதாவது 1991-லேயிருந்து 1996 வரையிலான நம்முடைய தற்போதைய முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே மாங்கல் கூட்டுரோடு என்ற இடத்திலே நிலம் கையகப்படுத்தப்பட்டது. கையகப்படுத்தப்பட்டு நில உரிமையாளர்களுக்குச் சேர வேண்டிய தொகை எல்லாம் முழுவதுமாக செலுத்திவிட்டு, இப்போது அரசு பொறுப்பிலே அந்த நிலம் இருக்கிறது. அங்கே சிப்காட் வளாகம் அமைப்பதாக விளம்பரப் பலகையும் வைக்கப்பட்டிருக்கிறது. இப்போதுகூட முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஆயிரம் ஏக்கர் நிலத்திலே மகளிர் சுய தொழில் தொடங்குவதற்காக தொழிற் பூங்காக்கள் என்று சொன்னார்கள். புதிய நிலத்தைக் கையகப்படுத்தி தொழில் தொடங்குவதைவிட அந்தப் பகுதியிலே தொடங்குவது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினாலே அந்த மாங்கல்

கூட்டுரோடு அருகிலே கையகப்படுத்தப்பட்ட நிலத்திலே இந்தத் தொழிற் பூங்கா அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் ரீதியாக பின்தங்கிய மாவட்டமான திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாறில் ஒரு புதிய தொழிற் பூங்கா அமைக்கும் நோக்கத்தில் செய்யாறு வட்டத்தில் மாங்கல் அதனை அடுத்துள்ள கிராமங்களில் இதனை அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 1995-ல் திட்டமிட்டு, முடிவு எடுத்தது. இதன் அடிப்படையில் மொத்தம் சுமார் 517 ஏக்கர் நிலம் நில ஆர்ஜித சட்டத்தின் வாயிலாகவும் மற்றும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் அமைக்கத் தேவையான.......

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** தொழிற்சாலைகள் அமைப்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி விரைவில் விற்பனை செய்யும் நோக்கில் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் செய்யாறு நதியிலிருந்து 4.5 இலட்சம் லிட்டர் தண்ணீர் நாள் ஒன்றுக்கு விநியோகம் செய்வதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உறுதிப்படுத்தியுள்ளது. ஆயினும் இந்தப் பகுதியில் தொழிற்கூடங்கள் தொடங்குவதற்கு தொழில் முனைவோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதில் மந்த நிலை இருப்பதால் மேற்கொண்டு வளர்ச்சிப் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் பெரிய அளவில், அபிவிருத்தி செய்யப்படாத நிலங்கள் வழங்கக் கோரி விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுமானால், அவற்றின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துரிதமான நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதியான அந்தப் பகுதியிலே மீண்டும் தொழிற் பூங்கா தொடங்குவதாக தமிழக அரசு அறிவிப்புச் செய்ததற்காக இந்த நேரத்திலே அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சார்பிலே மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிப்காட் தொழிற்பேட்டைக்கான இடம் எப்போது கையகப்படுத்தப்பட்டது? அதற்கு எவ்வளவு செலவாயிற்று? இவ்வளவு நாட்களாக அந்தத் தொழிற்பேட்டை உருவாகாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதனாலே அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 511 ஏக்கர் பட்டா நிலங்கள் ஏக்கர் ஒன்று 35,000 ரூபாய் வீதம் சுமார் 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் எடுக்கப்பட்டன என்பதையும், சென்ற ஆட்சியில் ஏற்பட்ட தொழில் மந்த நிலையின் காரணமாக, தொழில் முனைவோர்கள் தொழிற்கூடங்கள் தொடங்க முன்வரவில்லை என்பதையும் இப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசு துரிதமாக அங்கே தொடங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**152—**

## இரப்பர் கழகம்

***3840—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2002 ஏப்ரல் 17

(அ) அரசு இரப்பர் கழகத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(இ) அந்தக் கழகத்தைக் காப்பாற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) இரப்பர் கழகத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான காரணங்கள் மத்திய அரசின் தாராளமயமாக்கல் கொள்கையும், இரப்பர் இறக்குமதியும் ஆகும். செயற்கை இரப்பர் இறக்குமதி செய்து பயன்படுத்தப்பட்ட காரணத்தால் நம்முடைய இந்த இரப்பர் கழகம் மிகச் சீர்கேடு அடைந்து இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1962-வது வருடத்திலே அந்த மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்காக தொடங்கப்பட்டு, இன்று மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கிற அந்த நிறுவனத்திலே ஏற்கெனவே 200-க்கும் அதிகமான அயற்பணியாளர்கள் தேவைக்கு அதிகமாக அங்கே வேலைக்கு வைக்கப்பட்ட காரணத்தினாலும், அதேபோன்று, ஊதாரித்தனமான செலவு காரணமாகவும்தான் இந்தக் கழகத்திலே நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதற்கு மேலாக தற்போது ஏற்பட்டிருக்கிற பொருளாதார கொள்கையின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியும் சேர்ந்து இந்தக் கழகத்திலே நட்டம் ஏற்பட்டிருந்தாலும், வருடா வருடம் இந்தக் கழகத்தினுடைய உற்பத்தி அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறது என்றும் தற்போது அங்கே ஏற்பட்டிருக்கிற நட்டத்தை நிவர்த்தி செய்து இலாபத்தில் கொண்டு வர முடியும் என்றும் தற்போது நிருவாகத்தில் இருக்கிற அதிகாரிகள் கருதுவதாக சமீபத்திலே நடந்த ஆய்வுக் கூட்டத்திலே கருத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது உண்மைதானா? அப்படி என்றால் அந்தக் கழகத்தை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?



2002 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போன்று அந்தக் கழகம் நலிவடைந்த நிலையில் இருப்பதால், அதைச் சமாளிப்பதற்காக தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திடமிருந்தும், தேயிலைத் தோட்டக் கழகத்திடமிருந்தும் ரூ.408.86 இலட்சங்கள் கடனாகப் பெறப்பட்டு, அதன் மூலமாக இப்போது சற்று சிறப்பு அடைந்திருக்கிறது. மேலும், ஒரு மிகப் பெரிய திட்டமான — நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின் பேரில் 10-4-2002 அன்று நடைபெற்றிருக்கிற கூட்டத்தில், அரசுச் செயலாளர் அவர்களும், நிதித் துறை கூடுதல் செயலாளர் அவர்களும் கலந்து பேசி, அரசு இரப்பர் கழகத்திடமிருந்து, ஒரு புனரமைப்புத் திட்டத்தை இங்கே அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன்மூலமாக குத்தகை வாடகையை ஹெக்டேருக்கு ரூ.6,000/-லேயிருந்து, ரூ.1,300/-ஆகக் குறைத்தும், அரசிடமிருந்து 2.00 கோடி ரூபாய் கடன் கேட்பது என்றும், உற்பத்தியை 20 சதவிகிதம் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பது என்றும், நிலுவையிலேயிருக்கும் குத்தகை வாடகையை 50 சதவிகிதமாகத் தள்ளுபடி செய்வது என்றும், நம்முடைய அரசுக்குப் பரிந்துரையாக வரப்பெற்றிருக்கிறது. அதன் மேல் புரட்சித் தலைவியினுடைய அரசு நல்ல முடிவை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமசந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. தற்பொழுது இந்த இரப்பர் கழகத்தை இலாபகரமாக நடத்துவதற்கு, அங்கே உற்பத்தி ஆகின்ற இரப்பரைப் பயன்படுத்தி, rubberised roads அதாவது இரப்பரைப் பயன்படுத்தி சாலைகளைப் போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களோடும் கலந்துகொண்டு, இந்த இரப்பரைப் பயன்படுத்தி rubberised road-களை ஏற்படுத்தி, இந்தக் கழகத்தை இலாபகரமாக நடத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கழகத்தில் கடந்த ஆண்டு 5.4 கோடி ரூபாயாக இருந்த நஷ்டத்தை, தற்போது 2.00 கோடி ரூபாயாகக் குறைத்து, இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மேலும், உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்து அம்மா அவர்களுடைய நல் ஆலோசனையோடு பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அரசு இரப்பர் கழகம் மிகவும் நஷ்டத்தில் இயங்கி வருகிறது. அதைப் பாதுகாக்கவும், அதில் பணிபுரியும் 2500-க்கும் அதிகமான தொழிலாளர்களின் நலன்களைக் கருதியும், அரசு இரப்பர் கழகத்தை வனத் துறையோடு இணைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குத் தரப்பட்டிருக்கிற குறிப்பில் அங்கே ஒரு புனரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலேயே பணியாளர்களை குறைப்பது என்றும், அதனால் இரப்பர் கழகம் குத்தகைக்கு எடுத்துள்ள வனத் துறையைச் சார்ந்த மொத்தத் தொழிலாளர்களையும் திரும்பவும் தாய் துறையான வனத் துறைக்கு அழைப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்வேறுவிதமான தகவல்களை இங்கே தந்திருக்கிறார்கள். என்னுடைய கோரிக்கை என்பது, சுமார் 40 வருடங்களுக்கு முன்னால், இந்தப் பகுதிக்கு ஒரு ஹெக்டேர் நிலத்திற்கோ, அல்லது ஒரு ஏக்கர் நிலத்திற்கோ, மத்திய அரசுக்கு குத்தகையாக நாம் 6,000-க்கு அதிகமான ரூபாயை — ஒரு ஏக்கராவிற்கு என்று கருதுகிறேன் — கொடுத்து வருகின்றோம். அதைக் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால், அந்த நிலத்தினுடைய விலையைவிட அதிகமாக



2002 ஏப்ரல் 17]

நாம் மத்திய சர்க்காருக்கு இதுவரை பணம் கொடுத்து விட்டோம். ஆகவே, இதை, இந்த 1,300 ரூபாய் என்றிருப்பதிலிருந்து, இன்னும் அதனுடைய நிர்ணயித்த தொகையைத் தாழ்த்தி, அதாவது குறைந்தபட்சம் ரூபாய் 500 ஓர் ஏக்கராவிற்கு என்று மதிப்பிலே வருகின்றபோது, நாம் நஷ்டத்தை இன்னும் தவிர்க்கமுடியும். அந்த வகையிலே இலாபகரமாக இதை நடத்துவதற்கு ஏதுவாகும்.

முற்பகல் 11-10

அதேபோன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். வனத் துறையினுடைய அதிகாரிகள் பெருவாரியாக இங்கே புகுத்தப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைப்போமானால், இன்னும் நஷ்டத்தை நாம் குறைக்க முடியும் என்று சொன்னார். அதுபோன்று, ஒரு பெரிய அதிகாரி இருந்து கொண்டிருக்கின்றார். அவர் சாதாரணமாக சென்னையிலேதான் இருக்கின்றார். அவர் அந்த மாவட்டத்திற்கு, இந்தக் கழகத்தைப் பார்க்க வருவது, ஏதாவது ஒரு மாதத்திலே ஒரு நாள்; ஏறத்தாழ 40,000 ரூபாய் அவருக்குச் சம்பளம் வழங்கப்படுவதாகத் தெரிகின்றது. அவருக்கு இவ்வளவு சம்பளம் தேவைதானா என்பதையும் இந்தத் துறை பரிசீலிக்க வேண்டும். இந்தப் பெரிய அதிகாரியினால் அந்தத் துறைக்கு இலாபம் இல்லை என்பது — எங்களுடைய நீண்ட கால தொடர்பின் காரணமாக— எங்களுடைய அனுபவம் அது. அந்த அடிப்படையிலே இதை இலாபகரமாக நடத்துவதற்கு இந்தக் கருத்துகளை அரசு ஏற்றுக் கொள்ளுமா; அதன் அடிப்படையிலேயே அவற்றைச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதிர்ச்சி அடைந்த மரங்கள் உள்ள தோட்டங்களுக்கு வருடத்திற்கு 6,000 ரூபாய் என்றும், முதிர்ச்சி அடையாத தோட்டங்களுக்கு வருடத்திற்கு 400 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அவற்றை எந்த அளவிற்கு மீண்டும் குறைக்க வேண்டும் என்பதை அரசு ஆராயும். அதேபோன்று, வனத் துறையினுடைய பெரிய அதிகாரிகள், அந்த இரப்பர் கழகத்திலே இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். என்றாலும், அது ஆய்ந்து பார்க்கக்கூடிய ஒரு விவரம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 153, திரு. ஆஸ்டின், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

**153—**

**ஆவின்**

***3878—திரு. ஆஸ்டின்:**

*மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் வளாகத்திலும் ஆவின் மூலம் பால் விற்பனை மையங்களைத் திறக்க அரசு பரிசீலிக்குமா?*

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசு மருத்துவமனை வளாகங்களிலே பால் விற்பனை மையங்களை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். நாகர்கோவில் அரசு மருத்துவமனை உட்பட பல அரசு மருத்துவமனை வளாகங்களிலே இதுவரை ஆவின் பால் விற்பனை மையங்கள் திறக்கப்படவில்லை. எனவே, ஆவின் மூலமாக மருத்துவமனை வளாகங்களிலே பால் விற்பனை மையங்கள் திறக்கப்படுவது எப்போதிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று கேட்டுக் கொள்வதோடு, மருத்துவமனை வளாகங்கள் தவிர, அரசு அலுவலக வளாகங்களிலே ஆவின் மூலமாகப் பால் விற்பனை மையங்களைத் திறப்பதற்கு தனியாருக்கு அனுமதி வழங்கப்படுமா என்றும், அப்படி வழங்கப்படுகின்றபோது, எதை அளவுகோலாக வைத்து தனியார் தேர்வு செய்யப்படுகின்றார்கள் என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் ஆவின் பால் விற்பனை நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்ற



2002 ஏப்ரல் 17]

பொதுமக்களின் நெடுநாளைய கோரிக்கையை நிறைவேற்றவும் மற்றும் இவ்வாறு ஆவின் பால் விற்பனை நிலையம் திறப்பதனால், மருத்துவமனைகளிலே தங்கியுள்ள நோயாளிகளுக்கு மற்றும் அவர்களைக் காண வரும் பார்வையாளர்களுக்கு, பொதுமக்களுக்கு நல்ல பயனுள்ள தரமான பால் கிடைக்க வழிவகை செய்யவும், தமிழக அரசு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தைக் கலந்தாலோசித்து, இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் 8-2-2002 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 21-ல் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. இவ்வாணையின் அடிப்படையில், மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின்கீழ் இயங்கும், சென்னை மாநகரத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்து, அரசு மருத்துவமனைகளில் மருத்துவ வளாகத்தில் ஆவின் பால் விற்பனைப் பிரிவைத் தொடங்க, அந்தந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதல்வர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த விற்பனைப் பிரிவைத் தொடங்க அனுமதி பெற பொதுப் பணித் துறை மற்றும் சுகாதாரத் துறை விதிக்கும் இட வசதி, வாடகை போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்க வேண்டுமென்றும் இவ்வாணையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணையின் அடிப்படையில் இணையமானது தன்னுடைய 18-2-2002 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் அனைத்து பொது மேலாளர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் வாயிலாக மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கும் அதனைச் சார்ந்துள்ள அரசு மருத்துவமனைகளில் சென்னையைப் போன்றே மாவட்டங்களிலும் ஆவின் மூலம் பால் விற்பனை மையங்களைத் திறப்பதற்கான மேல் நடவடிக்கையை எடுக்கும்படி கேட்டுக் கொண்டது. அதன்படி மாவட்டங்களில் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற அரசு அலுவலக வளாகங்களில் ஏற்கெனவே தனியார்கள் ஆவின் பாலகங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அரசு விதிமுறைகளைப் பின்பற்றி தகுதியானவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் அரசுக்குச் சொந்தமான அலுவலகத்திலோ அல்லது அரசு நிறுவனங்களிலோ ஆவின் பாலகம் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தால், அதனை இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 17

(முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, திரு. சி. ஞானசேகரன். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**154—**

**சுற்றுலா மையம்**

***2312—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, பாலமதி கிராமத்தைச் சுற்றுலா மையமாக்கி சுற்றுலாத் துறை மூலம் வசதிகளைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் தொகுதி, பாலமதி கிராமத்தைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் நிதி ஆதாரங்களுக்கு ஏற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தொகுதியிலே இருக்கக்கூடிய இந்தப் பாலமதி மலை ஓர் அழகிய மலை. பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக, அந்த இடத்திலே சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர் கோயில், முருகன் கோயில் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. வேலூர் தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு எந்தவிதமான பொழுதுபோக்கும் இல்லாத காரணத்தினாலே, அடிக்கடி இலட்சக்கணக்கிலே மக்கள் இந்த மலைக்கு வந்து போகிறார்கள். ஆகவே, இதைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. நீங்கள்



2002 ஏப்ரல் 17]

அறிவிப்பதில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால், அதை ஒரு சென்டராக மாற்றி, அதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். காரணம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே, இதேபோல நான் கேள்வியைக் கேட்டு, ஒரு assurance கிடைத்து, பிறகு சுற்றுலா அலுவலர், காஞ்சிபுரத்திற்கு வந்து அந்த இடத்திலே estimate எல்லாம் எடுத்துக்கொண்டு போனார். ஆனால், காஞ்சிபுரத்திலே இருக்கக்கூடிய அந்தச் சுற்றுலா அலுவலர் மீண்டும் அந்தப் பக்கம் திரும்பாத காரணத்தினாலே, அந்த இடம் இன்றும் ஒரு சுற்றுலா மையமாக மாறாமல் அடிப்படை வசதிகளின்றி தவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தயவு செய்து, அந்த சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர் கோயிலுக்கும், முருகன் கோயிலுக்கும் வருகை தந்து, அதை ஒரு சுற்றுலா மையமாக மாற்றி, அடிப்படை வசதிகளை அமைத்துத் தருவீர்களா? சுற்றுலாத் துறை மூலம் பஸ்களை இயக்கினால்கூட, வேலூர் கோட்டை பக்கத்திலே நிறைய கோயில்கள், வெட்டுவானம், அதேபோன்று.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சர்ச்சுக்குப் போகின்றவரைக் கொண்டுபோய் நீங்கள் கோயிலிலே கொண்டுபோய்த் தள்ளினீர்கள் என்றால் எப்படி? (சிரிப்பு) சர்ச்சுக்குப் போகின்றவரைக் கொண்டுபோய் நீங்கள் கோயிலிலே தள்ளினால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** இருந்தாலும், சக்தி வாய்ந்த ஆஞ்சநேயர், அவரையும் ஈர்க்கக் கூடிய சக்தி நிச்சயமாக இருக்கும் என்ற காரணத்தினாலே, அவரும் வந்து, அந்த இடத்திலே சுற்றுலாத் துறை மூலம் பஸ்களை வேலூரிலிருந்து இயக்குவீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும். காஞ்சிபுரம், அதேபோல திருத்தணி, ரத்தினகிரி மற்றும் திருவண்ணாமலை போன்ற பகுதிகளுக்குச் சென்னையிலேயிருந்து இயக்கப்படுவதுபோல நீங்கள் Package Tour பஸ்களை அந்த இடத்திலிருந்து இயக்கினால் அரசுக்கு நிறைய வருவாய் வரும் என்கின்ற காரணத்தினாலே, அதையும் அமைச்சரவர்கள் பரிசீலிப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம் நகர எல்லையிலிருந்து சுமார் 7 கி.மீ. தூரத்தில் பாலமதி என்ற மலைக் கிராமம், கடல் மட்டத்திலிருந்து சுமார் ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ளது. இந்த ஊராட்சியைச் சுற்றி செட்டேரி, கிருஷ்ணாபுரம், அரசக்குளம், செங்காநத்தம் ஆகிய

[2002 ஏப்ரல் 17

மலைக் கிராமங்கள் உள்ளன. பாலமதியில் சுமார் 2,000 மக்கள் வசிக்கிறார்கள். பாலமதி கிராமம் இயற்கை அழகுக்கு இடையிலே அமைந்துள்ளது. ஏழு கொண்டை ஊசி வளைவுகளைக் கொண்ட மலைப் பாதை இந்தக் கிராமத்தை அடைகிறது. இங்கே உள்ளே ஆஞ்சநேயர் கோயில் சுமார் 100 ஆண்டு காலம் பழமை வாய்ந்தது. கோயில் அருகில் சுனையும், குளமும் மற்றும் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் ஓர் அழகிய ஏரியும் உள்ளது. அருள்மிகு முருகன் கோயில் இம்மலைக் கிராமத்தின் முக்கியத் தலமாகும். இந்தக் கோயிலிலிருந்து வேலூர் நகரத்தின் பரந்த காட்சிகள், சுற்றிலும் அமைந்துள்ள மலைகளின் எழில்கள் மற்றும் அழகிய சுற்றுச் சூழல்களைக் கண்டு களிக்கலாம். இந்த மலைக் கோயில் ஒரு மலைக்குன்றின்மீது அமைந்துள்ளது. மலைக்குன்று கோயிலுக்கு சுமார் 120 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பிரதான சாலையிலிருந்து, தார்ச் சாலையும் பெரிய மைதானமும் உள்ளது. பாலமதிக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் வசதிகளுக்கு ஏற்றவாறு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தினந்தோறும் வேலூர் நகரத்திலிருந்து 10 பேருந்துகள் வந்து செல்கின்றன. கிராமப் பஞ்சாயத்திலிருந்து பாலமதி மலையில் ஆங்காங்கு குழல் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள வேலூரில் அனைத்து வசதிகளும் உள்ளன. 2002-2003-ல் மேலும் பல புதிய இடங்கள் கண்டறியப்பட்டு மேம்படுத்தப்படும். அதற்கான கருத்துருக்களை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையை ஏற்று நிதிநிலைக்கு ஏற்ப 2002-2003-ல் பாலமதி மலையினை மேம்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை இந்த அவைக்குக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், பரிசீலிக்கப்படும் என்று சொல்லிவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றி. அந்தப் பாலமதி மலைக்கு அடிவாரத்தில் இருக்கக்கூடிய ஓட்டேரி ஏரியில் படகு விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்., அதேபோல, வேலூர் கோட்டையைச் சுற்றி இருக்கக்கூடிய அகழியிலே நீங்கள் சுற்றுலாத் துறை மூலம் படகு விட்டீர்கள் என்று சொன்னால் நிறைய மக்களுக்கு அது வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சரவர்கள்......



2002 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மலையிலிருந்து கீழே இறங்கிவிட்டீர்கள். வேண்டாம்.

**(ஆ) குறுகிய கால வினா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 2, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**2—**

**ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

***19536—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பளவு மற்றும் அதில் ஆக்கிரமிப்பிற்கு உள்ளான நிலங்களின் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களின் மொத்த பரப்பளவு 4,79,021 ஏக்கர் 23 சென்ட்.

ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களின் பரப்பளவு 6,720 ஏக்கர் 80 சென்ட்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகளின் பரப்பளவு 33,627 கிரவுண்ட் 0239 ச.அடி

ஆக்கிரமிப்பில் உள்ள மனைகளின் பரப்பளவு 2,400 கிரவுண்ட் 0415 ச.அடி.

(ஆ) ஆக்கிரமிப்புதாரர்களை அகற்ற இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் வழிவகை உள்ளது.

[2002 ஏப்ரல் 17

*முற்பகல் 11-20*

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் அன்னதானத் திட்டம் என்ற முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஏழை எளிய மக்களுக்கு உதவுகின்ற புரட்சித் தலைவி அம்மா அரசு இதுபோன்ற நலத் திட்டங்களை நிறைவேற்றி விவசாய நிலங்கள் 6720 ஏக்கர் மற்றும் மனைகளின் பரப்பளவு சுமார் 2,400 கிரவுண்ட் ஆகியவற்றை ஆக்கிரமிப்பு செய்தவர்கள்மீது இந்து அறநிலையக் கொடைகள் சட்டம் பிரிவு 79-ன்கீழ் நடவடிக்கை எடுக்குமா? கிரிமினல் நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கியதோடு, தமிழ்நாட்டிலுள்ள 30 ஓய்வுபெற்ற அர்ச்சகர்களுக்கு மாதம் 500 ரூபாய் வீதம் இப்பொழுது வழங்க இருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் இயங்கும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகளை ஆக்கிரமிப்புச் செய்தவர்கள்மீது, இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டம், 1959, சட்டப் பிரிவு 78 மற்றும் 79-ன்கீழ் நடவடிக்கை எடுக்க வழிவகை உள்ளது. சட்டப் பிரிவு 78-ன்படி, சம்பந்தப்பட்ட சரக உதவி ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில், மண்டல இணை ஆணையர் விசாரணைகள் நடத்தி, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஆக்கிரமிப்புகளை அகற்ற ஆணை பிறப்பிக்கலாம். இதற்குப்பின் தேவையெனில் சட்டப் பிரிவு 79-ன்படி, தேவையான காவல் துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றி, சொத்தினை கோயில் சுவாதீனத்திற்குக் கொண்டு வருவதற்கு சட்டத்தில் இடம் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர், மணலியிலுள்ள காலாந்திக்குப்பம் என்ற இடத்தின் அருகில் ஒரு திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 90 ஏக்கர் கோயில் நிலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய 6200 ஏக்கர் பரப்புள்ள ஆக்கிரமிப்புகளில் இதுவும் வருகிறதா? அப்படி வருகிறது என்றால்**

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2002 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. சேகர்பாபு, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு கூடாது. அதிலே வருகிறதா என்று மட்டும் கேளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** இந்த இடத்தின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை மாண்புமிகு சபாநாயகர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா. கருங்கிளை கிராமம், கருங்காலி சிந்தாமணி ஈஸ்வரன் கோயிலுக்கு மொத்தம் 38 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கு மீஞ்சூர் ஒன்றியக் கழகத்தினுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் முன்பு அறங்காவலராக இருந்தார்கள். அதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு பொறுப்பேற்றதற்கு பின்னாலே, 3 நபர்களை அறங்காவலர்களாக நியமனம் செய்து அங்கே தீர்மானங்களை நிறைவேற்றி, 1-7-2000 முதல் 30-6-2005 வரை 5 ஆண்டுகள் குத்தகைக்கு 38 ஏக்கர் நிலத்தை மோகனாம்பாள் தமிழரசு என்பவருக்கு விட்டுள்ளார்கள். அங்கு அருள்மிகு சிந்தாமணி ஈஸ்வரன் கோயில் மோகனாம்பாள் என்று மின் இணைப்பு பெற்றுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. உரிமை மீறல் பிரச்சினை

### மாண்புமிகு முதலமைச்சர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினையில் 16-4-2002 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பிற்கு விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, கொஞ்சம் கவனியுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதான அவை உரிமைப் பிரச்சினை குறித்து நேற்று (16-4-2002) அவையில் எனது தீர்ப்பினை

அளித்தேன். அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்கள் அவையில் சில விளக்கங்கள் கேட்டதன் தொடர்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு விளக்கம் அளித்துள்ளார்கள். அதன்படி ரூபாய் *368.85* கோடி எனக் குறிப்பிட்டிருந்த தொடர் இழப்பு *1991* முதல் *1996* வரை மாண்புமிகு புரட்சித் தலைவியின் *5* ஆண்டு கால ஆட்சியில் ஏற்பட்ட திரண்ட இழப்பாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை அறிய வேண்டும் என்ற எண்ணத்துடன் தெரிவித்த தகவல் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அதாவது *1991* முதல் *1996* வரை ஏற்பட்ட தொடர் இழப்பு பற்றியது மட்டுமே ஆகும். போக்குவரத்துக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் *1996* வரை ரூபாய் *533* கோடி தொடர் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதாவது *1991* முதல் *1996* வரை ஏற்பட்ட இழப்பையும் சேர்த்து வந்த தொடர் இழப்பாகும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுமென்றே அவைக்குத் தவறான தகவலை தரவில்லை என்பதை நேற்று அளித்த தீர்ப்பை ஒட்டிய விளக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை விதி *55*-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) விளக்கம்... சரி சொல்லுங்கள். திரு. துரைமுருகன்.

*முற்பகல் 11-25*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் கொடுப்பதிலே ஒன்றும் தவறு இல்லை. ஆனால் இந்த விளக்கத்தை நீங்கள் பெற்று நேற்று தீர்ப்பில் சொல்லியிருக்கலாம். ஆனால், தீர்ப்பைச் சொல்லிவிட்டு இன்றைக்கு அதோடு ஒட்டி இன்னொரு additional தீர்ப்பைச் சொல்வது என்பது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக விளக்கம் சொல்லப்படுகிறதே தவிர வேறல்ல. (குறுக்கீடு) நேற்று திரு. பொன்முடியேகூட ஒரு விளக்கம் கேட்டார். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த விளக்கத்தைத் தெரிவிக்கச் சொன்னார்களே தவிர, மற்றபடி என்னுடைய தீர்ப்பு என்பது உறுதியானது, இறுதியானது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று தங்களுடைய தீர்ப்பைக் கூறினீர்கள். அதன்பிறகு இன்று பத்திரிகைகளில் வந்த செய்திகளைப் பார்த்த பிறகுதான் இந்த விளக்கத்தை நான் பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்தேன். பத்திரிகைகளில், ஏதோ நான் தவறான விவரங்களைத் தெரிவித்துவிட்டதாகவும், அதன் காரணமாக இங்கே உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டதாகவும், சரியான தகவல்கள் வெளியாகவில்லை. ஆகவே ஒரு தவறான கருத்து ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் மேலும் இந்த விளக்கத்தைப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். ஆகவே நான் இந்த அவையில் தெரிவித்த கருத்தில், தெரிவித்த புள்ளிவிவரங்களில் எந்தத் தவறும் இல்லை. *1991* முதல் *1996* வரையிலான விவரங்களைத் தெரிவித்தேன் என்பதைத்தான் விளக்கமாகப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி *55*-ன் கீழ் ...(குறுக்கீடு) திரு. பொன்முடி, அது முடிந்து விட்டது. நேற்று நீங்கள் விளக்கம் கேட்டீர்கள். விளக்கம் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் உட்காருங்கள். திரு. பொன்முடி, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் நேற்றே தீர்ப்புச் சொன்னேன். என்னுடைய தீர்ப்புக்குப் பிறகு அதற்குள்ளே புகுந்து நீங்கள் குழப்பக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, பத்திரிகைகளில் வந்திருக்கிற சில தகவல்களையொட்டி அதற்காக முதலமைச்சர் அவர்கள் இந்த விளக்கத்தைச் சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

***டாக்டர் க. பொன்முடி:** அதற்காகத்தான் நானும் சொல்ல வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்று சொன்னதாக, தமிழரசு பத்திரிகையில் வெளிவந்திருக்கும் செய்தியும் சரி, நான் நூலகத்தில் பார்த்த செய்தியும் சரி, அந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்றுதான் நான் சொன்னேனே பொன்முடி. தமிழரசு பத்திரிகையில் வந்திருப்பது தவறான தகவல் என்று நீங்கள் கருதினால், அதைத் தனியாகக் கொடுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொல்கிறேன். அந்தச் செய்தியானது— அவர்கள் சொன்ன செய்தியானது, போக்குவரத்துக் கழகங்கள் ஆரம்பித்தலிருந்து *1996* வரை அதன் திரண்ட இழப்பு ரூ.*368.85* கோடி என்றுதான் பதிவாகியிருக்கிறது. அந்த ஐந்தாண்டுகளில் இந்த இழப்பு ஏற்பட்டது என்ற செய்தி அதிலே இல்லை. அதுதான் நான் சொன்ன குற்றச்சாட்டு. அதுமட்டுமல்ல, தொடர்ந்து அவர்கள் சொன்ன

[டாக்டர் க. பொன்முடி] [2002 ஏப்ரல் 17

செய்தியிலேயே 1991-96 அந்த ஐந்தாண்டுகளிலே ஏற்பட்டிருக்கிற இழப்பு ரூ.204 கோடிதான் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1995-96-ல் மட்டும் 207 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் சொன்ன செய்தி தவறு என்பதை ஒத்துக்கொண்டால், எனக்கு இதிலே பிரச்சினை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறே கிடையாது. நேற்று நான் சொன்ன தீர்ப்பிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இந்தப் பிரச்சினைக்குள் இப்போது இந்த நேரத்தில் நான் செல்ல விரும்பவில்லை. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார். உரிமை மீறல் பிரச்சினை பற்றி நேற்று பேரவைத் தலைவர் தீர்ப்புக் கூறியபிறகு இந்த விளக்கம் ஏன் இன்று அளிக்கப்படுகிறது என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு நான் பதில் சொன்னேன். அந்தத் தீர்ப்பு பற்றிய செய்திகள் இன்று பத்திரிகைகளில் பார்த்ததால் அதற்கு நான் ஒரு விளக்கத்தைப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு அனுப்பினேன். அதைத்தான் இங்கே தெரிவித்தார்கள் என்று சொன்னேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்குள் இப்போது நான் செல்ல விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) சாத்தூர் பகுதிக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

***திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தூர் நகரில் நிலவும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக லாரி மூலமாகக் குடிநீர் வழங்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



2002 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி சாத்தூர் நகராட்சியின் மக்கட்தொகை 31,274. சாத்தூர் நகராட்சிக்கு 1966-ம் ஆண்டு குடிநீர்த் வைப்பாற்றினை நீராதாரமாகக் கொண்டு திட்டம் நிறைவேற்றப்பட்டது. வைப்பாற்றில் கோடையில் நீர்வரத்து இல்லாததால் இத்திட்டத்திலிருந்து கோடைகாலத்தில் போதுமான அளவு குடிநீர் பெற இயலவில்லை. மேலும் இந்த நீர் ஆதாரத்திலிருந்து சுமார் 60,000 லிட்டர் குடிநீரே இப்போது கிடைக்கப்பெறுகிறது. சீவலப்பேரி, தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்ட கோவில்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1980 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் இந்நகராட்சிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திலிருந்து குடிநீர்க் குழாயில் கசிவு ஏற்படுவதாலும் கோவில்பட்டி நகரில் இணைப்பு மாற்றங்களினாலும் வடிவமைக்கப்பட்ட 6 இலட்சம் லிட்டருக்குப் பதிலாக இப்போது 2 இலட்சம் லிட்டர் மட்டுமே தினந்தோறும் கிடைக்கப் பெறுகிறது. பிற உள்ளூர் ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் நகராட்சிப் பகுதிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 14 லிட்டர் மட்டுமே குடிநீர் வழங்கப்படுகிறது.

சாத்தூர் நகராட்சியில் நிலவிவரும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க பொதுப் பணித் துறையினரால் இருக்கன்குடியில் கட்டப்பட்டு வரும் அணையிலிருந்து 0.97 மில்லியன் காலன்கள் தண்ணீர் நாளொன்றுக்கு வழங்கப்படும் வகையில் ரூ.309.94 இலட்சங்களுக்குக் குடிநீர்த் திட்டம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையால் ஆண்டு முழுவதும் தடையின்றி நீர் வழங்குவதற்கு உத்தரவாதம் அளிக்கப்படாததால் இத்திட்டப் பணிகள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் நகராட்சிப் பகுதிகளுக்கு உடனடி குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக ஓர் உடனடி மேம்பாட்டுத் திட்டம் ரூ.55.65 இலட்சங்களுக்கு புனரமைப்புப் பணியாக மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் கூடுதலாக வைப்பாற்றில் மூன்று நீர் உறிஞ்சு கிணறுகள் அமைத்து சாத்தூர் நகராட்சிப்

[திரு. சி. துரைராஜ்] [2002 ஏப்ரல் 17

பகுதிக்குக் கூடுதலாக தினந்தோறும் 9.6 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. தற்போது இத்திட்டத்திற்கான நீராதாரமாக ஒரு நீர் உறிஞ்சு கிணறு அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஆனால், வைப்பாற்று நீர் ஆதாரத்தில் ஆண்டு முழுவதும் நீர் நிலைத்தன்மை இல்லாததால் சாத்தூர் நகராட்சி தற்போது இத்திட்டத்திற்குப் பதிலாக தாமிரபரணி ஆற்றிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைத்து இந்நகராட்சிக்குத் தனியாகக் குழாய் பதித்து தேவையான அளவிற்கு குடிநீர் வழங்கக் கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டம் நிறைவேறும்போது சாத்தூர் நகரின் குடிநீர்ப் பற்றாக்குறை கணிசமான அளவு குறையும். மேலும் சாத்தூர் நகரில் நிலவி வரும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கும்பொருட்டு 9,000 லிட்டர் குடிநீர் லாரி மற்றும் 3,500 லிட்டர் மினி டேங்கர் லாரி மற்றும் ஒரு பவர் டில்லர் மூலம் 78,000 லிட்டர் குடிநீரைத் தனியாரிடமிருந்து விலைக்கு வாங்கி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

*முற்பகல் 11-30*

***திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் தினசரி 78 ஆயிரம் லிட்டர் தண்ணீர் லாரி மூலமாக வழங்குவதாகத் தகவல் சொல்லியிருக்கிறீர்கள். நாள்தோறும் எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் வராமல் இருக்கிறதோ அந்தந்தப் பகுதிகளுக்குக் கொடுப்பதற்காகத்தான் அந்த 78 ஆயிரம் லிட்டர் தண்ணீர் லாரி மூலமாகக் கொடுக்கப்படுகிறது. போன ஆட்சிக் காலத்தில், எங்களுடைய ஆட்சிக் காலத்தில், நாங்கள் 9-3-2001-லேயே 5 இலட்சம் ரூபாய், வறட்சி நிவாரணத்திலிருந்து அதற்குக் கொடுத்திருக்கிறோம். அதற்குப் பின்னாலே, 27-3-2001-லேயும் கொடுத்திருக்கிறோம். 12-6-2001-லேயும் கொடுத்திருக்கிறோம். இந்த ஆட்சி வந்த பிறகு, போன ஆண்டும் 5 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, இந்த ஆண்டும், வறட்சி நிவாரண நிதியிலே இருந்து, லாரி மூலமாக, சாத்தூரிலே குடிநீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் நான் வலியுறுத்தியிருக்கிறேன். போன ஆண்டும், நீங்கள் 5 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். அதேபோல், இந்த



2002 ஏப்ரல் 17] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

ஆண்டும் வறட்சி நிவாரண நிதியிலிருந்து லாரி மூலமாகத் தண்ணீர் வழங்க வேண்டிய அந்த நிதியுதவியை தயவுசெய்து உடனடியாக வழங்க வேண்டும். காரணம், இப்போது, சாத்தூரிலே 10 தினங்களுக்கு ஒரு தடவைதான் நாங்கள் தண்ணீர் பெற்றுக் கொண்டிருக்கிறோம். எங்கு பார்த்தாலும் தாய்மார்கள் கையிலே பானையோடு அலையக்கூடிய ஓர் அவலமான சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதுபோக, அந்த அறிக்கையிலே, புதிதாக தாமிரபரணியிலே இருந்து கொண்டு வருகிற அந்தக் குடிநீர்த் திட்டம், கோயில்பட்டிக்கும், எங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் -- புதிதாக ஒரு திட்டம், அரசாங்கத்தினுடைய ஆய்விலேயிருந்து ஆய்வு முடிந்து எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் இந்த நிதியாண்டிலேயே எடுத்து, சீவலப்பேரி திட்டத்தையும் சாத்தூருக்கும் கொடுப்பீர்கள் என்று சொன்னால், நிரந்தரமாகச் சாத்தூரினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற அந்தக் கோரிக்கையையும் வலியுறுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக வறட்சி நிவாரண நிதியிலிருந்து லாரி மூலமாகத் தண்ணீர் வழங்குவதற்கு வேண்டிய உதவியை அளிப்பார்களா; அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திற்குக் குடிநீர்த் தேவைக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கருத்துப் பெற்று, விருதுநகர் மாவட்டம் முழுமைக்கும், சுமார் ரூ. 152.50 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்து, அந்த நிதியிலே இருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, சாத்தூர் நகரினுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்குண்டான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள்..

(குறுக்கீடு)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** ஒரு சின்ன விளக்கம்; வேறொன்றும் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டீர்களே, அவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அது இருக்கிறது. (குறுக்கீடு) சரி.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களிடம் இங்கே கேட்டுக்கொள்வது, இதுவரைக்கும் அந்த நிதி வந்து சேரவில்லை, ரெவின்யூவிலே இருந்துகூட பணம் ஒதுக்கியதாகச் சொன்னார்கள்; நீங்களும் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால், இதுவரையிலேயும் வரவில்லை. ஆகவே, தயவுசெய்து உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெற்று, அதன்மூலம்தான் நிதி ஒதுக்கீடு அனுப்பப்பட்டிருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரிடம் கொடுத்து கொடுப்பாரோ என்றுகூட நினைக்கலாம். தயவுசெய்து, அரசு நிதியை அந்தமாதிரி கொடுப்பதற்குப் பழக்கம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நிச்சயமாகப் போய்ச் சேரும். மாவட்ட ஆட்சித் தலைவர் குடிநீர்ப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிந்து விட்டது.

## (ஆ) தோட்டத் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் குறைக்கப்பட்டிருப்பதால் எழுந்துள்ள பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. கே.சி. கருணாகரன், திரு. ஜி.கே. மணி, திரு. ப. அரசன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள தேயிலை, இரப்பர் மற்றும் காபி தோட்டங்களில்



பணி செய்யும் தொழிலாளர்களுக்கு நடைமுறையில் இருந்து வரும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த தினசரி ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் தாயை வணங்குகிறேன். இதுகுறித்த விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழ்நாட்டிலுள்ள தோட்ட அதிபர்கள் சங்கத்தில் உறுப்பினராக உள்ள தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியம் தோட்ட அதிபர்கள் சங்கத்திற்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையே அவ்வப்போது ஏற்பட்டு வரும் ஒப்பந்தப்படி வழங்கப்பட்டு வருகிறது. இறுதியாக 12/13-1-2000 அன்று தொழிலாளர்களுக்கும் பிரிவு 18(1)-ன்கீழ் ஏற்பட்ட ஒப்பந்தப்படி Superviser, 2-5-2000 அன்று ஏற்பட்ட பிரிவு 18(1) ஒப்பந்தப்படி non-staff மற்றும் skilled workers-க்கும் ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. இவ்வொப்பந்தங்களின் காலம் 1-1-1999 முதல் 31-12-2001 வரை ஆகும். இதைத் தவிர 10-7-1996 அன்று ஏற்பட்ட பிரிவு 18(1) ஒப்பந்தப்படி ஊக்க ஊதியம் (incentive) வழங்கப்பட்டு வந்தது.

வெளிநாட்டு தேயிலை இறக்குமதி, போட்டிச் சந்தை, ஏற்றுமதிச் சந்தையில் கடுமையான போட்டி மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களினால் தோட்டத் தொழிலில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு, அதனால் தோட்டத் தொழிலில் நசிவு ஏற்பட்டுள்ளதாகவும், இதனைப் போக்கிட உற்பத்திச் செலவினைக் குறைக்கும் வகையில் தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைக்க வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்து நடைமுறையில் உள்ள 12/13-1-2000, 2-5-2000 மற்றும் 10-7-1996 ஆகிய மூன்று ஒப்பந்தங்களையும் 31-12-2001-வுடன் இரத்துச் செய்வதாகத் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 19(2)ன் கீழ் அறிவிப்புக் கொடுத்ததுடன், தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தினக்கூலி ரூ.76.85 பை.சாவை ரூ.60/- ஒட்டுமொத்த ஊதியமாகக் குறைப்பது உள்ளிட்ட பணி நிலைகளில் 1-1-2002 முதல்

[திரு. வது. நடராஜன்] [2002 ஏப்ரல் 17

மாற்றம் செய்யும் வகையில் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 9-Aன் கீழ் அறிவிப்பும் கொடுத்தனர்.

தேயிலை மற்றும் காபி தோட்டத் தொழிலாளர்களின் பணி நிலைமை மாற்றம் தொடர்பாக நிர்வாகங்கள் கொடுத்துள்ள 9(ஏ) அறிவிப்பு குறித்து சில தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்த ரிட் மனுக்களின் மீது சென்னை உயர் நீதிமன்றம் 22-3-2002 நாளைய உத்தரவில் சமரச அலுவலர் முன்பு சமரச நடவடிக்கைகள் நிலுவையில் உள்ள நிலையில் அமலில் உள்ள பணி நிலைமைகளில் மாற்றம் செய்யக்கூடாது என உத்தரவுகள் பிறப்பித்ததை அடுத்து இப்பிரச்சினை குறித்து 3-4-2002 அன்று தொழிலாளர் ஆணையர் சமரசப் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டார். அப்பேச்சு வார்த்தையின்போது தொழிற்சங்கத் தரப்பில் நிர்வாகங்கள் உயர் நீதிமன்ற உத்தரவின்படி ஊதியத்தைக் குறைக்கக் கூடாது எனவும் ஜனவரி, ஏப்ரல் மாதங்களில் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும் எனவும் கோரின.

நிர்வாகத் தரப்பில் உயர் நீதிமன்றத் தீர்ப்பின்மீது மேல் முறையீடு செய்ய உள்ளதாகவும் பெருத்த அளவில் ஆட்குறைப்பு மற்றும் மூடுதலைத் தவிர்க்கும் பொருட்டே ஊதியக் குறைப்பு என்று முடிவுக்கு வந்ததாகவும் இந்நிலையில் இப்பிரச்சினை குறித்து ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்த முயற்சிக்கலாம் அல்லது பிரச்சினையை அரசு, நீதிமன்றத் தீர்ப்புக்கு விடலாம் எனவும் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்டு அறிந்து இப்பிரச்சினை குறித்து தம்முன்பு சமரசப் பேச்சுவார்த்தைகள் தொடரும் எனவும், இந்நிலையில் உயர் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவுகளின்படி ஏற்கெனவே அமலில் உள்ள .பணி நிலைமைகளில் எவ்வித மாற்றமும் செய்ய வேண்டாமென தொழிலாளர் ஆணையர் நிர்வாகங்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் ஆனைமலை பிளாண்டர்ஸ் அசோசியேஷன் மற்றும் தொழிற்சங்கங்களுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பயனாக 6-4-2002 அன்று பிரிவு 18(1)ன்கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும் அவ்வொப்பந்தப்படி தொழிலாளர்களுக்கு சம்பள முன்பணமாக (26 நாட்களுக்கு) மாதம் ஒன்றுக்கு ரூ.1,800/- superviser-களுக்கு ரூ.2,025, non-staff-களுக்கு ரூ.1,785/- 1-1-2002 முதல் வழங்கவும் இதனை 10-4-2002 அன்று பட்டுவாடா செய்வதெனவும்



2002 ஏப்ரல் 17] [திரு. வது. நடராஜன்]

பிரச்சினை குறித்து நேரடிப் பேச்சுவார்த்தையைத் தொடருவது எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவ்வொப்பந்தத்தில் ஏ.டி.பி. தொழிற்சங்கம் கையொப்பமிடவில்லை எனவும் அறியப்படுகிறது. மேலும் 21-3-2002 நாளைய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்மீது நிருவாகம் தாக்கல் செய்த மேல்முறையீட்டினை அனுமதித்து 21-3-2002 நாளைய தீர்ப்பிற்கு உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

நீலகிரி பிளாண்டர்ஸ் அசோசியேஷனைப் பொறுத்தவரை ஏற்கெனவே 5-2-2002 அன்று பிரிவு 18(1)-ன்கீழ் ஓர்ஒப்பந்தமும், நீலகிரி வயநாடு பிளாண்டர்ஸ் அசோசியேஷனைப் பொறுத்தவரை 14-3-2002 அன்று பிரிவு 18(1)-ன்கீழ் ஓர் ஒப்பந்தமும் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளன. தற்போது ஆனைமலை பிளாண்டர்ஸ் அசோசியேஷன் 8-4-2002 அன்று தொழிற்சங்கங்களுடன் ஓர் இடைக்கால ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு 1-1-2002 ஆம் தேதி முதல் அந்த இடைக்கால ஒப்பந்தத்தை அமல்படுத்தவும் பிரச்சினை குறித்து இருதரப்பினரும் நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஏற்கெனவே இப்பிரச்சினை குறித்து தொழிலாளர் ஆணையர் முன்பு சமரசப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு அது நிலுவையில் உள்ள நிலையில் தற்போது இருதரப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் இப்பிரச்சினை குறித்து ஆணையரால் தொழிற் தகராறு சட்ட விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் தற்போது சகஜ நிலை நிலவுகிறது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் இல்லை.

இரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் ஊதியக் குறைப்பு பிரச்சினையை பொறுத்தவரை கன்னியாகுமரி மாவட்டத்தில் 66 பதிவு பெற்ற தனியார் தோட்ட நிறுவனங்களும் 228 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களும் உள்ளன. இவற்றில் முறையே 6,439 மற்றும் 460 ஆக மொத்தம் 6,899 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இவற்றில் கன்னியாகுமரி மாவட்ட தோட்ட நிறுவன அதிபர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள

1. நியூ அம்பாடி எஸ்டேட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
2. வேலிமலை எஸ்டேட்
3. வைகுண்டம் பிளாண்டேஷன்ஸ் லிமிடெட்

[திரு. வது. நடராஜன்] [2002 ஏப்ரல் 17

4. வைகுண்டம் அக்ரோடெக் லிமிடெட்.

5. பாலாஜி எஸ்டேட்

6. சிவலோகம் எஸ்டேட்

7 மாருதி எஸ்டேட்

8 காமதேனு எஸ்டேட்

9 பெத்தாணி எஸ்டேட்

10 பால்குளம் மகாலட்சுமி எஸ்டேட்

11. பால்குளம் எஸ்டேட்

12. நாகம்மாள் பால்குளம் எஸ்டேட்.

ஆகிய தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களது ஊதியக் குறைப்பு உள்ளிட்ட பணி நிலைமை மாற்றங்கள் குறித்து தொழிற்தகராறு சட்டப் பிரிவு 9ஏ-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளன. இந்த அறிவிப்பின்படி தொழிலாளர்களுக்கு அமலில் உள்ள ஒப்பந்தப்படி பெற்று வந்த தினக்கூலி ரூ.71.75 பைசாவை 300 ஏக்கருக்கு மேல் பரப்பளவு கொண்ட தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.65/- எனவும், 300 ஏக்கருக்குக் கீழ் பரப்பளவு கொண்ட தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.60/- எனவும் 1-4-2002 முதல் குறைத்து வழங்கிட உத்தேச அறிவிப்பைக் கொடுத்துள்ளனர்.

இரப்பர் தோட்ட நிறுவனங்கள் கொடுத்துள்ள பிரிவு 9ஏ அறிவிப்பு குறித்து நாகர்கோவில் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) 26-3-2002 அன்று பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டு உள்ளார். அப்பொழுது பேச்சுவார்த்தைகள் நிலுவையில் உள்ள நிலையில் உத்தேசித்த ஊதியக் குறைப்பு உள்ளிட்ட பணிநிலை மாற்றங்களை அமல்படுத்த வேண்டாமென அறிவுரை வழங்கியுள்ளார். இவ்வறிவுரையினைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் 9-4-2002 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இப்பிரச்சினை குறித்து தொழிற்தகராறு சட்டப் பிரிவுகளின் விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. நிலைமை உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. இதில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏதுமில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.



2002 ஏப்ரல் 17]

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதிலே, வால்பாறையிலே சுமார் ஒரு இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தமிழகம் முழுவதும் 10 இலட்சம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் இன்று கடுமையான பட்டினியோடு இருந்து வருகிறார்கள். ஒரு நாளைக்கு அவர்கள் கூலியாக 76 ரூபாய் 85 பைசா வாங்கி வந்தார்கள். இப்போது தேயிலைத் தோட்ட அதிபர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, ஏற்கெனவே கொடுத்துவந்த சம்பளத்தைக் குறைத்துக் கொடுப்பதாக அறிவித்துள்ளார்கள். இதனால், வால்பாறையில் மிகுந்த பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாளைக்கு 76 ரூபாய் 85 பைசா வாங்கி, குடும்பம் நடத்த முடியாமல் கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய சம்பளத்தைத் திடீரென குறைக்க முன்வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்க செயலாகும்.

ஒருநாள் கூலியை வாங்கி குடும்பத்தை நடத்த முடியாமல், குழந்தைகளையும் படிக்க வைக்க முடியாமல், மருத்துவ வசதியைக்கூட செய்து கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை குறைத்து இருப்பது மிகுந்த வேதனை தருகிறது. அவர்கள் கடந்த 4 மாதங்களாகச் சம்பளம் வாங்காமல் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்று ஒரு நேரம் சாப்பிடுவதற்குக்கூட வசதி இல்லாமல் வட்டிக்குக் கடன் வாங்கி அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற அவலநிலை வால்பாறையிலே ஏற்பட்டு இருக்கின்றது. நாங்கள் இவர்களுக்கெல்லாம் சம்பள உயர்வு கேட்டு வருகிற இந்தநேரத்தில்,....

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கம், கேள்விதான் கேட்கவேண்டும்.

**திரு. கோவை தங்கம்:** ஒரு நிமிடம் கொடுங்கள்; நாங்கள் சம்பள உயர்வு கேட்டுக்கொண்டிருக்கிற இந்தநேரத்தில் திடீரென்று சம்பளத்தைக் குறைத்துவிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்

[திரு. கோவை தங்கம்] [2002 ஏப்ரல் 17

அவர்களிடமும், தொழிலாளர் நலத் துறை செயலாளர் அவர்களிடமும், தொழிலாளர் நல ஆணையர் அவர்களிடமும் இதைப்பற்றி விரிவாக விளக்கமாக எடுத்துக்கூறி மனு கொடுத்து இருக்கின்றேன். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் நேரடியாக தோட்ட அதிபர்களை அழைத்துப் பேசி, வால்பாறை தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக உடனடியாக அவசரமாக அவர்களுக்கு பழைய சம்பளமான 76 ரூபாய் 85 பைசாவை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், கடந்த... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் கொடுங்கள், 10 இலட்சம் தொழிலாளர்களுடைய பிரச்சினை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் என்ன பதில் சொல்ல வேண்டுமென்று கேளுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 14 ஆம் தேதி, புத்தாண்டு அன்று நான் வால்பாறைக்கு சென்றபோது எனது சட்டமன்ற அலுவலகத்திற்கு சுமார் 300 பேர் வந்து முற்றுகையிட்ட செய்தி தொலைக்காட்சியிலும், பத்திரிகைகளிலும் பார்த்திருப்பீர்கள். ஆகவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பழைய சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் பிரச்சினையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முனைப்போடு செயல்படுகின்ற வகையிலே 9-4-2002 அன்று நடந்த பேச்சுவார்த்தை மீண்டும் 16-4-2002 அன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது. 16-4-2002 அன்றையதினம் நடந்த பேச்சுவார்த்தையில் நிர்வாகம் கலந்துகொள்ளவில்லை. தொழிற்சங்கங்கள் மட்டும் கலந்து கொண்டன. ஆகவே பேச்சுவார்த்தை வரும் 22-4-2002 அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன். அங்கே இந்த சுமார் 5 ரூபாய் வித்தியாசம் உள்ளதைப்பற்றி நான் அந்த உரிமையாளர்களிடமும் கலந்து பேசினேன்; சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும் பேசி இருக்கிறார்கள். ஆகவே



2002 ஏப்ரல் 17] [திரு. வ.து. நடராஜன்]

குறைந்த விலைக்கு தேயிலை விற்கின்ற காரணத்தாலே நாங்கள் இதைத்தான் கொடுப்போம் என்று கோர்ட்டிலே ஓர் உத்தரவு வாங்கி இருக்கிறார்கள். தொழிலாளர்களும் முதலில் ஓர் உத்தரவை வாங்கி இருந்தார்கள். பின்னாலே அதற்குத் தடையாணை பெற்று இருக்கிறார்கள். ஆகவே, தடையாணை இருந்தாலும் தொழிலாளர்களையும், சம்பந்தப்பட்ட தோட்ட அதிபர்களையும் வைத்து 2, 3 சுற்று பேச்சுவார்த்தை பேசி முடிக்கப்பட்டுள்ளது. மீண்டும் தொடர்ந்து அந்தப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்தநேரத்திலே சொல்வதோடு, தொழிலாளர்களைக் காப்பாற்றுகின்ற வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எங்களை முனைப்போடு செயல்பட உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்திலே சொல்லி விரைவில் அதைத் தீர்த்து வைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்று சொல்லி அமர்கிறேன்.

## 5. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், இல்லை, இது கவன ஈர்ப்புத் தீர்மானம். இடையிலே, சிவ பூஜையிலே கரடி வந்தமாதிரி இருக்கிறது. திரு. ஹேமச்சந்திரன்.

## 4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) தோட்டத் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் குறைக்கப்பட்டிருப்பதால் எழுந்துள்ள பிரச்சினை—தொடர்ச்சி

***திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொழிலாளர்களும், நிர்வாகங்களும் சேர்ந்து தொழிலாளர் இலாகா அதிகாரிகள் முன்னால் போடப்பட்டிருக்கிற ஒப்பந்தப்படி தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை வழங்குவதற்கு முடியாது என்று தொழிற் தகராறு சட்டம் 9(ஏ)-ன்படி நோட்டீஸ் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அந்த நோட்டீஸிலே நிர்வாகங்கள் குறிப்பிடுகிற காரணம் Taxes and levies imposed by the State Government.....

[2002 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன் ரொம்ப technical-ஆகப் போகாதீர்கள், அமைச்சரிடம் கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை, நான் technical-ஆகப் போகவில்லை. அதாவது நிர்வாகங்கள் கொடுத்திருக்கிற அறிவிப்பிலே மத்திய அரசும், மாநில அரசும் அவர்கள் மேலே போட்டிருக்கிற வரிகளும், லெவிகளும் வழியாக இப்போது உற்பத்திச் செலவுகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன; ஆகவே இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு தொழிலாளர்களுடைய சம்பளத்தைக் குறைப்பது என்பதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லியிருப்பதால் அரசு இதை நன்கு பரிசீலித்து தொழிற் தகராறு சட்டம் பிரிவு 10(பி)-யின்படி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஊதியத்தைக் குறைப்பதற்கு நிர்வாகத்தால் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஊதியத்தைத் தொடர்ந்து வழங்குவதற்கு 10(பி) தொழிற் தகராறு சட்டம் 10(பி) என்ற அந்த பிரிவைப் பயன்படுத்தி தொழிலாளிகளை பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட் ஆணை இருந்தாலும், உத்தரவு தொழில் அதிபர்கள் பெற்றிருந்தாலுங்கூட, தொழிலாளர்களைக் காக்க வேண்டுமென்ற உணர்வோடு, அவர்களுடன் இன்னமும் பேச்சுவார்த்தையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடைவெளி ஒரு 5 ரூபாய் வித்தியாசம்தான் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வதோடு அதை கூடிய விரைவில் இருவரையும் அழைத்துப் பேசி, சுமுகமான உறவில் முடித்து விடுவோம் என்பதை இந்த நேரத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம், (குறுக்கீடு) ஹேமச்சந்திரன் கேட்டுவிட்டார். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) 2002 ஆம் ஆண்டு...

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...



2002 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதுதான் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிவிட்டார், பொதுவாக (குறுக்கீடு) கந்தசாமி கேளுங்கள், ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு)...

## 5. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

**திரு. மு.பெ. சாமிநாதன்:** பேரவைத் தலைவரவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள். மற்றவை குறித்து பேசிக்கொள்ளலாம். தமிழ்நாடு...... (குறுக்கீடு)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** 15 நாட்கள் ஆகிவிட்டன. ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், காவல் துறை அதிகாரிகள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள். பேசிக்கொள்ளலாம்.

## 4. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (ஆ) தோட்டத் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியம் குறைக்கப்பட்டிருப்பதால் எழுந்துள்ள பிரச்சினை—தொடர்ச்சி

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்காத காரணத்தால்தான் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலிகூட கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தேயிலை எஸ்டேட் முதலாளிகள் தொழிலாளர்களிடம் பி.எஃப். பணத்தைப் பிடித்தம் செய்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை உரிய அலுவலகங்களில் செலுத்துவது இல்லை. மேலும் தொழிலாளர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, கந்தசாமி, நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பே கொடுக்கவில்லை. விட்டுவிடுங்கள். திரு. மணி (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். பேச்சுவார்த்தை நடந்து வருவதாகச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) கொடுக்கவில்லை. நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பே கொடுக்கவில்லை. வேண்டாம், வேண்டாம். (குறுக்கீடு) இது விதிமுறைகளுக்கு ஒத்துவராது. உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. கா. கந்தசாமி:** நான் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுக்கவில்லை, தீர்மானம் போட்ட பிறகு கொடுத்திருக்கிறார், வரவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே நீலகிரி, கோவை, கன்னியாகுமரி சேலம், தேனி போன்ற மாவட்டங்களிலே தேயிலை, காபி மற்றும் இரப்பர் ஆகிய தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் தோட்ட நிறுவன உரிமையாளர்கள் ஒன்றாக இணைந்து, அவர்கள் association வாயிலாக ஊதியக் குறைப்பு— அமைச்சர் ஊதியக் குறைப்பு என்று சொன்னார்கள்— ஊதியக் குறைப்பு மாத்திரமல்ல பணி நிலை மாற்றங்கள் என்ற நிலைகளையும் சொல்கிறார்கள்.

அதேநேரத்திலே இப்போது 5 ரூபாய் வித்தியாசம் என்று சொன்னார்கள். இதுவரையிலே வழங்கப்பட்ட ஊதியம் என்பது, தினக்கூலி 76 ரூபாய் 80 காசு. தற்போது வழங்குவதாகச் சொல்வது 60 ரூபாய். ஆகவே, இவ்வளவு இடைவெளி கூடாது. ஊதியம் கூடுதலாக வேண்டும். போனஸ் வேண்டும் என்று கேட்கக்கூடிய நிலையிலே இவ்வளவு ஊதியக் குறைப்பு கூடாது. நடந்த நிகழ்வு இப்போது நடைமுறையில் என்ன இருக்கிறதோ அதுவே தொடர வேண்டுமென்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேகூட சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மட்டும் கேளுங்கள். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே அதைத் தொடருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தையில் பேசியது 5 ரூபாய் வித்தியாசம்தான் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதிலே கடுமையாக முயற்சி எடுத்து, நடவடிக்கை





எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே பேச்சுவார்த்தையில் சட்டமன்ற உறுப்பினர்களும் இருந்து பேசினாலும் அதற்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆகவே தொடர்ந்து இந்தத் தொழிலாளர்களைக் காக்க வேண்டும் என்ற உணர்வோடுதான் அம்மா அவர்கள் கடுமையான முயற்சியில் ஈடுபட்டு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்; தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இப்போது உற்பத்திச் செலவு அதிகமென்பதால் 5 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது என்பதைத்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் இருவருக்கும் பேச்சுவார்த்தை முடிந்து விடும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி, ஒரு கேள்வி வேண்டுமானால் கேளுங்கள், அந்தப் பகுதி என்பதால், (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவரவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதை ஹேமச்சந்திரன் கேட்டுவிட்டார்; உங்கள் தலைவர் கேட்டுவிட்டார், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் தலைவர் விளக்கமாகக் கேட்டுவிட்டார். உட்காருங்கள். கந்தசாமி, ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.

*முற்பகல் 11-45*

**திரு. கா. கந்தசாமி:** தேயிலைத் தொழிலாளர்களுக்கு உரிய கூலியைப் பெற்றுத்தர அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்வதோடு நீலகிரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தொழிலாளர் நலத் துறை அமைச்சர். என்ன சொல்வார்? அமைச்சர், சொல்லுங்கள், பேச்சுவார்த்தை நடக்கிறதா?

**மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்:** ஆமாம், பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

**(அ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு.* (குறுக்கீடு) அறையில் வந்து பேசுங்கள்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



V211,3' P02
P02.21.2



## 7. அறிவிப்புகள்

**(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

**(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு,* மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

224492
சென்னை-600 008

[2002 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்." எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2002 ஏப்ரல் 17] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள் 2002-2003, விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 33 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 40 - ஊரக வளர்ச்சித் துறை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும், வாக்கெடுப்பும். திரு.டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சித் துறை மானிய கோரிக்கைகளில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. எங்களை வாழவைத்து, வழிநடத்திக்கொண்டிருக்கின்ற சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கு நன்றி கூறி பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன்.

தமிழகத்தில் தற்போதுள்ள 6.2 கோடி மக்களில் 3.4 கோடி மக்கள் அதாவது 56 சதவிகித மக்கள் கிராமப் பகுதியிலே வசிக்கிறார்கள். இங்குதான் பொருளாதாரத்தின் முதுகெலும்பான விவசாயம், நெசவு, கால்நடைத் துறை, மீனளம், நீர்ப்பாசனம், சுரங்கம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்தொழில்களையே மிகுதியான பேர் நம்பி வாழ்ந்து கொண்டிக்கின்றனர். இவர்களுடைய வாழ்க்கை வளம் பெற்றால்தான், தமிழகம் ஒரு முன்னோடி மாநிலமாக திகழ முடியும். இன்னும்

4 ஆண்டுகளில் வறுமையை ஒழிக்க ஓர் இலக்கையும் அடைய முடியும். தமிழகத்தின் பரிபூரண வளர்ச்சியானது இந்த ஊரகப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் தரமான வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். இவ்வளவு சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்த ஊரக வளர்ச்சியைப் பற்றியோ, அதற்கான திட்டங்களைப் பற்றியோ இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எதையும் அறிவிக்கவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை. முக்கியத்துவம் வர்ய்ந்த ஒரு துறைக்கு அரசு அளிக்கும் முக்கியத்துவம் இதுதானா என கேட்க விரும்புகிறேன். ஊரக வளர்ச்சிக்கான பழைய திட்டங்கள் மட்டும்தான் செயல்படுத்தப்படுமா? பல வாய்ப்புகள் உள்ள புதிய திட்டங்களை அரசு தயாரிக்கவில்லையா? அல்லது அதற்கான அக்கறையை இந்த அரசு செயல்படுத்தவில்லையா?

(முற்பகல் 11-50)

மேலும் கடந்த சில ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வந்த சில திட்டங்களுமே கைவிடப்படும் நிலையை நிதிநிலைக் குறிப்பு பகுதி-I பக்கம் காட்டுகிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கிராமங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அனைத்து ஜாதி மக்களும் சமத்துவமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு வாய்ப்பளித்தது. இது கிராமங்களின் ஒருங்கிணைந்த திட்டமாகவும் செயல்பட்டு வந்துள்ளது.

அதேபோன்று 'நமக்கு நாமே திட்டம்' சேமிப்பையும், தன்னம்பிக்கையுமூட்டி, மக்களை வளர்ச்சிப் பணியில் பங்கேற்கும் குணாதிசயடைய திட்டமாக இருந்தது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக சென்ற ஆண்டு ரூ.7.5 கோடி ஒதுக்கப்பட்டு, அது திருத்த மதிப்பீட்டில் ரூ.6 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அது இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கும் இந்த ஆண்டில் நிதி பூஜ்யமாக உள்ளது. இதற்கான காரணம் என்ன என்பதை அரசு விளக்குமா? மாநில அரசு இத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கவில்லையெனில், மத்திய அரசும் தனது பங்கினைக் குறைத்துக் கொள்ளும். இதனால் கிராமப்புற வேலை வாய்ப்பில் மந்தம் ஏற்படாதா? ஏற்கெனவே வேலை வாய்ப்பின்றி பல குடும்பங்கள் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கும்போது,



வேலைவாய்ப்பைப் பறிக்கும் வகையில் நிதியைக் குறைத்தால், தமிழகத்தின் வறுமை அதிகரிக்காதா? அப்படியிருப்பின், இன்னும் நான்கு ஆண்டுகளில் வறுமையை ஒழிப்போம் என்பது வெறும் கனவுத் திட்டம்தானா?

பொது வளர்ச்சிக்கான 2001-2002 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1669.75 கோடியாக இருந்தது, நிதிநிலைக் குறிப்பு பகுதி-2 பக்கம் 353-ல். ஆனால், அது திருத்த மதிப்பீட்டில் ரூ.1027.35 கோடியாகக் குறைந்துள்ளது. இந்தக் குறைவுக்கு காரணம் என்ன? எதிர்பார்த்தபடி திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லையா அல்லது திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தனவா? இந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ஊரக வளர்ச்சிக்கென்று ரூ.1743.28 கோடி உயர்த்தப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டின் ஒதுக்கீட்டைவிட 4.4 சதவிகிதம்தான் அதிகமாக இருக்கிறது. பல முக்கிய நன்மைகளைக் கொண்ட, 56 சதவிகிதம் மக்கள் வாழும் ஊரகப் பகுதிகளுக்கு இது போதுமானதா? அதிலும் பெருந்தொகை முழுவதும் செலவிடப்படுமா? சென்ற ஆண்டைப் போல், இந்த நிதியைக் குறைக்காமல், அரசு முழுத் தொகையையும் ஊரக வளர்ச்சிக்காகச் செலவிட வேண்டும் என அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மாறி மாறி அமைந்துள்ள அரசுகள் ஊரக வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளபோதும், கிராம மக்களின் வாழ்க்கை திருப்திகரமாகவோ, தரமாகவோ, மகிழ்ச்சியாகவோ அமையவில்லையென்பதை இந்த அரசு உணர வேண்டும். கிராமங்களின் சுய தேவையைப் பூர்த்தி செய்யாததனால்தான், மக்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களை விட்டுவிட்டு, நகரங்களுக்குக் குடிபெயர்ந்து, நகரத் தெருக்களிலும், நகர சேரிகளிலும் அல்லல்பட்டு வாழ்ந்து வருகின்றனர். இதனால் நகரத்தின் பிரச்சினைகளும் மேலோங்கி வளர்கின்றன. இன்றைக்கும் கிராமங்களில் வாழும் மக்கள் பலவகையான சமூக, பொருளாதார சிக்கல்களிலே பிணைக்கப்பட்டுள்ளனர். வறுமை, எழுத்தறிவின்மை, அறியாமை, நோய்கள், விழிப்புணர்வின்மை, அக்கறையின்மை, தேவையில்லாத மூடநம்பிக்கைகள் ஆகியவற்றில் உழன்று, தங்களது வாழ்க்கைத் திறனை பாழடித்துக் கொண்டிருக்கின்றார்கள். கிராம வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் தொடர்ந்து, முழு அளவிலும் உயர்த்துவதன் மூலம்தான் ஊரகப் பகுதிகளின் இருண்ட சூழ்நிலையை அகற்ற

முடியும். இதற்கு ஒரு புதிய அணுகுமுறை தேவை. இந்த அடிப்படையில்தான் ஊரக வளர்ச்சிக்கான பத்துக் கட்டளைகளை பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக இந்த சட்டமன்றத்தில் எடுத்துக்கூற விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(1) ஊரக வளர்ச்சி என்பது மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தரமான வாழ்க்கையை அளிப்பதற்கும் தேவையான திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அதற்குப் போதுமான நிதி தேவை. அந்த நிதி, மக்கள் தொகைக்கேற்ப அமைய வேண்டும். ஆனால், இந்த முறையை தமிழக அரசு கடைப்பிடிக்கத் தவறிவிட்டது. உதாரணமாக, 9-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவிடப்பட்டுள்ள ரூபாய் 25,000 கோடியில், ரூபாய் 2.201 கோடி மட்டும் ஊரகத் துறைக்காகச் செலவிடப்பட்டது. விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், ஊரகத் துறை மற்றும் நீர்ப்பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு போன்ற அனைத்து ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கும் சேர்த்து ரூபாய் 6193 கோடி மட்டும்தான் செலவிடப்பட்டது. அதாவது 56 விழுக்காடு மக்கள் ஈடுபட்டுள்ள தொழில்கள் அனைத்திற்கும் சேர்த்து திட்ட ஒதுக்கீடு 25 சதவிகிதம்தான் இருந்து வருகிறது. இது ஒரு நியாயமற்ற நிதி ஒதுக்கீட்டு முறையாகும். திரு. வி.பி. சிங் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்தபோது, மொத்த நிதி ஒதுக்கீட்டிலும், வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலும், ஊரக வளர்ச்சிக்காக 50 சதவிகிதத்தை ஒதுக்கினார் என்பதை நினைவுகூற விரும்புகிறேன். அந்த மாதிரியைப் பின்பற்றி தமிழக அரசு 10-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே மொத்த முதலீட்டில் 50 சதவிகிதத்தை ஊரக வளர்ச்சிக்காக ஒதுக்கவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வேண்டிக்கொள்கிறது. உயர்த்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டினால்தான் அரசு ஊரக வளர்ச்சிக்கு ஒரு சிறப்புக் கவனத்தைச் செலுத்த முடியும்.

(2) ஊரக வளர்ச்சித் துறையால் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டபோதும், அதனால் மிகுந்த பயன் ஏற்படவில்லை. ஏனெனில், இத்திட்டங்களிடையே ஓர் ஒருங்கிணைப்பு இல்லாததனால்தான். எனவே, தற்போதுள்ள திட்டங்கள் கீழ்க்காணும் முறையில் வகைப்படுத்தப்பட வேண்டும்:

முற்பகல் 11-55

(1) வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்கள்.



(2) அடிப்படைத் தேவைகளை உறுதிப்படுத்தும் திட்டங்கள்.

(3) பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மையளிக்கும் திட்டங்கள்.

இந்த மூன்று வகையாக திட்டங்களைப் பிரித்த பிறகு சில விதிமுறைகளுக்கு உட்பட்டு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இப் பணிகளை யார் நிறைவேற்றுவது என்பதைப் பற்றியும், அரசு முடிவு எடுக்க வேண்டும். அதாவது, மாநில அரசு இப் பணிகளை ஆற்றுவதா அல்லது ஊரகப் பகுதிகளிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளை வைத்து இப்பணிகளை ஆற்றுவதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரை இப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்து, அதற்கான நிதியாதாரத்தையும் மாநில அரசு ஒப்படைக்க வேண்டும். ஒவ்வொரு திட்டத்தின்கீழும் நிதியைப் பகிர்ந்தளிப்பதில், உள்ளாட்சிகளுக்கே சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

தற்போது இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி பணிகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன :

(1) மத்திய அரசின் பட்டியல் (Central List)

(2) மாநில அரசின் பட்டியல் (State List)

(3) இரண்டிற்கும் ஆன பணிகளுக்கான பட்டியல் (Concurrent List)

எங்களைப் பொறுத்தவரை உள்ளாட்சிகளுக்கான பணிகள் என்ற நான்காவது பட்டியலை மாநில அரசு உருவாக்கி இந்திய அரசியலமைப்பின் சட்டம்-11வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 பணிகளையும், (மணியடிக்கப்பெற்றது) உள்ளாட்சி அமைப்புகள்தான் செய்யவேண்டும் என்ற சட்டத் திருத்த மசோதாவைக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் நாம் உருவாக்கியுள்ள உள்ளாட்சி அமைப்புகளை, உண்மையான, மக்கள் அமைப்புக்களாக மாற்றி அவற்றை ஊரக வளர்ச்சிக்கும், தமிழக வளர்ச்சிக்கும் உண்மையான கருவிகளாகப் பயன்படுத்த முடியும்.

மத்திய மாநில அரசுகள், ஊரக வளர்ச்சிக்காக, பல திட்டங்களைச் செயல்படுத்தி இருந்தபோதும், அதனால் பயனடைந்தவர்கள் அதிகமாக இல்லை. எனவே, அனைத்துத் திட்டங்களையும் மதிப்பீடு செய்வது,

பலனைத் தரும். திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள குறைகள் என்ன, எந்தெந்தத் திட்டங்களை வைத்துக்கொள்ளலாம், எதனைவிட்டு விடலாம், எந்தப் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தலாம் என்பது போன்ற விவரங்களை அறிந்து பழைய திட்டங்களை நீக்கி, புதிய திட்டங்களைப் புகுத்தி, அரசின் பணத்தை நல்லமுறையில் பயன்படுத்த இந்த மதிப்பீடு உதவும். எனவே இந்த மதிப்பீட்டைச் செய்வதற்கு அரசு ஓர் உயர்நிலைக் குழுவை ஏற்படுத்த வேண்டும்.

ஊரக வளர்ச்சியின் நோக்கம் வறுமையை ஒழிப்பதாக இருக்கவேண்டும். ஆனால் இதற்கான மானியங்கள், உதவித் தொகைகள், சலுகைகள் அளிப்பது ஒரு குறுகிய கால பலனை அளிக்குமேயொழிய, வறுமை ஒழிப்புக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமையாது. வறுமையில் வாடும் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒரு நிலையான வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதுதான் ஒரு நிரந்தரத் தீர்வாக இருக்க முடியும். எனவே குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ற இலக்கினை மனதில் கொண்டு, குறைந்த வேலை வாய்ப்புத் திட்டம் என்ற ஒரு முறையை அரசு அமல்படுத்த வேண்டும். ஊரகப் பகுதிகளில் வேலைக்கு உள்ள தேவையைக் கணக்கிட்டு வேலை செய்யும் நபர்களே இல்லாத குடும்பத்தில் உள்ள நபருக்கு முதன் முதலில் வேலை அளிக்கப்படல் வேண்டும். இந்த முறையினால், ஓர் ஆண்டுக்குள் வேலை இல்லாத நபர்கள் இல்லாத குடும்பங்களே இல்லை என்ற ஒரு நிலையை கொண்டு வரமுடியும். அதற்குப் பிறகு மற்ற குடும்பங்களில் வேலை இல்லாதவர்களுக்கு தேவையின் அடிப்படையில் வேலை கொடுக்கலாம். வேலை அளிப்பதோடு, வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு உற்பத்திச் சொத்துக்களை உருவாக்கி அவர்களின் வருமானத்தைப் பெருக்க மானியத்தோடு கூடிய வங்கிக் கடனையும் ஏற்பாடு செய்யலாம். அவர்களுக்குத் தேவையான திறமை, தொழில்நுட்பம் ஆகியவற்றை அளிப்பதற்கு தேவையான பயிற்சிகளையும், நவீன உபகரணங்களையும் வழங்கலாம். விவசாயத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களையும், வறுமை ஒழிப்புத் திட்டங்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் அதிகப் பலனைப் பெற முடியும்.

மனிதவளம் மேம்பாட்டினை அடைவதற்கும், சமூக சேவைகளை கொடுப்பதற்கும், கல்வி, சுகாதாரம், சத்துணவு அதிலும் குறிப்பாக, பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டும்.



கிராமப்புறங்களில் தொலைத் தொடர்பு வசதிகளையும், சாலை வசதிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பேருந்து வசதிகள் மற்றும் அஞ்சல் வசதிகள் போன்றவற்றை அளிப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். உயர் தொழில்நுட்ப முறையில் பலன்கள் நகரத்தினைச் சார்ந்து இருப்பது மட்டுமல்லாமல், கிராமங்களுக்கும் கிடைக்குமாறு சிறப்புக் கூறு திட்டம் ஒன்றினை அரசு உருவாக்க வேண்டும். இந்த வசதிகளை கூடிய விரைவில் உருவாக்கிக் கொடுத்தால்தான், கிராமங்களும், நகரப் பகுதிகளாக மாறும். கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு மக்கள் குடிபெயர்வது குறைக்கப்படும் அல்லது தடுத்து நிறுத்தப்படும்.

கிராமச் சூழ்நிலையில் வறுமை, கல்லாமை, மூட நம்பிக்கைகள், அடிமைத்தனம் ஆகிய அனைத்து சமூக நோய்களாலும் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களாக இருக்கின்றனர். எனவே பெண்களை மையமாக வைத்து திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும். அரசின் ஊரக வளர்ச்சித் திட்டம் ஒவ்வொன்றிலும், 'பெண்கள் சிறப்புக் கூறு திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். அட்டவணை பிரிவினர் மற்றும் பழங்குடியின பெண்களிடையே எழுத்தறிவைப் பெருக்க சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படவேண்டும். மேலும், சுய வேலைவாய்ப்பு பயிற்சி சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் போன்ற திட்டங்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) அதிக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். மகளிருக்கான ஒருங்கிணைந்த துப்புரவுத் திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** வாழ்க்கையின் அடிப்படைத் தேவையான சுத்தமான குடிநீர் கிடைப்பது அரிதாகி வருகிறது. இந்தியாவில் தண்ணீர் பற்றாக்குறையினால் அவதியுறும் ஆறு மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாக மதிப்பிடப்பட்டு இருக்கிறது.

நிலத்தடி நீர் வேகமாகக் குறைந்து வருவதும், மழைநீரைச் சேமித்து வைக்கத் தவறியதும் குடிநீர்ப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும். ஊரகப் பகுதிகளில் அனைவருக்கும் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு குறைந்தது 40 லிட்டர் குடிநீர் அளிக்கப்பட வேண்டும். தமிழகத்திலுள்ள ஊரகக் குடியிருப்புகளில் 10,702 குடியிருப்புகளுக்கு இந்த இலக்கு இன்னும் எட்டப்படவில்லை. மாநிலத்தின் பல

மாவட்டங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை பல வேறுபாடுகளோடு இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் குடிநீரில் இரசாயனக் கலப்பும், உப்புக் கலப்பும் அதிகமாகி வருகின்றன. நகர்ப்புறப் பகுதிகளிலும், குடிநீர் வழங்கல் திருப்திகரமாக இல்லை. குறைந்தது 50 சதவீதம் ... (மணியடிக்கப்பெற்றது)

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) முடித்துவிடுங்கள். ஒரு மணிக்குள்ளே முடித்து அமைச்சர் reply சொல்லவேண்டும்.

**திரு. டி.கே. இராஜா:** அதோடு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை வேலூருக்கு அமல்படுத்துவதிலே நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அதே வேளையிலே இன்றைக்கு பாலாறு என்று சொல்லக்கூடிய தாயாறு பாழாய்ப் போய்க்கொண்டிருக்கிறது. நிலைமை என்னவென்று பார்த்தோமென்று சொன்னால், இங்கே தோல் பதனிடும் கழிவுநீரால் இந்தப் பாலாறு பாழாய்ப் போகின்றது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏன் உலகத்திலே மூன்றாவது யுத்தம் வருமென்று அறிஞர்களும், வல்லுநர்களும் சொல்கிறார்கள். அந்த யுத்தமாகப்பட்டது அங்கே வன்முறையாலும் அல்லது சமூக சீர்கேட்டாலும் வராது. அது குடிதண்ணீருக்காக அந்த மூன்றாம் உலக யுத்தம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக இந்தியாவில் யுத்தம் வரும்; அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கும் கர்நாடகாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் ஆந்திராவுக்கும் குடிநீர் பிரச்சினைகள் வரும் என்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் நன்றி சொல்ல வேண்டுமென்று சொல்கிறார். திரு. சிவபுண்ணியம் நீங்கள் பேசுங்கள். அவர் பேசிக்கொண்டே போகிறார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்



துறை, ஊரக வளர்ச்சித் துறை மானியங்களின் மீது பேசுவதற்காக வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2002-2003 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களாக கிராமப்புறங்கள் சீரமைப்புத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மையக் கட்டடத் திட்டம், கதிரடிக்கும் களங்கள் அமைப்புத் திட்டம் போன்ற திட்டங்களைப் புதிய திட்டங்களாக அறிவித்து இருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, குடிநீர்ப் பிரச்சினை என்று சொல்லும்போது, கிராமப்புறங்களிலே இருக்கிற குளங்களைச் சீரமைப்பது என்பது அத்தியாவசியத் தேவையான ஒன்றாகும். அதைச் சிந்தித்துச் செயல்படுத்துவதற்கான முயற்சி என்பது வரவேற்கத்தக்கது. அதிலும் குறிப்பாக 12,619 குளங்கள் இருப்பதிலே 6,309 குளங்கள் இந்த ஆண்டு திட்டத்திலேயே எடுத்துக்கொள்ளப்பட்டு சீரமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதை முறையாக, சரியாக நிர்வகித்து இந்தப் பணிகள் சரியாக நடைபெறுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இது, கிராம ஊராட்சிக்கு ஒரு குளம் என்ற அடிப்படையில் வருகிறது என்று சொல்லப்பட்டிருந்தாலும், ஊராட்சிகளிலே 50க்கு மேற்பட்ட குளங்கள் இருக்கின்றன. இருந்தாலும், ஒரு குளம் எடுப்பது ஒரு புதிய முயற்சியாக முன்முயற்சியாக இருக்கிறது. இது எல்லா வகையான திட்டங்களின் அடிப்படையிலேயும் குளங்களைத் தூர்வாருவது, ஏரிகளைத் தூர்வாருவது என்கிற திட்டத்தை மேம்படுத்தவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கதிரடிக்கும் களங்கள் என்று சொல்கிறபோது, எங்களது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலேதான் இந்தப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. வேளாண்மைத் துறை மூலமாக இதை நிறைவேற்றுவதற்கான பல கோரிக்கைகளைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சியிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுதும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே சாலைகளைப் பயன்படுத்துகிற அந்த முறையைத் தடுப்பதற்கான ஒரு வழியாகவும் சிரமப்படுகிற விவசாயிகளுக்கு பாதுகாப்பளிக்கக்கூடிய வகையிலேயும் இந்தக் கதிரடிக்கும் களங்கள் அமைப்பதென்பது ஒரு சிறந்த திட்டம்; அதுவும் ஊராட்சிக்கு ஒன்று என்று அமைக்கப்படுவதற்கான முயற்சியாக இருக்கிறது. ஓர்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 ஏப்ரல் 17

ஊராட்சியிலே நான்கு அல்லது ஐந்து குக்கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே, ஓர் ஊராட்சிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் அந்த அடிப்படையிலே அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான முயற்சியை அரசு எடுக்கவேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக குடிநீர்ப் பிரச்சினை என்பதுதான் பல நோய்களுக்குரிய ஆதாரமாக விளங்குகிறது. சமீபத்திலே உள்ளாட்சி அமைப்புகளுக்கான கருத்தரங்கிலே டெல்லியிலே பேசுகிறபோது மத்திய உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வெங்கைய நாயுடு ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். வயிற்றுப்போக்கு காரணமாகவே ஆண்டுதோறும் ஆறு இலட்சம் பேர் மரணமடைகிறார்கள் என்ற அபாயகரமான ஒரு செய்தியை வெளியிட்டார். அதற்கு அடிப்படையான காரணம் குடிநீர்தான் என்பதையும் அவர் தெரிவித்திருக்கிறார். ஆகவே பல்வேறு வியாதிகள், டைபாய்டு, காலரா, மலேரியா, எலிஜுரம் என்று ஏதோ இதெல்லாம் நீரினாலே வருகிறது என்று ஆய்விலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே தூய்மையான குடிநீர் கிடைக்காத காரணத்தினாலேயே இப்படிப்பட்ட நோய்கள் அபாயகரமான நோய்களாக உயிர் கொல்லி நோய்களாக இருக்கின்றன. ஆகவே ஆண்டுக்கு ஆறு இலட்சம் பேர் மரணமுறுகிறார்கள் என்று சொன்னால் மிகப் பெரிய கொடுமை இந்தியாவிலே நடைபெறுகிறது. ஆகவே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்கான முன்முயற்சியை மத்திய அரசாங்கம் உத்தரவாதப்படுத்த வேண்டும்; மாநில அரசும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலே குறிப்பாக பல குடிநீர்த் திட்டங்கள் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அந்தத் திட்டங்களை எல்லாம் விரைந்து நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-05*

அதேபோல குடிநீர்த் திட்டங்களை நாம் அமல்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கிறோம். கூட்டுக் குடிநீர்த் திட்டங்களானாலும் சரி, மேல்நிலைத் தொட்டிகள் அமைப்பதானாலும் சரி எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு விடுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தில் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழிந்ததற்குப் பின்னாலே



2002 ஏப்ரல் 17] [திரு. வை. சிவபுண்ணியம்]

அதிலே பழுது ஏற்பட்டுவிடுமானால், அல்லது அது உடைந்துவிடுமானால் அதைச் சரி செய்வதற்கான ஒரு தனி நிதி என்ற அமைப்பே இல்லை. ஆகவே, உள்ளாட்சித் துறையின் மூலமாக பின்னாலே அதைப் பராமரிப்பு செய்வதற்கான ஒரு நிதியை ஏற்பாடு செய்து நிரந்தரமாக பராமரிப்புப் பணிகளும் இணைந்த முறையிலே செய்வதற்கான ஒரு திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரம் என்பது இந்தியாவில் இப்போது ஒரு பிரச்சினையாக இருக்கிறது. நகர் பாலிகா, பஞ்சாயத்து ராஜ் சட்டங்களின் அடிப்படையிலே எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசு சொல்கிறது. மாநில அரசும் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், பல மாநிலங்களிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட சில நடைமுறைகள் நமது தமிழகத்திலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். குறிப்பாக, 29 துறைகளுக்கான அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என்று பஞ்சாயத்து ராஜ் சட்டம் சொல்கிறது. ஆனால், இந்த அதிகாரங்களை வழங்குவதற்கான முயற்சிகள் பல மாநிலங்களிலே இல்லை. ஆனால் சில மாநிலங்களில் அது அமல்படுத்தப்படுகிறது. குறிப்பாக நமது அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரளா, கர்நாடகம், மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலே அது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது. 29 துறைகளும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உள்ளாட்சி அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்படுத்துவதற்கான அமைப்புகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்திலே மட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது உங்கள் ஆட்சியில் மட்டுமில்லை, சென்ற ஆட்சியிலும் இந்தக் குறைபாடு இருந்தது என்பதை நான் சென்ற முறையும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். இப்பொழுதும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாநில சுயாட்சிக் கொள்கையைப் பற்றி நாம் பேசுகிற மாநிலம் இது. குறிப்பாக, அதிக அதிகாரம் வேண்டும் என்று கோருகிறோம். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயேகூட மத்திய அரசாங்கத்தைச் சாடி, குற்றம் சொல்லி, மாநிலங்களுக்கு அதிக நிதியாதாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதைத் தைரியமாகச் சொல்கிறபோது அதே தைரியத்தோடு உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரத்தையும்

வழங்குவதற்கான முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஓர் உதாரணத்திற்காகப் பார்த்தால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், நிதியைப் பொறுத்தவரையிலும் 8% நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது மிகக் குறைவாக இருக்கிறது. அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரள மாநிலம் 46% நிதியொதுக்கீடு செய்கிறது. கர்நாடக மாநிலம் 34% நிதியொதுக்கீடு செய்கிறது. மேற்கு வங்க மாநிலம் 50% நிதியொதுக்கீடு செய்கிறது. ஆனால், தமிழகத்திலே மட்டும் 8% நிதியொதுக்கீடு என்பது மிக, மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இந்த நிதியொதுக்கீட்டை குறைந்தபட்சம் *30* சதவிகிதமாவது இந்த ஆண்டே ஒதுக்குவதற்கான முயற்சிகளை எடுத்தால்தான் உள்ளாட்சி அமைப்புகள் சிறந்த நிர்வாகத்தை நடத்தி மக்களுக்கு உரிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய ஆதாரமாக அது விளங்கும். ஆகவே, தமிழக அரசு இதை கவனத்திலே கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்புக் கவனத்தின் மூலமாகவும் இந்த நிதியொதுக்கீட்டைக் குறைந்தபட்சம் *30* சதவிகிதமாவது இந்த ஆண்டு ஒதுக்குவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நிதி ஆணையம் பரிந்துரைப்படி மாதா மாதம் அந்த உள்ளாட்சிகளுக்கான நிதி வரவு வைக்கப்படும் என்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், சொல்லப்பட்டிருக்கிறபடி இப்போது நடைமுறையிலே பார்த்தால் நிதி வரவு இல்லை என்றுதான் உள்ளாட்சிகளிலே, கீழே கிராமப்புறங்களிலே சொல்கிறார்கள். *3* மாதங்கள், *4* மாதங்கள் ஆகியும் இதுவரை நிதி வந்து சேரவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை உள்ளாட்சித் தலைவர்கள் செய்ய இயலாத இக்கட்டான நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி வரவினை நமது தமிழக அரசு வைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அதிகாரங்களோடு இணைந்த முறையிலே பல ஊராட்சிகளிலே பல முயற்சிகளை எடுக்கிறார்கள். குறிப்பாக, ஆக்கிரமிப்பு அகற்ற முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று ஒரு தீவிரமான நடவடிக்கையை உள்ளாட்சித் தலைவர் எடுத்தால் அவருக்கு



அங்கே பாதுகாப்பு இல்லை. குறிப்பாக, பெண்கள் தலைவர்களாக இருக்கின்ற சில ஊராட்சிகளில் அப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. அருகிலே இருக்கிற அச்சிறுப்பாக்கத்திலே கூட அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு கொலையே நடந்துவிட்டது. ஆகவே, உள்ளாட்சி அமைப்புகளுடைய ஆதாரத்தை வளப்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்குமான முயற்சி எடுக்கிறபோது அரசும் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். காவல் துறை, வருவாய்த் துறை போன்ற அந்த துறைகளும் அதற்கு உறுதுணையாக இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்றபோது இவர்களும் உறுதுணையாக இருந்தால்தான் அது நடைபெறுமே தவிர இல்லையென்றால் தனி நபருடைய பிரச்சினையாக மாறுவதற்கான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான அதிகாரம் என்று சொல்கிற போது இந்தப் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையிலே பார்த்தால், D.R.D.A. என்ற அமைப்பு இருக்கிறது. அது இப்போது தேவையா, இல்லையா என்ற சர்ச்சை இந்திய அளவிலே இருக்கிறது. ஒரு திட்ட அலுவலரின் தலைமையிலே செயல்பாடு வருகிறது. ஆனால், பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் அடிப்படையிலே பார்த்தால் *243* எச் (சி) ஷரத்தின்படி நிதி அமைப்பில் பஞ்சாயத்துக்களுக்கான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களே வரவைப் பெற்றுக்கொள்ளலாம், செலவும் செய்துகொள்ளலாம் என்ற அதிகாரம் அளித்ததற்குப் பின்னாலே இந்த வரவு செலவுகளை செய்வதற்குரிய ஒரு அமைப்பாக மட்டும்தான் D.R.D.A. இருக்கிறது. அப்படி இருப்பதிலே இந்த பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்படி இந்த அனுமதி அளிக்கப்பட்டதற்குப் பின்னாலே இப்படி ஓர் அமைப்பு தேவையா என்பதுதான் என்னுடைய ஆழமான கருத்து. ஆகவே, இந்த D.R.D.A. என்பது இடையிலே ஒரு தரகர் வேலை போன்று இருக்க வேண்டிய அவசியமில்லை. அது இருக்குமானால் அது மாவட்ட ஊராட்சியின் தலைமையின்கீழ் செயல்பட வேண்டுமே தவிர மாவட்ட ஊராட்சியை தலைமை தாங்குகிற அமைப்பாக அது செயல்படக் கூடாது. ஆகவே, இது பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கு எதிர்மறையாக இருக்கிறது. ஆகவே, இதைப் பற்றியும் தமிழ்நாடு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

அதேபோல, இதை நான் சொல்கிறபோது, இந்த பஞ்சாயத்து ராஜ், நகர் பாலிகா சட்டங்களைப் பற்றி சொல்கிறபோது

வித்தியாசப்படுகிறது. இந்தியா முழுமையிலும் மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசம் இருக்கிறது. இந்தியா முழுமையிலும் சட்டமன்றங்கள் இருக்கின்றன. சட்டமன்றங்களுக்கு என்று ஒரு தனிச் சட்டம் இருக்கிறது. நடைமுறை நெறி இருக்கிறது. இது எல்லாமே இந்தியா முழுமையிலும் ஒரே மாதிரியாக இருக்கிறது. ஆனால், பஞ்சாயத்து ராஜ் சட்டத்திற்கும் நகர் பாலிகா சட்டத்திற்கு மட்டும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிற சூழ்நிலை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) நான் முக்கியமான செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து அனுமதிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இந்த வேறுபாடு களையப்பட வேண்டும். இது மிக முக்கியமான ஒன்று. ஏனென்றால் பஞ்சாயத்து ராஜ், நகர் பாலிகாவை ஏற்றுக்கொள்கிறோம், ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு, அது வெறும் பேச்சளவில் மட்டும் இருந்துவிடாமல், அதை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்கின்றேன். நான் குற்றம் குறையாகச் சொல்லவில்லை. ஏற்றுக்கொண்ட கொள்கையை நான் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். ஆகவே, இந்தியா முழுவதும் இந்தச் சட்டம் என்பது சட்டமன்றங்களுக்கு ஒரு சட்டம், விதி நெறிமுறைகள் ஒன்றாக இருக்கின்றன. ஆனால், இந்த நகர் பாலிகா, பஞ்சாயத்து ராஜ் மட்டும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. ஆகவே, அண்டை மாநிலமாக இருக்கின்ற கர்நாடகம், கேரளத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் இல்லை, ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, இதை ஒரே சட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியை மத்திய அரசு எடுக்க வேண்டும். இந்த மாநில அரசுகளும் அதை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி எடுத்தால்தான், உண்மையாக நகர் பாலிகா, பஞ்சாயத்து ராஜ் சட்டங்களை ஏற்றுக்கொண்டதாக அர்த்தம். அப்படிப் பார்க்கிறபோது நேற்றைக்கு முன்தினம்கூட நகர் பாலிகா பற்றி ஒரு செய்தி வந்தது. மரியாதைக்குரிய மூத்த உறுப்பினர் திரு. வினாயகமூர்த்தி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மேயர் பதவி 5 ஆண்டுகளுக்கு இருப்பதை 2 ஆண்டுகளாக மாற்ற வேண்டும். அது சுழற்சி முறையிலே வர வேண்டும் என்று சொன்னார். நான் மேயருக்கு ஆதரவு தெரிவித்துப் பேசுவது— ஓராண்டுக்கு ஒரு முறை வர வேண்டுமென்று சொல்கிறார். ஆனால், அவர் சார்ந்திருக்கின்ற, அவர் ஆதரிக்கின்ற இயக்கமாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் கொண்டு வந்த அந்த நகர் பாலிகா திட்டம் என்பதே 5 ஆண்டுகளுக்கு ஒரு



முறைதான் தேர்தல் நடைபெற வேண்டுமென்று இருக்கிறது. மேயர் வந்தால் 5 ஆண்டுகளுக்குத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், அந்தக் கருத்தை அவர் எப்படி மறுக்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை. நான் அதை எதிர்மறையாகச் சொல்லவில்லை. ஓராண்டு என்பது சாத்தியம் என்றால் நகர் பாலிகாவினுடைய அடிப்படை திட்டத்தையே மாற்றச் சொல்கிறாரா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட செய்திகள் வருகிறபோதுதான், அது நகர் பாலிகா, பஞ்சாயத்து ராஜ் சட்டங்களையும், திட்டங்களையும், நிறைவேற்றுவதிலே தடையாக இருக்கிறது.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினைக்கு ஒரு திசை திருப்பம் கொடுக்கிற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அதாவது, ராஜீவ் காந்தி அவர்கள் கொண்டு வந்த திட்டத்திற்கு எதிராக நான் ஒரு கருத்தைச் சொன்னதுபோல இங்கே அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நான் சொன்னது ஒரு suggestion, ஒரு ஆலோசனை. சட்டத் திருத்தம் வருகின்றபோது இதையெல்லாம் consider செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்றேன். நிச்சயமாக அந்தச் சட்டம் வரும்போது இதை விரிவாக நான் பேசுவேன் என்று அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் விரோதமாகப் பேசியதாகச் சொல்லவில்லை. அமைப்பு ரீதியாக செயல்படுவதை மறுத்துச் சொன்னார் என்பதற்காக மட்டுமே சொல்கின்றேன். ஆகவே, அவர்களுடைய கருத்தை பின்னாலே சொல்லலாமே தவிர இப்போது ஏற்றுக்கொண்டு இருக்கிறார் என்பதை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

அடுத்து, பாரதப் பிரதமருடைய ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, ஆயிரம் மக்கள் வாழ்கிற குடியிருப்புகளுக்குச் சாலை அமைக்கிற திட்டம். அது 2003 ஆம் ஆண்டுக்குள்ளே நிறைவேற்றப்பட வேண்டும். அதேபோல, 500 மக்கள் வாழ்கிற குடியிருப்புகளுக்கு சாலை வசதி திட்டம் வருகிற 2007 ஆம் ஆண்டுக்குள்ளே நிறைவேற்றப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் குறிப்பாக நான்கில் ஒரு சதவீதம் அளவுக்குக்கூட நம்முடைய கிராமப் பகுதிகளிலே அந்தச் சாலை அமைக்கிற திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பதை

நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அளவுப்படியாகப் பார்த்தால் கிட்டத்தட்ட 2 ஆயிரம் கிலோமீட்டர் அளவுக்குத்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் (மணியடிக்கப்பெற்றது) தமிழகத்திலே இன்னும் எத்தனை ஆயிரம் கிலோமீட்டர் சாலைகள் இருக்கின்றன என்பதை அரசு கவனித்து அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்திரா நினைவு குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் நான் வெட்டுத் தீர்மானத்தையும் கொடுத்திருக்கின்றேன். நமது மத்திய மாநில அரசுகள் சார்பிலே 34 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இது போதுமானதாக இல்லை. ஆகவே, இதைக் குறைந்தபட்சம் 50 ஆயிரத்திலிருந்து 60 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்தால்தான் அந்த வீடு கட்டுகிற திட்டம் முறையாக இருக்கும். அதுவும் ஒரு சாதாரணக் குடிசை வீட்டிற்கு இணையாகக் கட்டுவது என்பது இருக்கிறதே, அது R.C. building என்று பெயர்தானே தவிர, அதுவும் பயன்பாட்டிற்குரிய வகையிலே பார்த்தால் எதார்த்தமாக போதுமானதாக இல்லை. தமிழகம் இந்தியாவிலேயே இந்தக் குடியிருப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே சிறந்த மாநிலம் என்று மத்திய அரசாலே பாராட்டப்பட்டு கூடுதலாக நிதியைப் பெற்றிருக்கிறீர்கள் என்று சொல்கிறபோது நான் மனதார வாழ்த்திப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வாழ்த்துதலோடு இணைந்து நாமே முன்னுதாரணமாக இருந்து இந்தத் திட்டத்தை சிறப்பாக விரிவுபடுத்துவதற்கும் அதிக நிதிகளை ஒதுக்குவதற்குமான முயற்சியை எடுத்தால் இந்த வீடுகளை அனுபவிப்பவர்களுக்கு உதவியாக இருக்குமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னும் நடத்தப்படாமல் இருக்கிற ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும். அதற்குரிய பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

குறிப்பாக, ஒரே ஒரு செய்தி. வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறையிலே சில முரண்பாடுகள் இருக்கின்றன. அவற்றைச் சுட்டிக்காட்டி சில செய்திகள் சொல்ல வேண்டியது அவசியம். வருவாய்த் துறையிலே இருக்கின்றவர், இளநிலை உதவியாளராக பணியிலே சேர்ந்தால், அவர் 10 ஆண்டுகளுக்குள்ளாக உதவி வட்டாட்சியராக பதவி உயர்வு பெற்று விடுகிறார். ஆனால், ஊரக வளர்ச்சித் துறையிலே இளநிலை உதவியாளராக பணியிலே சேர்ந்தால், 10 ஆண்டுகளுக்குப் பின்னரே உதவியாளர் என்ற நிலையிலே இருக்கிறார். அந்த அமைப்புகளிலே அதாவது வருவாய்த் துறை, பதிவுத் துறை, பத்திரப் பதிவுத் துறையிலே இனச் சுழற்சி முறையிலே ஜாதி அடிப்படையிலான சுழற்சி முறையிலே அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கப்படுகிற காரணத்தினாலேயே, அவர்களுக்கு உயர்வு கிடைக்கிறது. ஆனால், ஊரக வளர்ச்சித் துறையிலே இருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தினாலே பதவி உயர்வு கிடைக்காமலேயே 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் ஒரே பதவியிலேயே இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் இந்த ஜாதிய சுழற்சிமுறையின் அடிப்படையிலே ஊரக வளர்ச்சித் துறைக்கான பதவி உயர்வு கிடைப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஒரே ஒரு விஷயம்.



கோவில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை. திருநெல்வேலி, மானூர், சங்கரன்கோவில், குருவிக்குளம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். தாமிரபரணி ஆற்றிலிருந்து கோவில்பட்டி நகராட்சிக்கு இரண்டாவது பைப்லைன் அமைத்து குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். எட்டையபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. வை. சிவபுண்ணியம்:** புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இவ்வளவு நேரம் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெற்ற தாயினும் பேரன்பு காட்டி, என்னை இந்த மாமன்றத்திற்கு, சட்டமன்ற உறுப்பினராவதற்குரிய வாய்ப்பினையும் நல்கி, இந்த அவையிலே இப்போது கருத்துக் கூறுவதற்கு உரிய நல்வாய்ப்பினை அளித்த எங்களுடைய அன்னை . இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் காணிக்கையாக்குகின்றேன்.

சூதுமதியாளர்களால் விரிக்கப்பட்ட வலையை அறுத்து மூன்றாவது முறை ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நாட்டு மக்களுக்கு ஓர் அறைகூவல் விட்டார்கள். இந்த நான்கு ஆண்டு காலத்திற்குள்ளாக தமிழகம், இந்திய துணைக் கண்டத்திலேயே, முதல் மாநிலமாக அனைத்துத் துறைகளிலும், முன்னேறுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என்று நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தினார்கள். அப்படி அறிவுறுத்திய பின்பு அதை நிறைவேற்றுகிற வகையிலே இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த முதலமைச்சரும் சிந்திக்காத சிந்தனையோடு 15 அம்சத் திட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்கள். அந்த 15 அம்ச திட்டத்தில் இருக்கின்ற திட்டங்களான ஒவ்வொரு மழைத் துளியும் சேமித்தல், பாதுகாப்பான குடிநீர், உயிரின வாழ்க்கைச் சூழல் பராமரிப்பு, உறைவிடப் பாதுகாப்பு, வளர்ச்சிக்கான கட்டமைப்பு வசதி, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை. இந்த 15 அம்ச திட்டங்களில் இப்போது குறிப்பிட்டுள்ள திட்டங்கள் இன்று நாம் எடுத்துக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கையான 33-லும், 40-லும் இழையோடியிருப்பதை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பொதுவாகவே, ஆட்சியாளர்கள் ஒரு நிதியாண்டில் கொண்டு வருகிற திட்டங்கள் அந்த நிதியாண்டிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். அதிலே மத்திய அரசு கொடுக்கிற நிதியையும் இணைத்து அந்த நிதியாண்டிலே நிறைவேற்றினால்தான் நாம் எந்த இலக்கை நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அந்த இலக்கை அடைய முடியும். அதற்கேற்ப மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கடந்த 2001-2002 ஆம் ஆண்டினுடைய குடிநீர்த் திட்டத்தை 100 விழுக்காடுகள் மட்டுமல்ல, 110 விழுக்காடுகள், 140 விழுக்காடுகள் நிறைவேற்றியிருக்கிறது. அதை இங்கே நான் பெருமையாக கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். திட்டத்தின் பெயர் தனி மின்விசைத் திட்டம், இலக்கு 4085. நிறைவேற்றப்பட்டது 4917. 120 விழுக்காடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல், கூட்டுக் குடிநீர் திட்டம் 51, முழுமையாக 100 விழுக்காடு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல், கையிறைப்பான் திட்டம், 2500 முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சிறு மின்விசைத் திட்டம் 4 ஆயிரம். இது புரட்சித் தலைவி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம். இந்தத் திட்டம் ஏழை எளிய மக்களுக்கு வரப்பிரசாதமாக இன்று காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 110 விழுக்காடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.



பிற்பகல் 12-20

அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் குடிநீர் வழங்குதல். 142 விழுக்காடுகளாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கிறது. இதே அரசு அலுவலர்கள்தான் கடந்த முறை திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுகூட இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றினார்கள். நான் வேறு எங்கும் செல்லாமல், என் தொகுதிக்கே வருகிறேன். கடந்த முறை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, 1995 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே காவேரிப்பட்டினம் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பட்டினம் பேரூராட்சிக்குக் கூடுதலாக 3 இலட்சம் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை, ரூ. 77 இலட்சத்திற்கு அனுமதி அளித்தார்கள். அது தேர்தலினுடைய கடைசி நிலையில் இருந்த காரணத்தினால், ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டு, தேர்தல் வந்த பின்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்தது. கடந்த 5 ஆண்டுகாலமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமலேயே நிலுவையில் இருந்தது. மீண்டும் 2001-ல் ஆட்சிப் பொறுப்புக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்த பின்பு அங்கே அந்தத் திட்டத்தைப் பார்க்கின்றபோது திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்தது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட குழாய்கள் தரம் வாய்ந்ததாக இல்லாத காரணத்தால், நிலுவையிலே இருந்து வந்தது. 77 இலட்சம் ரூபாய், 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி 5 ஆண்டுகாலமும் நிறைவேற்றப்படாமல் இருந்தது என்பது 1996-லேயிருந்து 2001 வரை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு செயலிழந்த அரசாக இருந்தது என்பதற்கு இது ஒன்றே எடுத்துக்காட்டு.

அத்தோடு மட்டுமல்ல, அதே தொகுதியில் புரட்சித் தலைவி அவர்கள், அங்கே புளோரைடு அதிகமாக, நச்சுப்பொருள் இருக்கின்ற காரணத்தினால் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அப்படி அறிமுகப்படுத்தப்பட்டு, தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையிலே என் தொகுதிக்குட்பட்ட கால்வேஹள்ளி, குண்டலப்பட்டி பஞ்சாயத்திலே 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டன. அப்படிக் கட்டி முடிக்கப்பட்ட

5 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும்கூட 5 ஆண்டுகாலமாக நீர் ஏற்றாமலேயே நிலுவையில் இருந்தன. மீண்டும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்புதான் அங்கே அந்த நிலை மாறி, அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. தி.மு.க. அரசு இப்படியொரு செயலிழந்த அரசாக அந்த 5 ஆண்டுகள் இருந்தன. இதைக் கருத்தில் கொண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நிதியாண்டிலே மேலும் துரிதப்படுத்துகின்ற நிலையிலே இந்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய முதல் வருடத்திலே தமிழகத்தை மறு ஆய்வு செய்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல முன் உதாரணம். எத்தனையோ மாநிலங்கள் இருந்தாலுங்கூட, பழைய திட்டங்களையே கையில் வைத்துக்கொண்டு, பழைய எண்ணங்களையே கையில் வைத்துக்கொண்டு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற காரணத்தினால் அனைத்துத் திட்டங்களும் ஆமை வேகத்தில்தான் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் இந்த 4 ஆண்டுக் காலத்திற்குள்ளாக தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக அனைத்துத் துறைகளிலும் இருக்க வேண்டும்; அதுவும் குறிப்பாக, சமூக விழிப்புணர்ச்சியுடைய மாநிலமாக இருக்க வேண்டும்; அதன் அடிப்படையிலே, அடித்தட்டு மக்களும், ஏழை எளிய மக்களும், நலிந்த மக்களும், ஆதிதிராவிடர் மக்களும், பழங்குடியின மக்களும் மற்றும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் அவர்களுடைய வாழ்க்கைத்தரமும் உயர வேண்டும் என்பதற்காக இந்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய முதல் தொடக்கத்திலேயே ஓர் ஆய்வை, மறு ஆய்வை மேற்கொண்டிருக்கிறார்கள். அப்படி மறு ஆய்வை மேற்கொண்டதன் அடிப்படையிலே தமிழகத்திலே ஊரகத்தின் வாயிலாக 80,412 குடியிருப்புகள் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த 80,412 குடியிருப்புகளும் மூன்று வகைகளாக புரட்சித் தலைவி அவர்கள் அரசு பிரித்திருக்கிறது. அதிலே முதல் வகை, முழுவதுமாக தன்னிறைவு பெற்று குடிநீர் வழங்கும் திட்டம். அதன் அடிப்படையிலே கிட்டத்தட்ட 20 ஆயிரம் குடியிருப்புகளுக்கு நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

அதற்கு அடுத்தபடியாக முழுவதும் தன்னிறைவு பெறாமல் ஒரு குறிப்பிட்ட அளவிலே தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலையிலே 51 ஆயிரம் குடியிருப்புகள் கண்டறியப்பட்டிருக்கின்றன. இவை இல்லாமல், மூன்றாவதாக 504 குடியிருப்புகள். அறவே நிலையற்ற நீர்த் தன்மை, அங்கே நீர் ஆதாரமே இல்லை. அந்த 504 குடியிருப்புகளுக்கும் இந்த ஆண்டே,— அதுதான் புரட்சித் தலைவியினுடைய அரசு— தண்ணீரே கிடைக்காத அந்த 504 குடியிருப்புகளும் இந்த நிதியாண்டிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, 6,500 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டிலே தண்ணீர் கிடைக்கக்கூடிய வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள்.



அடுத்ததாக புரட்சித் தலைவி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு மின்விசைத் திட்டம். கிராமப்புறங்களிலே, குக்கிராமங்களிலே இது மிகவும் பிரசித்திபெற்ற திட்டமாக இருக்கிறது.

பிற்பகல் 12-25

கிராமங்களிலே ஏழை எளிய மக்களைச் சென்று காணுகின்ற நேரத்திலே அவர்கள் கொடுக்கின்ற மனுக்கள் என்னவென்று சொன்னால், பக்கத்து கிராமத்திலே மோட்டார் பம்ப் போட்டால் தண்ணீர் கிடைக்கிறது. எங்களுடைய கிராமத்திலே இன்னும் போரை அடித்துக் கொண்டிருக்கிறோம்—அவர்கள் கேட்கிறார்கள் பாருங்கள், அந்த கிராமத்தினுடைய பெண்மணிகள்—அவர்களுக்கு மட்டும் அந்த அம்மையார் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஏன் அதை எங்களுக்குச் செய்யவில்லை என்று கேட்கின்றபோது புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலாக 10 ஆயிரம் சிறு மின் விசை இணைப்புகள் வழங்கியிருக்கிறார்கள். இப்படி 10 ஆயிரம் சிறு மின் விசை இணைப்புகள் வழங்கியதில் 4 ஆயிரம் ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இங்கே புரட்சித் தலைவி அரசுக்கு நான் வேண்டுகோளை வைக்கின்றேன். இந்த சிறு மின் இணைப்பு வசதியை— நிறைய கிராமங்களில் நீர் ஆதாரம் தேடுகின்ற நேரத்திலே கிராமப்புறங்களுக்கும் அல்லது மின்சாரம் சென்று கொண்டிருக்கின்ற மின்சார லைனுக்கும் சற்றுத் தொலைவாக நீர் ஆதாரம் கிடைக்கிறது. அப்படி நீர் ஆதாரம் கிடைக்கின்ற நேரத்திலே மின் பொறியாளர்கள் எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை, குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அதிகாரிகள் எங்களுக்கு அந்த நிதி ஒதுக்கப்படவில்லை, எனவே மின்சாரம் செல்லக்கூடிய பகுதியில் கிடைத்தால் நாங்கள் அந்த மின் இணைப்பைக் கொடுக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் வாயிலாக புரட்சித் தலைவி அரசை வேண்டுவது, இதுபோன்ற சற்று தொலை தூரங்களில் ஒரு மின் கம்பமோ அல்லது இரண்டு மின் கம்பங்களோ சேருகிற அளவுக்கு வருகின்ற, நீர் ஆதாரங்கள் கிடைத்தால் அதை நிறைவேற்றுவதற்குரிய நிதியை ஒதுக்கித் தரும்படி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கா.பூ. முனுசாமி] [2002 ஏப்ரல் 17

அதோடு மட்டுமல்ல, இங்கே சில தலைவர்கள் உறவு முறையைச் சொல்லி, ஒடுக்கப்பட்ட, நலிந்த, ஆதிதிராவிட, பழங்குடி மக்களுடைய காவலர்களாகச் சுட்டிக்காட்டிக் கொள்கிறார்கள். அதேபோல ஏதோ தான் பிறந்த சமூகம் என்பதாலே நாங்கள்தான் இந்தச் சமூகத்திற்கு அனைத்தும், இந்தச் சமூகம் எங்களால்தான் உய்வு பெற வேண்டுமென்று மேடையிலேயும், அவையிலேயும்கூட சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எப்போதுமே, எந்தச் சூழ்நிலையிலுமே ஒரு சமூகத்திற்கு, ஒரு நலிந்த சமூகத்திற்கு, ஓர் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு உதவி செய்யக்கூடிய திட்டங்களை யார் தீட்டுகிறார்களோ அவர்கள்தான் உண்மையான காவலர்கள். இங்கே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உறவு கொண்டாடுவோரைப் பற்றியும், அந்தச் சமூகத்தில் பிறந்த காரணத்திற்காகவே நாங்கள்தான் காவலர்கள் என்று சொல்வதற்கும் பதிலடி கொடுப்பதுபோல மனித நேயம் கொண்ட தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரிய திட்டங்களை, மிகச் சீரிய திட்டங்களை, சமூக விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகின்ற திட்டங்களைக் கொடுத்திருப்பதை நான் ஆதாரமாகக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஏதோ மேடைப் பேச்சல்ல. ஏதோ காலச் சூழ்நிலைக்கு தகுந்த மாதிரி பேசிவிட்டுச் செல்லக்கூடிய இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இயக்கத்தினுடைய தலைவி எங்களுடைய அன்னை புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு திட்டத்தைக் கொண்டுவருகிறபோதும், அந்தத் திட்டம் நேரடியாக ஏழை எளிய மக்களை சென்றடையக்கூடிய நிலையிலே சிந்தித்து, சிந்தித்த பின்பு அதை முறைப்படுத்தி வகுத்து, வகுத்ததற்குப் பின்பு அதிகாரிகளை அழைத்து இதை நிறைவேற்றுங்கள் என்று உத்தரவிடக்கூடிய நிலையிலேதான் புரட்சித் தலைவி இருக்கிறார்களே அல்லாமல், அதிகாரிகள் சொல்வதைக் கேட்டு திட்டங்கள் தீட்டுகின்ற தலைவியாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இல்லை என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதன் அடிப்படையில்தான் இந்த ஆதிதிராவிட சமூகத்திற்கும், பழங்குடி மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் மிகப் பெரிய திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 2001-2002-ல் 2000 ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு நீர் வழங்கியிருக்கிறார்கள். ஒதுக்கி கொடுக்கப்பட்ட தொகையில் 22 விழுக்காடு கொடுத்திருக்கிறார்கள்.



2002 ஏப்ரல் 17] [திரு. கா.பூ. முனுசாமி]

இங்கே கூட ஓர் உறுப்பினர் சொன்னார். ஆதிதிராவிட சமூகத்திற்கு தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை கொடுக்க வேண்டுமென்று சொன்னார். அதைமட்டும் சொல்லவில்லை. அவர் ஆதிதிராவிட மக்களுக்கு 2.7 விழுக்காடுதான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார். (மணியடிக்கப்பெற்றது) ஆனால் இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன், இங்கே புரட்சித் தலைவி அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற திட்டங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு குடிநீர் என்று சொன்னால் இது பொதுவாகக் கொடுக்கின்ற திட்டங்கள் - இந்தச் சமூகத்திற்கு மட்டும் அல்ல, தமிழகம் முழுவதற்கும் ஒதுக்கப்பட்ட திட்டத்திலே 22 விழுக்காடு 2001-2002லே கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய மதிப்பு ரூ. 411.92 கோடியை அந்த மக்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல இந்த நிதியாண்டில் 2002-2003-ல் 6500 குடியிருப்புகளில் 2000 குடியிருப்புகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். 10 ஆயிரம் சிறு மின் விசைத் திட்டத்தில் 4000 அதாவது 40 விழுக்காடு கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த வகையில் இந்த மக்களுக்கு புரட்சித் தலைவி திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதை இங்கே நாம் உன்னிப்பாகப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12-30

அதோடு மட்டுமல்ல, கல்வித் துறையை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், 100 விழுக்காடு— ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்கு கடந்த ஆண்டு, 20 கோடியை ஒதுக்கினார்கள். இந்த ஆண்டு 6 கோடியை ஒதுக்கி 100 விழுக்காடு அந்தச் சமூகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல, இந்திரா நினைவுக் குடியிருப்புகள். —மத்திய, மாநில அரசுகள் — இங்கே சொல்லுவார்கள். நம்முடைய எதிர்க்கட்சி தோழர்கள் சொல்லுவார்கள்; இவர்கள் பணமா கொடுக்கிறார்கள்? மத்திய அரசு தானே கொடுக்கிறது என்று சொல்வார்கள். மத்திய அரசு கொடுக்கிற நிதிக்கும் நான் வருகிறேன். இந்திரா நினைவுக் குடியிருப்பில் மத்திய அரசு கொடுக்கின்ற 60 விழுக்காடுகள் மட்டுமல்லாமல் இந்தச் சமூகத்திற்கு புரட்சித் தலைவி அவர்கள் அரசு கூடுதலாக இன்னும் 25 விழுக்காடுகள் சேர்த்து (மேசையைத் தட்டும் ஒலி) 85 விழுக்காடுகள் மானியமாக வழங்கி கிட்டத்தட்ட 40,000 வீடுகள் கட்டுகின்ற இந்த நிதியாண்டில் 32,000 வீடுகள் இந்தச்

சமூகத்திற்கு ஓதுக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களைப் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, இப்போது குடிநீரை எப்படியாவது அனைத்து மக்களுக்கும் அளிக்க வேண்டுமென்பதற்காக மழை நீரைச் சேமித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே மழை நீரைச் சேமிப்பது, நகர்ப்புறங்களிலும், மாநகராட்சிகளிலும் வீடுகளிலே உள்ள தண்ணீரைச் சேமித்து வைப்பது என்பது, அது ஒரு பக்கம். ஆனால், எங்களைப்போன்ற கிராமப்புறங்களிலே வாழ்கின்றவர்கள் மழை நீரைச் சேமிப்பதற்குப் பல்வேறு வழிகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என் தொகுதியில், என்னுடைய தொகுதிக்கு ஜீவ நதியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தென் பெண்ணையாற்றிலே வருடத்திற்குப் பெய்யக்கூடிய மழையில் 10,000 மில்லியன் கன அடி தண்ணீர் எந்தவிதப் பயனும் இல்லாமல் கடலில் கலக்கிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வந்தபின்புதான், இது ஒரு நீண்டகாலக் கோரிக்கை; இது மழை நீரைச் சேமிப்பதற்கும் எடுத்துக்கொள்ளலாம்; அத்தோடு மட்டுமல்லாமல் விவசாயிகளுக்கு உறுதுணையாக நீரைக் கொடுக்கவும் எடுத்துக்கொள்ளலாம். அதோடு மட்டுமல்லாமல், மற்ற ஏரிகளுக்குத் தண்ணீர் கொடுக்கின்ற திட்டமாகவும் எடுத்துக்கொள்ளலாம். அதனடிப்படையில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆணையிட்டு உள்ளது. எங்களுடைய ஆற்றினுடைய வலதுபுறக் கால்வாயை, கிட்டத்தட்ட 14½ கிலோமீட்டர் சென்றுகொண்டிருக்கிறது, இந்தக் கால்வாயை— நீட்டித்தால் கிட்டத்தட்ட 33 ஏரிகளுக்கு நீராதாரம் கிடைக்கும்.

பொம்மசமுத்திரத்திலேயிருந்து திண்டல் ஏரி, காரிமங்களம், இது இரண்டு தொகுதிகளுக்கும் சேருகிறது; பாலக்கோடு தொகுதிக்கும் சேர்ந்து வருகிறது. இந்த இரண்டு தொகுதிகளினுடைய ஒரு பகுதியில் தண்ணீர்ப் பற்றாக்குறை நீங்கும்; நிலத்தடி நீர் மேலே வருவதற்குரிய வாய்ப்பும் இருக்கும். இந்த 10,000 மில்லியன் கன அடி தண்ணீர், இதை நீட்டிக்கின்றபோது, எவ்வளவு தண்ணீர் மழைக் காலங்களில் எடுக்கிறோம் என்று சொன்னால், வெறும் 100 மில்லியன் கன அடி தண்ணீர் இருந்தால் போதும். அதேபோல, இடது புறத்துக் கால்வாய், இதுவும், பாலேகுழியிலிருந்து, வேலம்பட்டியிலேயிருந்து, தட்டக்கல்லிலேயிருந்து, வீரமலைவரை நீட்டித்தால் இதற்கும்



கிட்டத்தட்ட 812 ஏக்கர் நிலத்திற்கு பாசன வாய்ப்பிருக்கிறது. 20 ஏரிகளுக்கு தண்ணீர் வசதி கிடைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. இதையும், புரட்சித் தலைவி அவர்கள் அரசு இந்த மழை நீரைச் சேமிக்கின்ற திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இதற்கு அதிகப்படியாக நிதி எவ்வளவு தேவை என்று சொன்னால், குறைந்தது ரூ. 17.5 கோடிதான் இதற்குத் திட்டமாக இருக்கிறது. இதை, புரட்சித் தலைவி அவர்களின் அரசு அறிமுகப்படுத்தியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** சரி. அடுத்து ஊரக வளர்ச்சித் துறை. ஊரக வளர்ச்சித் துறையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கலாம்; புதிய திட்டங்களைக்கூட புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏரிகளைத் தூர் எடுப்பது, அதேபோல சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டடம் கட்டிக்கொடுப்பது; கதிரடிக்கும் களங்கள் கொடுப்பது, இவை எல்லாம்கூட நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால், மற்ற தலைவர்களுக்கு ஏற்படாத ஒரு சிந்தனை. கிராமப்புறத்திலே இருக்கின்ற பெண்களுக்கு காலைக் கடன் என்று தங்களுடைய கடனைக் கழிக்க முடியாது. காரணம், காலைக் கடன் என்று கிராமத்திலே இருக்கின்ற தன்னுடைய கொட்டகையிலேயிருந்து வெளியே வந்தால், அங்கே விவசாயிகள் தோள் பட்டையிலே கலப்பையை வைத்திருப்பார்கள். வயலுக்கு வந்த ஆண்கள் அங்கே நடந்து கொண்டிருப்பார்கள். காலைக் கடனைக் கழிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த பெண்கள், தங்களுடைய நடைமுறை வாழ்க்கையில் காலைக் கடனை, இரவுக் கடனாக மாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய கடனைக் கழிப்பது எப்பொழுது என்று சொன்னால், இரவிலே பார்ப்போம், கிராமங்களிலே சென்றால் 4 பெண்கள், 5 பெண்கள், சகோதரிகள் சென்று கொண்டிருப்பார்கள். எங்கே போனீர்கள் 'என்று கேட்டால் வெளிக் காட்டுக்குப் போய்விட்டு வருகிறோம் என்பார்கள். என்ன ஒரு கேவலமான நிலைமை? இந்தக் கேவலமான நிலைமையை உணர்ந்த புரட்சித் தலைவி அவர்கள் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை கொண்டுவர இருக்கிறார்கள். வேறு எந்த முதலமைச்சருக்கும் இந்தச் சிந்தனை வரவில்லை. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட சில சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்து

சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களே, இது தேவையா என்று கேட்டபோது, உடனடியாக எழுந்து, வேகமாக, 'ஆக, கிராமப்புறத்திலே இருக்கின்ற பெண்களுடைய கடமைகளை ஆற்றுவதற்கு சுகாதாரமான திட்டங்களைக் கொண்டு வருவதை நீங்கள் எதிர்க்கிறீர்களா' என்று கேட்டார்கள். 235 சட்டமன்ற உறுப்பினர்களும் அமைதியாக ஆனார்கள் மன்னிக்கவும், 234 சட்டமன்ற உறுப்பினர்களும். எவ்வளவு பெரிய திட்டம்? இதை 110 கோடி ரூபாய் முதலீட்டிலே இப்போது கிட்டத்தட்ட முழுவதுமாக நிறைவேற்றும் வகையிலே புரட்சித் தலைவி அவர்கள் கொண்டு வர இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-35

அதேபோல ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது மகளிர் சுய உதவிக் குழுக்கள். இது ஒரு வரவேற்கத்தக்க திட்டம். ஒரு மிகப்பெரிய மறுமலர்ச்சியை கிராமப்புறங்களிலே ஏற்படுத்தக்கூடிய திட்டம். ஒவ்வொரு முறை கூடுகின்றபோதும் மரத்தடியிலே பெண்கள் கூடுகிறார்கள். அல்லது வேறு எங்காவது ஓர் இடத்திலே, பொது இடத்தில் கூடுகின்றார்கள். அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்த புரட்சித் தலைவி அவர்கள் இது ஏன், எப்படி என்று சிந்தனை செய்தார்கள். வேறு தலைவனுக்கு வரவில்லையே, வேறு முதலமைச்சருக்கு வரவில்லையே; ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே வரப்பெற்றிருக்கிறது. முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுக்கு வராத சிந்தனை, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய சிந்தனைகள் நேரடியாக ஏழையெளிய மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கக்கூடிய சிந்தனைகளாக இருக்கின்றன. அந்தச் சகோதரிகள் பொது இடத்திலே உட்கார்ந்து கொண்டு நியாயம் பேசாமல், அழகாகக் கட்டடங்களைக் கட்டி, அங்கே உட்கார்ந்து கொண்டு அவர்களுடைய கருத்துகளைச் சொல்லுவதற்கும், அவர்களுடைய சபையை நடத்துவதற்கும், புரட்சித் தலைவி அவர்கள் வழி செய்திருக்கிறார். கிராமப்புறங்களிலே இருக்கிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆண்கள் மட்டும் முக்கியமல்ல; அவர்கள் தவறு செய்கிறார்கள்; ஆதாயம் தேடுகிற வகையிலே நியாயத்தை மாற்றிப் பேசுகிறார்கள். உண்மையாக ஏழையெளிய பெண்களுக்கு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அங்கே நிவாரணம் கிடைப்பதில்லை. ஆனால் பெண்களே ஒன்றுகூடி ஒரு பிரச்சினையை முன் வைப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக அந்தப் பெண்களுக்கு நியாயமான நீதி கிடைக்கும் என்ற அடிப்படையிலே இந்த நியாயத்தைப் பேசுவதற்கும், தங்கள் திட்டங்களைத் தீட்டுவதற்கும், அந்தத் திட்டங்களின் வாயிலாக பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வதற்கும் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கிராம ஊராட்சிக்கு ஒரு கட்டடம் என்ற விகிதத்திலே கட்டடம் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள். முதல்கட்டமாக நடப்பாண்டில் ரூ. 47 கோடி அளவில் 6,309 கட்டடங்களை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் புரட்சித் தலைவி அவர்களுடைய சிந்தனை பொதுவுடைமை இயக்கம் ஆண்டு கொண்டிருக்கிற மேற்கு வங்கத்திற்குக்கூட வராத சிந்தனை இங்கே வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இங்கே சொன்னார்கள், பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் இங்கே சட்டமன்றத்திலே பேசுகிறபோது—அவர்கள் எப்போதுமே நம்மைப் பற்றி பேசுவதில்லை. சொன்னால், ரஷ்யா என்று சொல்கிறார்கள். (சிரிப்பு) இப்போது ரஷ்யாவை மறந்து விட்டார்கள். (சிரிப்பு) ஏன் என்றால், அந்த நாடு சிதறுண்டு விட்டது. அங்கே இப்போது முதலாளித்துவம் வந்து விட்டது. இப்போது இந்தியாவினுடைய ஒரு பகுதி மேற்கு வங்கத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆனால், சொல்கின்ற கருத்து நியாயமாக இருந்தால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஹேமசந்திரன் அவர்கள் சொல்கின்றபோது, நம்முடைய P.D.S.-ல் ரூ.3.50க்கு விற்கக்கூடிய அரிசியைப்பற்றி வேறு விதமாகச் சொன்னார். சொன்னபோது, புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக பதில் கூறினார்கள். உடனடியாக அவர் எழுந்து இன்னொரு கருத்தைச் சொன்னார், இதனுடன் (குறுக்கீடு) 14 ஐட்டங்கள் எல்லாம் சேர்த்திருக்கிறோம் என்று. சொன்னதோடு சரி. (குறுக்கீடுகள்) சொன்ன கருத்தைச் சொல்லி விடுகிறேன்.(குறுக்கீடுகள்)

**திரு. கே.சி. கருணாகரன்:** எங்களுக்கு அனுமதி கொடுங்கள். தயவு செய்து பேச அனுமதி கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதிநிலை அறிக்கை மீதான தன்னுடைய எல்லா கருத்துகளையும் சொல்லிக் கொண்டிருந்தார். அமைதியாக எல்லோரும்

[திரு. கே.சி. கருணாகரன்] [2002 ஏப்ரல் 17

கேட்டுக்கொண்டிருந்தோம். இப்போது மேற்கு வங்க அரசாங்கத்தைப் பற்றியோ, ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்டிருக்கிற சீர்குலைவு பற்றியோ விவாதம் நடத்த தயார் என்றால், விளக்கம் சொல்லத் தயார் என்றால், நாங்களும் தயாராக இருக்கிறோம். ஆனால், இந்தச் சபையினுடைய நேரமும், அலுவலும் கெட வேண்டாம் என்பதற்காகப் பேசாமல் இருக்கிறோம். இரண்டாவது 14 பொருட்கள். (குறுக்கீடு) ஒரு விஷயம், மேற்கு வங்க அரசாங்கத்தால் விநியோகிக்கப்படுகிற 14 பொருட்களின் பட்டியல் சபாநாயகர் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசி முடித்துவிடுங்கள், உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கொடுக்கப்பட்ட பட்டியலினுடைய விலைப் பட்டியல்தான் எங்களுக்கு என்ன என்று தேவை. அரிசி கொடுக்கிறீர்கள், அந்த அரிசியினுடைய விலை என்ன, அதுதான் எங்களுக்கு முக்கியம் (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு உறுப்பினர்...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றத்தில் ஒரு தெளிவான சிந்தனையுடைய முதலமைச்சரின் ஆட்சி இருக்கின்ற காலத்தில் இந்தச் சிந்தனைகளுக்கு மேல் உங்களுக்கு சிந்தனை வந்து, கருத்துகள் நியாயமாக இருந்து சொன்னால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார். ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டுவதற்கு ரூ. 6 இலட்சம் ஆவதை மேற்கு வங்கத்திலே ரூ. 3 இலட்சம் ஆகிறது என்று சொன்னார். அது எப்படி சாத்தியக்கூறாகிவிடும்? நான் கேட்கிறேன். பொறியியல் வல்லுநர்கள் இருக்கிறார்கள். கணக்குப் போடுவோம். 3 இலட்சமானால் அதை ஏற்றுக்கொள்ளத் தயார். தமிழ்நாட்டிலே



2002 ஏப்ரல் 17] [திரு. கா.பூ. முனுசாமி]

திட்டங்கள் கொண்டு வருவதற்குத் தயார். எனவே தவறான கருத்துகளைச் சொல்வது மரபு இல்லை என்பதை இந்த நேரத்திலே கூறி, இறுதியாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

*பிற்பகல் 12-40*

**திரு. கா.பூ. முனுசாமி:** இறுதியாக தமிழகத்தினுடைய அனைத்து வளர்ச்சிகளுக்கும் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இந்த 4 ஆண்டு காலத்திற்குள் இந்தத் தமிழகம் இந்திய துணைக் கண்டத்தின் முதல் மாநிலமாக வருவதோடு மட்டுமல்லாமல், நாளை உலக அளவிலே இருக்கின்ற எந்த நிறுவனங்கள் வந்தாலும், தமிழகத்திற்குச் செல்லுங்கள், இந்தத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்று (மேசையைத் தட்டும் ஒலி) சொல்கின்ற வகையிலே புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி அமையும் என்று கூறி, எனக்கு வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி பகர்ந்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அரசன் அவர்கள், பாரதிய ஜனதா அரசன் அவர்கள்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே உரையாற்றுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய பணிவன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காந்தி கண்ட இராம இராஜ்யம்தான் இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சி என்றும், நகராட்சி என்றும் பெயர் மாற்றி வழங்கப்படுகிறது என்பதை என்னுடைய உரையினுடைய தொடக்கத்திலே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காந்தி அவர்கள் இராம இராஜ்யத்தைப் பற்றிச் சொல்கிறபோது கிராமத்திலே இருக்கிற மக்கள், கிராமத்திலே வாழ்கிற மக்கள் தங்களுக்குத் தாங்களே திட்டம் போட்டு, அங்கேயே திட்டங்களைத் தீட்டி, தங்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற அளவிற்கு இராம இராஜ்யம் அமைய வேண்டுமென்ற ஓர் அரிய தத்துவத்தைச் சொன்னார்கள். அதனுடைய அடிப்படையிலேதான்—இன்றைக்கு மட்டுமல்ல, நம்முடைய பழம்பெரும்

மன்னர்கள் ஆண்ட காலத்திலிருந்து உள்ளாட்சி அமைப்புகள் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் கிராமத்திலே 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது' என்று சொல்லும் பழமொழியைப் போல, வந்த ஒவ்வோர் அரசாங்கமும் உள்ளாட்சிகளுக்கு இருந்த அதிகாரத்தைப் பறித்து, தங்களுடைய கையிலே வைத்துக் கொண்டன என்பதை நான் இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காங்கிரஸ் இந்த மாநிலத்தை ஆண்டபோது District Board என்று சொல்லப்படுகின்ற மாவட்டக் கழகங்கள் உள்ளாட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கழகமாகச் செயலாற்றின என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி மாவட்டக் கழகங்கள் உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதியாக இருக்கிற காலத்தில் மாவட்டத்திலே இருக்கிற, மாவட்டத்தின் திட்டத்திலே இருக்கிற ஏறத்தாழ 60 சதவிகித அதிகாரத்தை வைத்து, கல்வி மற்ற நிறைய அதிகாரங்களை வைத்துக் கொண்டு மிகச் சிறப்பாக ஆட்சி செய்து கொண்டிருந்தன. அதற்குப் பின்னாலே காமராஜர் ஆட்சிக் காலத்திலேயும், அந்த மாவட்டக் கழகங்கள் ஒழிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்ட காலத்திலேயும் நம்முடைய உள்ளாட்சிகளுக்கு மிகப் பெரிய அதிகாரம் எல்லாம் இருந்தன. ஆனால் காலப்போக்கில் மிகப் பெரிய சாதனைகளைச் செய்கிறோம், மிகப் பெரிய சிந்தனைச் சிற்பிகள் நாங்கள்தான் என்று சொல்லி, உள்ளாட்சிகளுக்கு மாற்றங்களைக் கொண்டு வருகிறபோது, பல்வேறு திட்டங்களைச் சொன்னார்கள். நகர் பாலிகா என்றெல்லாம் திட்டங்களை வகுக்கிறபோது, உள்ளாட்சிகளுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பறித்து, சட்டமன்றங்களிடத்திலே கொடுத்துவிட்டார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் உரையாற்றுகிறபோது தெளிவாகச் சொன்னார்கள். சட்டமன்றங்களிடத்திலே அதிகாரத்தைக் கொடுத்ததற்குப் பின்னாலே அங்கே இருக்கிற சட்டமன்றங்கள் என்ன நினைக்கின்றனவோ அதைத்தான் உள்ளாட்சிகளுக்கு அதிகாரமாகத் தந்திருக்கிறார்கள். நான் கேள்விப்படுகிறேன். பல்வேறு மாநிலங்களிலே பிளஸ் 2 வகுப்பு இருக்கிற பள்ளிக்கூடங்களைக்கூட உள்ளாட்சி அமைப்புகள் நடத்திக் கொண்டிருக்கின்றன. கால்நடை மருத்துவமனைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. கிராம மருத்துவமனைகளை நடத்திக்



கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 30 அதிகாரங்களை உள்ளாட்சிகள் பல்வேறு மாநிலங்களிலே வைத்திருக்கின்றன. ஆனால் நம்முடைய மாநிலத்திலேதான், நம்முடைய மாநிலத்தைப் போல சில மாநிலங்களிலேதான் உள்ளாட்சிகளுக்கு அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். திட்டங்கள் கிராமத்திலேயிருந்து தொடங்கப்பட வேண்டும் என்றுதான் நான் இந்த நேரத்திலே என்னுடைய இயக்கத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல கிராமங்களிலே 57 சதவிகித மக்கள் வாழ்வதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 57 சதவிகித மக்கள் வாழ்கிற பகுதிக்கு நிதிநிலை அறிக்கையிலே 8 சதவிகித நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலேயும் இந்தத் துறையினுடைய முக்கியத்துவத்தைச் சொல்லி, இந்தத் துறையின் அவசியத்தை எடுத்துச் சொல்லி, இந்தத் துறையிலே பணியாற்றுகிற காரியங்களை எடுத்துச் சொல்லி, நிறைய நிதியை நம்முடைய அமைச்சர் அவர்கள் பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

அதைப்போல நம்முடைய ஊரக வளர்ச்சித் துறையிலே ஏறத்தாழ 6309 குளங்களைச் சீரமைப்பதற்காக 63 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஏறத்தாழ 1 குளத்திற்கு 1.00 இலட்சம் ரூபாய் என்றுதான் வருகிறது. ஒரு லட்சம் ரூபாயிலே நிச்சயமாக அந்தக் குளங்களை முறையான அளவிலே சீரமைக்க முடியாது. இரண்டு ஆண்டுகளிலே சீரமைக்க வேண்டுமென்று நீங்கள் திட்டமிட்டு இதைச் சொல்லியிருக்கிறீர்கள். நான் பணிவன்போடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், இதை 3 ஆண்டுகள் என்று சொல்லி, ஓர் ஆண்டிற்கு 4000 குளங்களைச் சீரமைக்கிற அளவிற்குத் திட்டமிட்டு,

இந்த நிதியை 1.00 இலட்சம் என்பதை 1.50 இலட்சமாகக் கொடுத்தால், அந்தக் குளங்களை நல்ல அளவிலே சீரமைக்க முடியும் என்கிற என்னுடைய ஆலோசனையை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல கதிர் அடிக்கும் களங்கள் உள்ளாட்சித் துறையால் அமைக்கப்படும். 6300 கதிர் அடிக்கும் களங்கள் ஏற்படுத்தப்படும். அதற்கு நிதி 40.00 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். எவ்வளவு வரும் என்று சொன்னால், 60000 ரூபாய் வரும். 60000 ரூபாய்க்கு எத்தனை சதுர அடியில் நீங்கள் களம் அமைக்கப் போகிறீர்கள்? எத்தனை ஏக்கர் ஒரு கிராமத்திலே இருக்கிறது? எத்தனை ஏக்கர் நிலத்திலேயிருந்து விவசாயப் பொருட்கள் அறுவடை செய்து கொண்டுவரப்படும். அப்படிக் கொண்டு வரப்படுகிற இந்த விவசாயப் பயிர்களை இந்த 60000 ரூபாயிலே கட்டப்படுகிற கதிர் களங்களாலே நிவர்த்தி செய்ய முடியுமா, பூர்த்தி செய்ய முடியுமா என்பதை நீங்கள் ஒருகணம் எண்ணிப் பார்த்து, இதையும்கூட எண்ணிக்கையைக் குறைத்து, எண்ணிக்கையை-இன்னும் 4 ஆண்டு காலம் நீங்கள் பதவியிலே இருக்கப் போகிறீர்கள். 6000 என்பதை, 3000-மாக ஆக்கி, இந்த நிதியை நீங்கள் அதிகப்படுத்தி கொடுக்க வேண்டுமென நான் பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் இருங்கள், எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

அதைப்போல சட்டமன்ற உறுப்பினருடைய நிதியை 1.00 கோடி ரூபாயாக உயர்த்தித் தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால், ஏற்கெனவே 82.00 இலட்சம் ரூபாயைக் கொடுத்து, நீங்கள் திருப்பி 50.00 இலட்சம் ரூபாயை எடுத்துக் கொண்டீர்கள். எங்களுக்கு 50.00 இலட்சம் ரூபாய் தருகிற அளவிற்கு நீங்கள் அதைத் தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல வீடு கட்டுகிற திட்டத்தைச் சொல்லி இருக்கிறீர்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதைப்போல, ஏற்கெனவே ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையிலேகூட வலியுறுத்தியிருக்கிறோம். தமிழகத்திலே பல்வேறுவிதமான நில அமைப்புகள் இருக்கின்றன. கோயம்புத்தூரிலே ஒரு நில அமைப்பு, திருச்சியிலே ஒரு நில அமைப்பு. அறந்தாங்கியிலே ஒரு நில அமைப்பு என்று இருக்கிறது. அறந்தாங்கியிலேகூட மூன்று விதமான நில அமைப்புகள் இருக்கின்றன. இப்படி பல்வேறு விதமான நில அமைப்புகள் இருக்கிறபோது, எல்லா இடங்களிலேயும் 32000 ரூபாய்க்கு வீடு கட்ட முடியுமா என்பதை ஒருகணம் அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். என்னுடைய பகுதியிலே, கடற்கரைப் பகுதியிலே 40000 ரூபாய்க்கு மீனவர்களுக்கு வீடு கட்டித் தருகிறார்கள். அதே பகுதியிலே, 32000 ரூபாய்க்கு தரமுள்ள வீடுகளைக் கட்டித் தரமுடியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பாரதப் பிரதமர் கிராமச் சாலைகள் திட்டத்திற்குச் சென்ற ஆண்டு 151 கோடி ரூபாய் வந்ததாகவும், இந்த ஆண்டு 115 கோடி ரூபாய்தான் வருவதாகவும், உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். இந்தக் குறைவுக்கு யார் காரணம்? நீங்கள் போராடிப் பெறவில்லையா? ஏன் போராடாமல் இருந்தீர்கள்? 35 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது என்பதை (குறுக்கீடு) வாங்கித்தருகிறோம். (சிரிப்பு) 35 கோடி ரூபாய் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்திருக்கிறது. ஆண்டுதோறும் அதிகப்பட வேண்டுமேதவிர, ஆண்டுதோறும் குறைவது என்பது, நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதல்ல என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய அறந்தாங்கி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், 2 மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** உள்ளாட்சித் துறைக்கு நிதிதான் குறைந்தது என்று நினைத்தேன், நேரமும் குறைகிறதா? (சிரிப்பு) என்னுடைய அறந்தாங்கி நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் தரவேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். குடிநீர் வடிகால் வாரியம் மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்குப் போதுமான பணம் தரப்படவில்லை என்பது ஒரு மிகப் பெரிய குறை. என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்திலே குடிநீர் வடிகால் வாரிய ஒப்பந்தத்தைச் செய்தவர்களுக்கு, 11-வது மாதம் வரைக்கும்தான் பணம் வந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே, 4, 5 மாத காலத்திற்கு அவர்களுக்குப் பணம் வரவில்லை. ஆனால் அவர்கள் ஒப்பந்தப் பணிகளைச் செய்கிறார்கள். அதிகாரிகள் சொல்கிற

வார்த்தைகளை நம்பி, அதிகாரிகள் சொல்கிற உறுதிமொழிகளை நம்பி அவர்கள் வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவிலே பணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, குடிநீர் வழங்கல் துறையில் பொருட்களை சப்ளை செய்வது, சிமென்ட் தருவது, கம்பிகள் தருவது, அதைப் போல பைப் தருவது இவை எல்லாம், துறையினுடைய கட்டுப்பாட்டிலே வைத்திருந்தீர்கள். இப்பொழுது காண்ட்ராக்ட்காரர்களிடத்திலே கொடுத்துவிட்டீர்கள். நிச்சயமாக நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்வேன்; ஒரு கான்ட்ராக்ட்காரர் சம்பாதிப்பதற்காகத்தான் வருகிறார். ஆகவே, தரமுள்ள பொருட்களை அவர் உபயோகப்படுத்துவாரா? எவ்வளவுதான் மேற்பார்வைப் பணிகள் இருந்தாலும், தரமுள்ள பணிகளை அவர் செய்வாரா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏன், நீங்களே வைத்துக் கொண்டிருந்த அந்த அதிகாரத்தை ஒப்பந்தக்காரர்களிடத்திலே கொடுத்தீர்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒப்பந்தக்காரர்களிடத்திலே கொடுத்திருக்கிற அந்த அதிகாரத்தை மீண்டும் நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுக்க வேண்டும். சிமென்ட் சப்ளை செய்வது, கம்பி சப்ளை செய்வது, பைப் சப்ளை செய்வதெல்லாம் துறைக்குத் தர வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு; எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தின் மிக அத்தியாவசியமான ஒரு கோரிக்கையை இந்த நேரத்திலே...(மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**...கேட்டுக்கொண்டு முடியுங்கள்.

**திரு. ப. அரசன்:** இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டம், மிக வறட்சியான மாவட்டம் என்பதை இந்த அவை நன்றாக அறியும். அந்த மாவட்டத்திற்கு குடிநீர் தருவதற்கு மிக நல்ல சாத்தியக்கூறுகள் எல்லாம் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்திற்கு 50, 60 கிலோமீட்டரிலேதான் காவிரி நதி கரை புரண்டு ஓடுகிறது. காவிரி நதியிலேயிருந்து இப்போதுகூட எங்கள் பகுதிக்கு குடிநீர் சிறிய அளவிலே வந்துகொண்டிருக்கிறது. இப்போது ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியத்திலேயிருந்து ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அதற்கு Ramanathapuram Bulk



Water Supply என்று சொல்கிறார்கள். அந்த Ramanathapuram Bulk Water Supply எங்களுடைய மாவட்டத்திலே திருமயம் வரைக்கும் வந்து, நேராக திருப்பத்தூர் வழியாக இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சென்று விடுகிறது. நான் பணிவன்போடு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்; நிறைய நீர் காவிரியிலே கிடைக்கிறபோது, திருமயத்திலேயிருந்து அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணல்மேல்குடி பகுதிகளுக்கும் அந்தத் திட்டத்தை நீங்கள் நீட்டித்துத் தரவேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டுமென பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, குடிநீர் வழங்கல் துறையிலே பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓர் அரசினுடைய செயல்பாடுகளை எடுத்து விளம்புகின்ற துறையாக அமைந்திருக்கிறது இந்தத் துறை. ஓர் அரசுக்கு நல்ல பெயர் வரவேண்டுமென்று சொன்னால், உள்ளாட்சித் துறையினுடைய செயல்பாடுகள் சிறப்பாக இருக்குமேயானால்தான் அந்த அரசுக்கு மக்களிடத்திலே நல்ல பெயர் ஏற்படும் என்கின்ற அளவிலே, அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற துறையாக இந்தத் துறை அமைந்திருக்கிறது. இந்தத் துறையின் மூலம் பல்வேறு நலத் திட்டங்கள் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டாலும்கூட, உள்ளாட்சிகளிலே, சமுதாயத்திலே எப்படி வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்கள், கீழே உள்ளவர்கள் என்கின்ற நிலை இருக்கிறதோ அதுபோல, இந்த உள்ளாட்சி அமைப்புகளிலும் பல நலிந்த ஊராட்சிகள், தங்களுடைய அன்றாடத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு பண வசதிகள் குறைவான உள்ளாட்சிகளும் இருக்கின்றன. ஆனால், பல்வேறு ஊராட்சிகள் தாங்கள் பெற்றிருக்கின்ற நிதியைச் செலவு செய்ய முடியாத அளவிற்குக்கூட நிதியாதாரங்கள் குவிந்து கிடக்கின்ற ஊராட்சிகளும் இருக்கின்றன.

அருமைச் சகோதரர் இங்கு குறிப்பிட்டார்கள். மேற்கு வங்கத்தையே இந்த இடதுசாரி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று

சொன்னார்கள். நல்லவை எங்கு இருக்குமானாலும் அவற்றை எடுத்துக் கொள்வதற்கு நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்த உள்ளாட்சிகளைப் பொறுத்த அளவிலே, மேற்கு வங்க அரசிலே எங்களுடைய இயக்கமும்கூட பங்கு கொண்டிருக்கின்ற அரசு. அதிலே அமைச்சர் பொறுப்பை வகிக்கின்றவர்கள் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே இருக்கிறார்கள் என்கிற முறையில், மேற்கு வங்கத்திலே உள்ளாட்சி மன்றங்களுக்கு மிகப்பெரிய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நிச்சயமாக நாம் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். அங்கு ஏறக்குறைய உள்ளாட்சி மன்றங்களுக்கு நிலவரியை வசூல் செய்கின்ற, நில வரியை நிர்ணயிக்கின்ற அதிகாரத்தைக்கூட அந்த அரசு வழங்கியிருக்கிறது. அதுபோல, நில உச்ச வரம்பை நிர்ணயிக்கின்ற முறையைக்கூட அந்த உள்ளாட்சி மன்றங்கள் ஏற்றுக் கொள்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

*பிற்பகல் 12-55*

மேலும், அரசு வருவாயிலே பெரும்பகுதி 50 சதவிகிதத்திற்கு மேலாக, உள்ளாட்சி மன்றங்களுக்கு அளித்து, நலிவுற்ற உள்ளாட்சி மன்றங்களே இல்லையென்கின்ற அளவிலே, அதை நிர்ணயிக்கின்ற பொறுப்பினை அந்த அரசு வழங்கியிருக்கிறது என்று சொன்னால், அதை நாம் ஏற்றுக்கொள்வதற்கு கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை இந்த அவையிலே சொல்லிக்கொள்வதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இந்த அரசின் சார்பிலே, பல்வேறு நலத் திட்டங்கள் இன்றைக்கு செயல்படுத்திக்கொண்டிருந்தாலுங்கூட, அந்த நலத் திட்டங்கள் எல்லாம் சீராக, செம்மையாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்கின்ற அக்கறையும் நமக்கு இருக்கிறது. இங்கு குறிப்பிடும்போது, நமது மகளிர் சுகாதார வளாகங்கள் சென்ற ஆண்டு 6000-க்கு மேலாகக் கட்டப்பட்டது. இந்த ஆண்டும் 6000-க்கு மேலாகக் கட்டப்படவிருக்கிறது என்ற செய்தி இருக்கிறது. இது மிகச் சிறப்பானத் திட்டம். ஒரு வளர்ந்த நாடு என்பதை எடுத்துக்காட்டுவதற்கு இந்தத் திட்டம் முதன்மை இடத்தைப் பெறுகின்ற ஒரு திட்டம். பல்வேறு வெளிநாடுகளுக்குச் சென்று வருகின்ற நேரத்திலே எல்லாம், அங்கேயிருக்கின்ற சுகாதார வசதியைப் பார்க்கின்றபோது, நமது இந்திய நாட்டில் இன்னும் இந்த நிலை ஏற்படவில்லையே என்ற ஆதங்கம்தான்



இருக்கிறது. நம்மைக்காட்டிலும் ஜனத்தொகையிலே மிகப் பெரும்பான்மை பெற்றிருக்கிற சைனா நாட்டில்கூட, யாருமே வெளியிலே கழிப்பதற்காகச் செல்வதில்லையென்கின்ற நிலையை ஏற்படுத்தி அங்கு மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், நமது நாட்டில் இன்றைக்கு நாம் கட்டுகின்ற தொகுப்பு வீடுகளில் எல்லாம் அந்தத் திட்டம் ஆரம்பித்தக் காலத்திலேயிருந்து, நாம் அந்த வீடுகளைக் கட்டுகின்ற நேரத்தில், இதுபோல ஒரு கழிப்பிட வசதியை ஏற்படுத்தித்தான் கட்டிக் கொடுத்து இருக்கிறோம். ஆனால், எங்காவது அந்தத் தொகுப்பு வீடுகளிலே, நாம் கட்டிக்கொடுத்திருக்கின்ற அந்தக் கழிப்பறை வசதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தத் திட்டம் தொடங்கிய காலத்திலேயிருந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதை முறையாக, ஒழுங்காக நாம் பயன்படுத்தியிருப்போமேயானால், இன்றைக்கு எல்லா வீடுகளிலும் இந்த வசதியிருக்கின்ற வீடுகளாக காட்சி அளித்திருக்கும். ஆனால் அதை யாருமே செயல்படுத்துவதில்லை என்கின்ற நிலைதான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தீட்டித் தந்திருக்கின்ற இந்தத் திட்டம் மிகச் சிறப்பான திட்டம். ஆனால், கிராமப்புறங்களிலே அதை முறையாகப் பயன்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலங்களிலேகூட, இதுபோன்ற துப்புரவு வளாகங்கள், சுகாதார வளாகங்கள் கட்டிக் கொடுத்த வரலாறு உண்டு. ஆனால், அவை எல்லாம் இன்றைக்கு மாடு கட்டுகின்ற இடங்களாகவும், கால்நடைகளைக் கட்டுகின்ற இடங்களாகவும்தான் இருக்கின்றனவேதவிர, அவற்றை முறையாகச் செயல்படுத்தாத நிலை இருந்து வந்தது. ஆனால், இந்தத் திட்டத்தை இனிமேலாவது நமது அரசின் சார்பிலே முறையாகச் செயல்படுத்துவதற்குரிய நடைமுறைகளை. வகுக்க வேண்டும். சில இடங்களிலே அந்தக் கழிப்பறைகளைக் கட்டுகின்ற நேரத்திலே தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. சென்ற ஆண்டுகூட, தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்திலே பல இடங்களில் கழிப்பறைகளுக்குரிய தண்ணீர் வசதி கிடைக்கவில்லை. அதைச் சுற்றியுள்ள இடங்களிலே ஆழ்துளைக் கிணறு போடும்போது, அந்த ஆழ்துளைக் கிணறுகளிலே தண்ணீர் கிடைக்கவில்லையென்கின்ற நிலையைக்கூட கிராமப்புறங்களிலே எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனவே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற இடத்திலே நல்ல நீர் ஆதாரம் இருக்கிறதா என்று பார்த்து அதைச்

செயல்படுத்த வேண்டுமென்கின்ற நிலையை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும். நீர் ஆதாரம் அங்கு உரிய முறையிலே இருந்தால்தான், அந்த வசதியை முறையாகப் பயன்படுத்துகின்ற நிலை ஏற்படும் என்கின்ற நிலையில் நீர் ஆதாரம் உள்ள இடங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இவற்றுக்கெல்லாம் செலவழிக்கப்படுவதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் எனக்குக் கிடையாது. ஆனால், சில இடங்களிலே மாணவர்களுக்கு விடுதி கட்டுகின்ற நிலையை இந்த அரசு எடுத்திருக்கிறது. அந்த விடுதிகள் இல்லையென்கின்ற நிலையுள்ள அந்தச் சட்டமன்றத் தொகுதிகளுக்காவது அந்த நிதியை வேறு பணிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் எடுத்துக்கொள்ளலாம் என்கின்ற நிலையைக்கூட நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். சென்ற ஆண்டுகூட என்னுடைய தொகுதியிலே ஒரு விடுதி கட்டுவதற்கு இடமேயில்லை. அப்படிப்பட்ட விடுதி இல்லையென்கின்ற காரணத்தினால், அதை மாற்றித் தர வேண்டும் என்று கேட்டும்கூட, இதுவரைக்கும் அதைச் செயல்படுத்தவில்லை. அப்படி மாற்றித் தருகின்றபோது அரசு ஏற்படுத்தியிருக்கின்ற அந்த விதியின்கீழ் அந்தக் கிராம நிர்வாக அலுவலர் அல்லது மாற்று முறையிலே வேறு இடத்திலேதான் அந்த விடுதிகளைக் கட்ட வேண்டுமென்கின்ற ஒரு நிலையைப் எடுத்திருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு 18 வயது வருகின்றவரைக்கும் கட்டாயக் கல்வி என்கின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்ற அரசு, கல்விக்கூடங்கள் பல இடங்களிலே படிப்பதற்குரிய போதிய கட்டட வசதி இல்லாமல் எத்தனையோ பள்ளிகளிலே மாணவர்கள் தரையிலே, தெருவிலே, மரத்தடியிலே உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அந்த விடுதிகள் இல்லையென்கின்ற நேரத்திலே பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டலாம் என்கின்ற ஒரு நிலையைக்கூட, இந்த அரசு எடுக்க வேண்டும். மீண்டும் அவர்கள் சொல்கின்ற அந்தப் பழையத் திட்டத்திற்கே நிதியை ஒதுக்குவது என்பது முறையாக இருக்காது என்கின்ற முறையில் அந்த நிதியினைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு நீங்கள் ஒதுக்கினால், அங்கேயிருக்கின்ற பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் என்கின்ற நிலையை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-00*

பிரதமர் ஊரகச் சாலை அமைப்புத் திட்டம்தான் ஓரளவுக்கு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கடந்த ஓராண்டு காலமாக, எங்குமே கிராமப்புறங்களிலே சாலைகள் அமைக்கின்ற அளவிற்கு இல்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் எல்லாம் ஓராண்டு காலத்திலே எந்தச் சாலையும் புதிதாக அல்லது மற்ற துறைகளின் மூலமாக செயல்படுகின்ற அளவிற்கு நிதி ஆதாரம் இல்லை என்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்த பிரதமர் ஊரகச் சாலை அமைப்புத் திட்டத்திலே சென்ற ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. அதை எப்படியாவது பெற்று மீண்டும் அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்பதனை கூறிக்கொள்கிறேன்.

இந்த உள்ளாட்சித் துறையிலே பல்வேறு கோரிக்கைகளை அங்கு பணியாற்றுகின்றவர்கள் வைத்திருக்கிறார்கள். ஊராட்சிகளிலே எழுத்தராகப் பணிபுரிகிறவர்கள் ஏறக்குறைய 800 ரூபாய் சம்பளத்திலே தங்களுடைய பணியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். வளர்ந்து வருகின்ற இந்தச் சமுதாயத்திலே இந்த 800 ரூபாயில் அவர்களுடைய வாழ்க்கையை 10 நாளைக்குக்கூட ஓட்ட முடியுமா என்கின்ற நிலை இருக்கிறது. அவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல குடிநீர் ஆதாரத்திற்காக இன்றைக்கும் ஆழ்துளைக் கிணறு மூலமாகத்தான் ஒவ்வொரு கிராம மக்களுக்கும் குடிநீர் வசதி செய்துகொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அந்தக் குடிநீர் வசதியைப் பெறுகின்ற மக்களுக்குத் துணையாக ஆழ்துளைக் கிணறுகளைச் சரிசெய்கின்றவர்கள் ஏறக்குறைய ஆயிரம் பேர் தமிழக அளவிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கும் தினக்கூலி அடிப்படையிலே தங்களுடைய பணியை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது தொகுப்பூதியத்தின் மூலமாக இன்றைக்குப் பெறுகின்ற தினக்கூலியை அவர்கள் பெறுகின்ற அதே அடிப்படையில் எங்களுக்குச் சம்பளம் அதிகமாகத் தேவையில்லை. நாங்கள் இன்றைக்கு தினக்கூலி அடிப்படையிலே பெற்றுக்கொண்டிருக்கின்ற அதே தொகையைக்கூட ஒரு தொகுப்பூதியமாகக் கொடுத்து எங்களுக்கு பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து,

பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்கின்ற நிலையில் இப்பொழுது பசி வருகின்ற நேரமும் வந்து விட்டது. அமைச்சர் பதில் சொல்கின்ற நேரமும் வந்துவிட்டது. எனக்குக் கொடுத்த வாய்ப்பினை நன்றியோடு ஏற்றுக்கொண்டு, இத்துடன் முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதங்களுக்கான எனது பதிலுரையை இச்சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கிறேன்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப சீரோடும் சிறப்போடும் இந்த ஆட்சி அமைந்துள்ளது. மக்கள் பசியாலும் பட்டினியாலும் வாடக்கூடாது; மக்களுக்குச் சுகாதாரக் கேடு ஏற்படக்கூடாது; மக்களிடையே, ஜாதி மத வேறுபாடு ஏற்படக் கூடாது; ஜாதி மத வேறுபாட்டினால் மக்களிடையே பகைமை உணர்ச்சி ஏற்படக்கூடாது என்ற பொன்மொழிக்கேற்ப நாடும் ஏடும் போற்றுகின்ற நல்லாட்சியை நடத்தி வருகின்றவர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் இயக்கத்தை ஆரம்பித்து, எங்களுக்கு அரசியல் கொள்கைகளையும், தத்துவங்களையும் கற்பித்த டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திரைப்படத்தின் மூலமாகப் பாடிய பாடல் ஒன்றை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

"தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம், கல்வி
தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்,
கருத்தாகப் பலதொழில் பயிலுவோம்; உயிர்
கஞ்சிக்கு இல்லை என்ற சொல்லினைப் போக்குவோம்;



ஆளுக்கு ஒரு வீடு கட்டுவோம்."

என்று கொள்கை முழக்கம் இட்டார்கள். டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கொள்கையை நடைமுறைப்படுத்தும் விதத்தில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இன்றைக்கு 15 அம்சத் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அம்மா அவர்களின் 15 அம்ச திட்டத்தினைச் செயல்படுத்துவதே உள்ளாட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும்.

*பிற்பகல் 1-05*

கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்கள், வேலைவாய்ப்புகளைத் தேடியும், சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைக் காரணங்களுக்காகவும் நகரங்களை நோக்கிச் செல்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இதனால் நகரங்களில் மக்கள் தொகை அதிகரித்து அங்கும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே கிராமங்களில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திவிட்டால், மக்கள் நகரங்களுக்குச் செல்லும் நிலை மாறுவதோடு நகரங்களில் ஏற்படும் பிரச்சினைகளும் தீரும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கள் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு காலத்திலே சொல்லும்போது, கிராமங்கள் என்ற வார்த்தையே இருக்கக்கூடாது என்ற அளவுக்கு, பெரிய நகரம், சிறிய நகரம் என்றுதான் இருக்கவேண்டுமென்றுகூட ஒரு சில சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே தெரியப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 15 அம்சத் திட்டத்தை மனதிலே வைத்து, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றுவேன் என்ற அம்மா அவர்களின் சபதத்தை நிறைவேற்ற நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையும் அயராது பாடுபட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தியாவிலேயே முதன்முறையாக மத்திய அரசின் வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா திட்டத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2ஐ இணைத்து பெண்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில் 5 மாநகராட்சிகள் மற்றும் 102 நகராட்சிகளில் ரூ.52.50 கோடி மதிப்பீட்டில்

525 சுகாதார வளாகங்கள் அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குடிசைப் பகுதிகளை மேம்படுத்த தேசிய குடிசை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்கு ரூ.27.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். பெருநகரத் திட்டத்தின் கீழ் சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக ரூ.28.71 கோடியும், அம்பத்தூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக ரூ.4 கோடியும், சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக ஆலந்தூர் நகராட்சிக்கு ரூ.2.36 கோடியும் மதுரை மாநகராட்சிக்கு ரூ.3 கோடியும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.14 கோடியும், திருநெல்வேலி மாநகராட்சிக்கு ரூ.60 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்காக சாலைகளை குறுக்கேயும் நெடுக்கேயும் வெட்டி சாலைகளை மோசமடையச் செய்யும் சாலை வெட்டுப் பணிகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் சாலைகளை வெட்டாது, புதிய தொழில் நுட்பத்தை-Trenchless Technology-ஐப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் சாலைகள் சீராவது மட்டுமின்றி, சாலை ஓரங்களில் பதிக்கப்பட்டுள்ள குழாய்கள், மின் கம்பி வடம் போன்ற அமைப்புகளுக்கு எந்தவித சேதமும் ஏற்படாமல் பாதுகாக்க வழி உண்டாகும். போதுமான கழிப்பிட வசதியில்லாததால் சாலைகளை அசுத்தம் செய்து சுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் அவல நிலையை மாற்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அண்ணாசாலை மற்றும் பெருவழிச் சாலைகளில் சுமார் 200 சுகாதார வளாகங்கள் கட்டவேண்டுமென்று பணித்துள்ளார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

2002-2003 ஆம் ஆண்டில் அனைத்துப் பேரூராட்சிகளும் கணினி மயமாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தெருவிளக்குப் பராமரிப்பு, குடிநீர் வழங்கல், சாலைகளைச் சுத்தம் செய்தல் போன்ற பணிகளை, நல்லமுறையில் அனைத்துப் பேரூராட்சிகளிலும் செயல்படுத்தும் வகையில் அவற்றின் நிதியாதாரங்களைப் பெருக்கவும், இந்தப் பணிகளை நல்லமுறையில் செயல்படுத்தும் அமைப்புகளிடம் ஒப்படைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



பிற்பகல் 1-10

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2-3-2002 ஆம் நாளன்று, தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தமிழகத்திலுள்ள கிராமப்புற ஏழையெளிய மக்களுக்குப் பயன்படும் வகையிலான ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு நிதியாதாரம் பெற்றுத் தரும் செயற்குறிப்பில்தான், முதன்முதலில் ஒப்புதல் வழங்கி, கையொப்பம் இட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே நன்றியோடு நினைவுகூர கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தாயுள்ளம் கொண்ட, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், மக்களின் துயரைத் துடைக்கும் வகையில், கடந்த நிதியாண்டில் 5800 ஊரகக் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் திட்டத்திற்கு, மின் இறைப்பான் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், கடந்த ஆண்டில், 6865 ஊரகக் குடியிருப்புகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது கூடுதலாக 1065 குடியிருப்புகளுக்கு மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டில், 6500 ஊரகக் குடியிருப்புகளுக்கு மின் இறைப்பான் திட்டம் மூலம் குடிநீர் வசதி அளிக்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறு மின்விசைத் திட்டம், கடந்த நிதியாண்டில், 4389 ஊரகக் குடியிருப்புகளுக்குச் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளன. 10 ஆயிரம் கையிறைப்பான்களை, சிறு மின்விசைத் திட்டங்களாக மாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அவற்றில், 4 ஆயிரம் திட்டங்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்புகளில் நிறைவேற்றப்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற நிதியாண்டில், 8500 ஊரக அரசுப் பள்ளிகளுக்கும், 995 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வருகை தரும் மாணவர்க...

பொது மக்கள் மற்றும் நோயாளிகள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நிதியாண்டுத் தொடக்கத்தில், நிலுவையிலிருந்த கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 54 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் மற்றும் 63 நகரங்களுக்கான குடிநீர்த் திட்டங்கள், கடந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. நடப்பாண்டில் செயலாக்கத்தில் இருந்துவரும் 50 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பாண்டில், செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள சில சிறப்புக் குடிநீர்த் திட்டங்களை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். நீண்ட நெடுங்காலமாக கண்டு கொள்ளாமல் இருந்த, ஒரு மிகப் பெரிய திட்டமான அவிநாசி-அத்திக்கடவு திட்டத்திற்குப் (மேசையைத் தட்டும் ஒலி) புத்தாக்கம் அளிக்கும் வகையில், அவிநாசி-அத்திக்கடவு குடிநீர் செறிவுத் திட்டம், ரூபாய் 270 கோடி செலவில் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில், இத்திட்டத்தைச் செம்மையாகவும், சிறப்பாகவும் நிறைவேற்ற, இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில், தேனி மாவட்டம், தென்கரை, தாமரைக்குளம், வடுகப்பட்டி ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் தேனி மாவட்டத்திலே 67 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 85 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், சோத்துப்பாறை அணையை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ரூபாய் 105 கோடி மதிப்பீட்டில், திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல் நகராட்சி, நத்தம் நகரப் பேரூராட்சி, தாடிக்கொம்பு ஊரகப் பேரூராட்சி, வடமதுரை ஊரகப் பேரூராட்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் 131 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள 3.3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



ரூபாய் 7.47 கோடி மதிப்பீட்டில், மதுரை மாவட்டத்தில் 72 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், திருமங்கலம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** ரூ.65.60 கோடி மதிப்பீட்டில் நாகப்பட்டினம் நகராட்சி, வேளாங்கண்ணி, கீழ்வேளூர், திட்டச்சேரி ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 890 ஊரக குடியிருப்புகளில் உள்ள 7 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நாகப்பட்டினம்-வேளாங்கண்ணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை பேரவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கயத்தாறு, கழுகுமலை, எட்டயபுரம் நகரப் பேரூராட்சிகள், கோவில்பட்டி நகராட்சி மற்றும் 132 ஊரகக் குடியிருப்புகள், விருதுநகர் மாவட்டத்திலே சாத்தூர் நகராட்சி ஆகியவற்றில் உள்ள 1.43 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.30.16 கோடி மதிப்பீட்டில் கயத்தாறு-எட்டயபுரம்-சாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இராமநாதபுரம் மாவட்டத்தில் 74 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் கீழக்கரை பேரூராட்சிக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க தனியார் மூலம் 5 இடங்களில் உவர்நீரை நன்னீராக்கும் கலன்களை நிறுவி உரிமத்துடன் இயக்கி பின்னர் உரிமம் மாற்றம் செய்யும் வகையில் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. உப்பூர், முந்துவார்கொண்டான், களரி, வாலிநோக்கம், கோம்பிட-மதுரை ஆகிய இடங்களில் உவர் நீரை நன்னீராக்கும் கலன்கள் ரூ.645.64 இலட்சங்கள் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை குடிநீர்:

சென்ற ஆண்டு சென்னையில் நிலவிய குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க போர்க்கால நடவடிக்கையாக அரசு இயந்திரத்தை ஆக்கப்பூர்வமாக இயக்கி குடிநீர்த் தட்டுப்பாட்டை சமாளித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் செயல்திறனை உலக அளவில் ஒருங்கே பாராட்டியுள்ளனர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்திற்கு பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். வான் மழை பொய்ப்பினும் வறட்சியே இனி சென்னை மாநகர மக்கள் காணக்கூடாது என்ற நீண்ட தொலை நோக்குப் பார்வையுடன் பல்நோக்குத் திட்டங்களைத் தீட்டித் தந்துள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களை உலக வங்கிப் பிரதிநிதிகள், டில்லியிலே இருந்து வந்த உயர் அதிகாரிகள் மற்றும் அறிஞர் பெருமக்கள் பாராட்டினார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-1-ன் மூலம் வீராணம் ஏரியிலிருந்து 180 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை குழாய்கள் மூலமாக சென்னைக்கு கொண்டுவரும் திட்டம், சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம்-2-ன் மூலமாக ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள், நீர்த்தேக்கங்கள் அமைத்து அதன் மூலம் மழைநீரைச் சேமித்து நிலத்தடிநீரை பெருக்க வகை செய்யும் திட்டம், சென்னையை சுற்றியுள்ள போரூர் ஏரி, அம்பத்தூர் ஏரி மற்றும் இரட்டை ஏரி ஆகியவற்றை தூர் வாரி ஆழப்படுத்தி புதுப்பித்து அவற்றின் கொள்ளளவை உயர்த்தும் திட்டம், ஆகியவற்றிற்கு மாண்புமிகு இதய - தெய்வம் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையை சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிவாழ் மக்களுக்கு குடிநீர் வழங்கவும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு தட்டுப்பாடின்றி தண்ணீர் வழங்கவும் தேவையான அளவு உவர்நீர் கிடைக்கும் பல்வேறு இடங்களில் 100 எம்.எல்.டி. கொள்ளளவு கொண்ட 10 மறுசவ்வூடு நிலையங்கள் உரிமத்துடன் நிறுவப்பட்டு பின்னர் உரிமம் மாற்றம் செய்யப்படும்.

சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நீர்கொள்முதல் ஒப்பந்தங்கள் மூலம் பெருமளவில் நீரை சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் கொள்முதல் செய்யும். இவ்வாரியம்



தொழில்நுட்ப சமன்பாடுடைய நிறுவனமாக மாற்றம் பெறும்.

சென்னை நதிநீர் பாதுகாக்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் மழைநீர் கால்வாய்கள், ஆறுகள் மற்றும் அனைத்து நீர்வழித் தடங்களில் கழிவுநீர் கலக்காமல் தடுத்து நிறுத்தி நீரை மாசுபடாமல் பாதுகாப்பதே இந்த அரசின் தலையாய கொள்கையாகும். ஆந்திர மாநிலத்திலிருந்து பெறப்படும் நதிநீரை சுத்திகரிப்பதற்காக செம்பரம்பாக்கத்தில் 530 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கூடுதல் சுத்திகரிப்பு நிலையம் பிரெஞ்சு அரசாங்க நிதி உதவியுடன் கட்டப்பட உள்ளது. இத்திட்டத்திற்கென 2002-2003 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டு உள்ளது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

தற்போதுள்ள கழிவுநீர் நிலையங்களில் சுத்திகரிப்புத் திறன் நாள் ஒன்றுக்கு 268 மில்லியன் லிட்டராகும். இதை 2003 ஆம் ஆண்டிற்குள் 532 மில்லியன் லிட்டராக மேம்படுத்துவதற்காக ரூ.140 கோடி செலவிடப்படவுள்ளது. ஏழையெளிய மக்கள் குடிநீருக்காக குடங்களைத் தூக்கிக்கொண்டு தெருத் தெருவாக அலையும் இழிநிலை இனியும் தொடரக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் குடிசைவாழ் மக்களும் குடிநீர் இணைப்புப் பெறும் வகையில் திட்டம் தீட்டப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் நடுத்தர, மேல்தட்டு மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த கழிவுநீர் இணைப்பு வசதி இனி குடிசைவாழ் ஏழை மக்களுக்கும் வழங்க வகை செய்யப்படும். இவ்வாறு வழங்கப்படும் கழிவுநீர் இணைப்பிற்கான கட்டணம் பாதி அளவாகக் குறைக்கப்பட்டு, அந்தக் கட்டணமும்கூட இரண்டு தவணைகளிலே செலுத்த வகை செய்யப்படும்.

இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிலத்தடி நீர் பாதுகாப்புச் சட்டம் புதியதொரு உருவம் பெற்று நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனுள்ள தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய சட்டமாகத் திருத்தம் செய்யப்பட உள்ளது என்பதை அவையினருக்குத் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மழைநீர் சேகரிப்புத் திட்டம் ஒரு மாபெரும் மக்கள் இயக்கத் திட்டமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த நிதியாண்டில் அறிவித்த நாளிலிருந்து இதுவொரு மக்கள் இயக்கமாகவே மாறிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைப்படி மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு செல்ல இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் விளைவாக மாநிலமெங்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், பொதுத் துறை கட்டடங்கள், அரசுக் கட்டடங்கள், பள்ளிக்கூடக் கட்டடங்கள் மற்றும் தனியார் கட்டடங்கள் என சுமார் *29* இலட்சம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஊரக வளர்ச்சித் துறை, கிராமக் குளங்கள் சீரமைக்கும் திட்டம்:**

குடிநீருக்கும், விவசாயத்திற்கும், கால்நடைகளின் பயன்பாட்டிற்கும் கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் குளம், குட்டைகள், ஏரிகளையுமே நம்பி இருக்கிறார்கள். இந்தக் குளங்கள், குட்டைகள் பல ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் தூர்ந்து, மேடுதட்டி உள்ளன. இந்த அவலநிலையைப் போக்க கிராம மக்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு குளத்தை தூர்வாரி சீரமைக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) *63* கோடி ரூபாய் மதிப்பீட்டில் *6,309* குளங்கள் முதல்கட்டமாக சீரமைக்கப்படும் என்பதைப் பணிவோடு நடப்பாண்டில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மையக் கட்டடம் கட்டுதல்:**

தமிழகத்தில் ஒரு லட்சம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் கூட்டம் நடத்துவதற்கோ, பயிற்சி அளிப்பதற்கோ, தங்களின் உற்பத்திப் பொருட்களை இருப்பு வைத்து விற்பனை செய்வதற்கோ கட்டட வசதி எதுவும் தற்போது இல்லை. ஊரகப் பகுதிகளிலே ஏழ்மையைப் போக்குவதற்கு பெண்களின் பொருளாதார மேம்பாடு மிக முக்கியம் என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு கிராம ஊராட்சிக்கு ஒரு கட்டடம் என்ற விகிதத்திலே கட்டடம் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்கட்டமாக நடப்பாண்டில் ரூ.*47* கோடியே *32* இலட்சம் மதிப்பீட்டில் *6309* கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**கதிரடிக்கும் களங்கள் அமைத்தல்:**

அறுவடைக் காலங்களில் விவசாயிகளின் தானியங்களை பிரிப்பதற்கும் உலர்த்துவதற்கும் கிராமச் சாலைகளையும், நெடுஞ்சாலைகளையும் பயன்படுத்தும் அவல நிலை உள்ளது. இதனால் விவசாயிகளும் சாலைகளைப் பயன்படுத்துவோரும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.

விவசாயிகள் நலனில் அக்கறை உள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு கதிர் அடிக்கும் களம் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கட்டமாக இத்திட்டத்தின் கீழ் *39* கோடியே *50* இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் *6,309* கதிரடிக்கும் களங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *1-25*

மகளிர் சுய உதவிக் குழுக்கள் சரியான விற்பனைத் தகவல்கள் கிடைக்காத காரணத்தினால் தங்களால் தயாரிக்கப்படும் பொருட்களை இலாபகரமான விலையில் விற்க இயலாத நிலையில் உள்ளனர். இதனால் இடைத்தரகர்கள்தான் ஆதாயம் அடைகிறார்கள். இந்தக் கிராமப்புற பெண்களின் கண்ணீரைத் துடைத்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றுவதையே இலட்சியமாகக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட தகவல் சேகரிப்பு மையம் அமைக்க உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**இணையதள அடிப்படையான தகவல் தொழில் நுட்ப மையம் அமைக்க சுய உதவிக் குழுக்களுக்கு உதவுதல்:**

தகவல் தொழில் நுட்ப பயன்பாட்டில் தமிழகத்தை முன் மாதிரி மாநிலமாக உயர்த்தும் முயற்சியின் ஒரு பகுதியாக ஒவ்வோர் ஊராட்சியிலும் குறைந்தது ஒரு தகவல் மையம் அமைக்கப்படும். வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகங்களுக்கு நேரில் சென்று நலத் திட்டங்களுக்கான விண்ணப்பம் மற்றும்

[திரு. சி. துரைராஜ்] [2002 ஏப்ரல் 17

படிவங்களைப் பெறுவதற்குப் பதிலாக பொதுமக்கள் தங்கள் கிராமத்திலேயே உள்ள இம்மையங்களின் மூலமாகப் பெற முடியும். இந்த மையங்களை பெண்கள் சுய உதவிக் குழுக்கள் பராமரிப்பதன் மூலம் அவர்களது வருமானமும் பெருகும். நடப்பு ஆண்டில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,000 சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் முதல் கட்டமாக மதுரை, கடலூர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம், தேனி, திருநெல்வேலி, சேலம், நாகப்பட்டினம், ஈரோடு மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ஊரக வளர்ச்சி குறித்த இணைய தளம் அமைத்தல்:**

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த விவரங்களை பொதுமக்கள், குறிப்பாக கிராமப்புற மக்கள் தெரிந்துக்கொள்ளும் வகையில் இணைய தளம் நடப்பு ஆண்டில் உருவாக்கப்படும். நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்பட உள்ள சில புதிய திட்டங்கள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிராமப் பெண்களுக்கு கழிவறை, குளியல் அறை மற்றும் தண்ணீர் வசதியுடன் கூடிய 6,310 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு பேசிய நம்முடைய மாண்புமிகு உசிலம்பட்டி உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் சொல்லுகின்றபோது இந்தப் பெண்கள் கழிப்பறைகள் கட்டிய ஒரு சில இடங்களில் பல ஆண்டுகளுக்கு முன்பு ஆடு மாடுகள் அடைக்கப்பட்டன என்று கூடச் சொன்னார். ஆனால் எங்களுடைய அம்மா அவர்கள் இந்தக் கழிப்பறை கட்டுவதற்கு முன்பு தண்ணீர் வசதி இருந்தால் அந்த இடத்திலே கட்டுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நல்ல ஆலோசனையை வழங்கி இருக்கின்றார்கள். எனவே பெண்களுக்காகக் கட்டப்படுகின்ற ஒவ்வொரு கழிவறையும், தண்ணீர் வசதி இருந்தால்தான் அங்கே கட்டுவதற்கு அனுமதியே வழங்கப்படும் என்று துறையினுடைய அதிகாரிகள், ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூ.23 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் 3,250 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்கள் கட்டப்படும் என்பதையும் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திரா நினைவு



2002 ஏப்ரல் 17] [திரு. சி. துரைராஜ்]

குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 123 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 39 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும். இது தவிர குடியிருக்க இயலாத கச்சா வீடுகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 16 ஆயிரம் குடியிருக்க இயலாத வீடுகள் குடியிருக்கத் தகுதியான வீடுகளாக மாற்றி மேம்படுத்தப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு. அரசன் அவர்கள் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்திற்கு, கட்டுகின்ற வீட்டினுடைய மதிப்புத் தொகையைக் கூட்டவேண்டும் என்று சொன்னார். மத்திய• அரசாங்கமே நிர்ணயித்துள்ள தொகை 17 ஆயிரம் ரூபாய் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். 17 ஆயிரம் ரூபாய்க்குள்தான் தொகுப்பு வீடுகள் கட்டவேண்டும் என்று மத்திய அரசாங்கம் குறிப்பிட்டு இருக்கிறது. அதேநேரத்தில் மாநில அரசு அவர்களுடைய பங்குத் தொகையாக 75:25 என்ற அடிப்படையில் 17 ஆயிரத்திற்கு 25 சதவிகிதம் என்றால், 25 ஆயிரம் தொகை மாநில அரசும் மேலும், அந்தத் தொகையிலே கான்கிரீட் அமைப்பதற்கு கூடுதலாக 10 ஆயிரம், 12 ஆயிரம் ரூபாய் வரை மாநில அரசு பங்காக ஏற்றுக்கொண்டு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** பாரதப் பிரதமர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 22 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் 7 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்படும். பாரதப் பிரதமர் ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 115 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 844 கிலோமீட்டர் நீளத்திற்கு கிராமப்புறச் சாலைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் சுய தொழில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, ஏழை மக்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்க 30 ஆயிரம் மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

267 கோடி ரூபாய் ரொக்க ஒதுக்கீடும், இதற்கு இணையான மதிப்பீட்டில் அரிசியும். ஆக மொத்தம் 534 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்கீழ் நீர்நிலை ஆதாரங்களை மேம்படுத்துதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல், மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனைகள் அமைத்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ.82 இலட்சம் வீதம் ரூ.192.70 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்ச்சிப் பணிகளில் ஊரக வளர்ச்சித் துறை செய்த சில சாதனைகளை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். 2007 ஆம் ஆண்டிற்குள் 500-க்கும் மேல் மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து கொடுப்பது என்பது மத்திய அரசினுடைய இலக்காகும். இந்திய அளவில் 2007 ஆம் ஆண்டு அடையக்கூடிய இலக்கினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு 2004 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளேயே எட்டிவிடும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதன்முதலாக இந்த இலக்கினை எய்தும் மாநிலம் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியினையும் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்குக் கூடுதலாகத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரவேண்டுமென எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியின் பயனாக மத்திய அரசிடமிருந்து 11 கோடியே 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கீட்டினை கூடுதலாகப் பெற்றுத் தந்துள்ளார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கூடுதல் நிதியான 11 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதலாக 7333 தொகுப்பு வீடுகள் நடப்பு ஆண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களுக்குக் கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சென்ற ஆண்டு ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.117 கோடி மதிப்பீட்டில் 47,928 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.117 கோடி மதிப்பீட்டில் 9,329 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. சென்ற ஆண்டு இறுதியில் ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 17,599 மெட்ரிக் டன் அரிசியும், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 17,599 மெட்ரிக் டன் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இரண்டு திட்டங்களையும், கடந்த ஆண்டில் தமிழகத்தில் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தியதன் விளைவாகவும், ஏழை மக்களுக்கு விவசாயம் நடைபெறாத காலங்களில் போதிய மாற்று வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து கிராம மக்களின் வருவாயைப் பெருக்குவதிலும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசை அணுகி, கூடுதலாக ரூ.25 கோடி ஒதுக்கீடு பெற்றுத் தந்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசு தமிழகத்திற்கு கூடுதல் அரிசியை ஒதுக்கீடு செய்யவும் இசைந்துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போது நடைமுறையில் இருந்துவரும் ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டமும், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே திட்டமாக சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் என்கிற புதிய பெயரில் 1-4-2002 ஆம் தேதியிலிருந்து செயல்படுகிறது என்கிற விவரத்தினை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

இராமநாதபுரம், தருமபுரி, புதுக்கோட்டை, மதுரை, பெரம்பலூர், சிவகங்கை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சிறு பாசனக் குளங்களைச் சீரமைக்க ரூபாய் 18 கோடியே 47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டாவை அடமானம் வைக்க அனுமதி அளித்தும்,

முத்திரைத்தாள் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து அவர்களுக்கு விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களின் சிரமங்களை உணர்ந்து இந்த அரசு செயல்படுகிறது என்பதற்கு இது ஓர் சிறந்த உதாரணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே விளக்கம் அளிக்க விருப்பம் இருந்தாலும், காலத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்த வெட்டுப் பிரேரணைகள் சிலவற்றுக்கு மட்டும் பதில் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர், ஐயா, வினாயகம் அவர்கள் நேற்றைக்குப் பேசுகிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாயகமூர்த்தி.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** திரு. வினாயகமூர்த்தி அவர்கள் நேற்றைக்குப் பேசுகிறபோது, சென்னை மாநகராட்சியினுடைய மேயர் பொறுப்பினைப் பற்றிப் பேசினார்கள். நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தல் விதிமுறைப்படி, மேயர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று இருக்கிறதே தவிர, அதிலே சுழற்சி முறை என்று இல்லை. அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோதுகூட, நீங்களும் அதற்கு பதில் அளித்துப் பேசினீர்கள். நம்முடைய சென்னை மாநகராட்சியின் மேயரைப் பொறுத்தவரையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விதிமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, சுழற்சி முறையைப் பயன்படுத்த முடியாது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று பல்வேறு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளில் அவர்கள் நல்ல அறிவுரைகளையெல்லாம் தெரிவித்ததை வைத்து இந்த அரசு வரக்கூடிய காலங்களில் அந்த முறைகளைப் பின்பற்றுவதற்கும் நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராமப்புறங்களில் குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்த, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்துதல், தொகுப்பு வீடுகள், சாலைகள், சிறு பாலங்கள் அமைத்தல், சுகாதார வசதி, தெருவிளக்கு அமைத்தல்



மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் சிலவற்றைப் பிரித்தல் அல்லது சேர்த்தல் ஆகிய பல்வேறு கருத்துகளையெல்லாம் உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே வழங்கியதையெல்லாம் நினைவில் வைத்து, அவற்றுக்கெல்லாம் தனித் தனியே பதில் அளிக்க இயலாத சூழ்நிலை இருந்தாலும், அந்தக் கருத்துகளெல்லாம் ஒட்டுமொத்தமாக பொதுவான கருத்துகள், அவற்றையெல்லாம் வரக்கூடிய காலங்களில் நிச்சயமாக நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு முன்வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி. நீங்கள் ஒவ்வொருவராகக் கேளுங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தருமபுரி மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், அதைப் போலவே வேலூர் மாவட்டம் முழுவதும் பயனடையக்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும் என்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் சொல்லப்படவில்லை, அமைச்சர் அவர்களும் அறிவிப்பார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். அந்த மாவட்ட மக்களுக்கு அது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது. மீண்டும் மறு பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது 1008 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு நிதி வேண்டுமென்று எழுதி கேட்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று விரைவிலே அந்த நிதியைப் பெற்றவுடன் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வரும் என்பதை இந்த நேரத்திலே பதிலாகச் சொல்லிக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூரில் புதிய பஸ் ஸ்டாண்ட் அமைப்பதற்காக ஏற்கெனவே அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான இடமும் தேர்வு செய்யப்பட்டு அது அப்படியே நிலுவையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக வேலூரில்..

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனித்தனிப் பிரச்சினைகள். அதையெல்லாம் தனியாகக் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. வைதியலிங்கம், என்ன? சொல்லுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது சுட்டிக்காட்டினேன். புறநகரிலே நிலத்தடி நீரைப் பயன்படுத்த முடியாமல் இருக்கிற பம்மல், பொழிச்சலூர், அனகாபுத்தூர், கௌல் பஜார், அதைப்போல உள்ளகரம், புழுதிவாக்கம் பகுதிகளுக்கு ஏற்கெனவே அரசு அனுமதித்து கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் வருவதற்குப் பணிகள் முடிவடைந்த நிலையில் இருக்கின்றன. அது அளிக்கப்படுமா என்று நான் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏதாவது பதில் வைத்திருக்கிறார்களா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை சிந்திக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 33 — நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி எஸ். மகேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை. திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கை எண் 33-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,62,86,29,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.9,24,25,16,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40—ஊரக வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை. திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப் படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. எஸ்.ஏ.எம். உசேன். இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஏ.எம். உசேன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறபெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறபெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை. திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறபெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை. திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

**'ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 40-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,05,27,90,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.38,00,71,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.**

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-04-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

113. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய தொகைகளை வசூலித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 24-10-2000 ஆம் நாளிட்ட 277 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

114. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பொதுச் சாலைகளை ஒட்டியோ அல்லது பொதுச் சாலைகளின் உள்ளோ போக்குவரத்துக்கு இடையூறாக அமைந்துள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 29-11-2000 ஆம் நாளிட்ட 311 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

115. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ரயத்துவாரி நிலங்களில் உள்ள புறம்போக்குகளை பயன்படுத்துவதை கட்டுப்படுத்துதல் மற்றும் வரையறை செய்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 6-12-2000 ஆம் நாளிட்ட 317 ஆம்



எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

116. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (சந்தைகளை திறத்தல் மற்றும் பராமரித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 4-1-2001 ஆம் நாளிட்ட 3 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

117. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பணியாளர்களின் நடத்தை) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 15-2-2001 ஆம் நாளிட்ட 51 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

118. நியாய விலைக் கடைகளை சில நிபந்தனைகளுக்குட்பட்டு பொது விநியோக முறையின்கீழ் ஏற்று நடத்தும் பொறுப்பினை கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 22-2-2001 ஆம் நாளிட்ட 57 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

119. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகள் (தலைவரின் அலுவலகப் பொறுப்பினை மாற்றம் செய்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 12-3-2001 ஆம் நாளிட்ட 65 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

120. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (சொத்து உரிமை மாற்றத்தின் மீதான தீர்வை) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 20-3-2001 ஆம் நாளிட்ட 77 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2002 ஏப்ரல் 17

*121. 2001* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பொது சாலைகளில் அல்லது கிராம ஊராட்சியிடம் வந்தடைகிற அல்லது அதற்கு சொந்தமாக வேறு ஏதேனும் சொத்தில் அமைந்துள்ள மரங்களுக்கான உரிமை கோரிக்கைகளைத் தீர்மானித்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் *28-3-2001* ஆம் நாளிட்ட *108* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *262(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*122. 2000* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (வசூலிப்பாளர் அல்லது ஆய்வாளரின் அவசர கால அதிகாரங்களைக் கட்டுப்படுத்துதல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் *31-5-2001* ஆம் நாளிட்ட *148* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *262(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*123. 2000-2001* ஆம் ஆண்டிற்கான கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *165(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் ஆங்கிலம்)

*124. 2000-2001* ஆம் ஆண்டிற்கான நாகப்பட்டினம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *165(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் ஆங்கிலம்)

*125. 2000-2001* ஆம் ஆண்டிற்கான கடலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [*1994* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *21/1994*) *165(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*121.* "தமிழ்நாட்டில் மழைநீர் சேகரிப்பு" என்ற புத்தகம். (தமிழ்)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224492
சென்னை-600 008

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.